# அத்தியாயம் 8

# நிதியியல்துறை அபிவிருத்திகளும் முறைமை உறுதித்தன்மையும்







## 8.1 பொதுநோக்கு

நிதியியல் முறைமை, உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் தோற்றம் பெற்று வரும் உலகப் பொருளாதார வீழ்ச்சி, உயர்ந்த உள்நாட்டு வட்டி வீதங்கள் மற்றும் சில அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரம் முறிவடைந்தமையின் தாக்கம் ஆகிய சவால்மிக்க சூழலில் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கொண்டிருந்தது. பணவீக்க அழுத்தங்களைக் குறைப்பதற்குப் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கைக்கு இணங்கிச் செல்லும் வகையில் இவ்வாண்டில் நிதியியற் பணிகள் கைத்தொழில் கூடியளவு மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்து பொருளாதாரச் செயற்பாட்டுக்குத் தொடர்ந்து உதவியது. பொதுவாக, நிதியியல் நிறுவனங்கள் அதிகரித்த ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையால் உதவப்பட்டு நீடித்து நிலைத்திருக்கும் இலாபகரத்தன்மை, அதிகரித்த மூலதனமயமாக்கம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்திலான மேம்பாடுகளுடன் அவற்றின் ஆற்றலைப் பேணின. வங்கித்தொழில் துறைக்கான 2008இற்கான நிதியியல் குறிகாட்டிகள் இலாபகரத்தன்மை பேணப்பட்டதைக் காட்டிய வேளையில் கடன் வழங்கல் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைக்கு பதிலிறுக்கும் வகையில் மிதமடைந்துள்ளது. வங்கித்தொழில்துறையின் மூலதன போதுமாந்தன்மை விகிதங்கள் ஆகக் குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களை விட கூடியளவில் உயர்ந்து காணப்பட்டன. வங்கித்தொழில்துறையின் திரவத்தன்மை நிலைமை வசதியான நிலையில் இருக்கையில் செயற்படாக் கடன்களின் விகிதம் சிறிதளவில் உயர்வடைந்தது. மத்திய வங்கி, சிலிங்கோ குழுமத்துடன் இணைந்த கடனட்டைக் கம்பனி முறிவடைந்ததன் காரணமாக திரவத்தன்மைப் பிரச்சனைகளை அனுபவித்த வர்த்தக வங்கியினை மீட்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு தீர்க்கமான முடிவை எடுத்தது. உயர் நிதியிடல் செலவுகள் காரணமாக நிதி மற்றும் குத்தகைக்குவிடல் கம்பனிதுறையின் வருவாய்கள் தடைப்பட்ட போதிலும் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மை மூலதன நிலைமைகளால் பலப்படுத்தப்பட்டுள்ளது. 2008இன் இறுதி இரண்டு மாதங்களில் சில ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதிக் கம்பனிகள் அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் சில முறிவடைந்தமையின் விளைவாக உயர் வைப்பு மீளப் பெறுகைகளையும் திரவத்தன்மை அழுத்தங்களையும் அனுபவித்தன.

இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நிதி மற்றும் குத்தகைக்கு விடல் கம்பனிகளுக்காக சிறப்பு உதவிப் பொதியொன்று அரசாலும் மத்திய வங்கியாலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. காப்புறுதித்துறை அதன் கடன்தீர் ஆற்றல் விகிதங்களையும் திரவத்தன்மை விகிதங்களையும் பேணிய வேளையில் அவர்களது

வருவாய்கள் மிதமடைந்தன. அண்மைய ஆண்டுகளில் கட்டியெழுப்பப்பட்ட பலமான நிதியியல் நிலைமைகள் அது போல் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளைத் தீர்ப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்துபவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல முன்மதியுடைய கொள்கைகள் என்பன வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்கள் இரண்டிலிமிருந்து எழும் இடர்நேர்வின் கூடியளவு உயர்ந்த மட்டத்தைக் கையாள்வதற்கு நிறுவனங்களை இயலச் செய்துள்ளன.

**பன்னாட்டு நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்து உலகளாவிய கொடுகடன் சந்தைகளிலான திரவத்தன்மையை கடுமையாக இறுக்கியதுடன் உலகப் பொருளாதார வளர்ச்சியினை இறக்கத்திற்கு இட்டுச் சென்றது.** இந்த நெருக்கடியானது ஐக்கிய அமெரிக்காவின் துணை முதன்மை ஈட்டுச்சந்தைக்கு அப்பால், முதன்மை உண்மைச் சொத்து, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுள்ள நுகர்வோர் கொடுகடன் மற்றும் ஏனைய கம்பனிக் கொடுகடன் சந்தைகளுக்கும் பரவிச் சென்றதுடன் 2008இல் உலகளாவிய நிதியியற் சந்தைகளிலான குழப்பநிலை மோசமடைந்தது. இந் நெருக்கடி அசாதாரண கொடுகடன் வளர்ச்சி மற்றும் குறைந்த வட்டி வீதங்களையுடைய நீண்ட காலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் நிதியியல் முறைமையிலான இணைவு கண்டிப்பில்லாத கொடுகடன் நியமங்களுக்கு இட்டுச் சென்ற உயர் திரவத்தன்மை மற்றும் குறைவான தளம்பல், இடர்நேர்வு முகாமைத்துவத்திலான குறைபாடுகள் மற்றும் போதுமானதற்ற ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் என்பனற்றிலான வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். சிக்கலான அமைப்பைக் கொண்ட பிணையங்கள் மீதான அதிகரித்துச் செல்லும் இழப்புக்கள் நிதியியல் நிறுவனங்களின் மூலதன தாங்கிருப்புக்களை இல்லாமற் செய்து முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் பல பாரிய நிதியியல் நிறுவனங்கள் முறிவடைவதற்கு அல்லது முறிவடையும் நிலைக்கு வருவதற்குக் காரணமாக இருந்தன. இது இணைத்தரப்பினர் கொடுகடன் இடர்நேர்வு தயக்கத்தில் கூர்மையான அதிகரிப்பையும் ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பாவிலுள்ள பணச் சந்தைகளில் கட்டுப்படுத்தல்களையும் தோற்றுவித்தது. செத்தெம்பரிலும் ஒத்தோபர் முற்பகுதியிலும் நம்பகத்தன்மை நெருக்கடியான மட்டங்களுக்குக் குறைவடைந்து இந் நிதியியல் முறைமைகளை முறைமை செயலிழக்குமளவுக்கு கொண்டு வந்தது. நிதியியல் நெருக்கடி பொருளாதார வாய்ப்புக்களில் கீழ் நோக்கிய ஊசலாட்டத்தை விளைவித்திருக்கையில் உலகம் முழுவதிலுமுள்ள மூலதன சந்தைகளும் கடனாளிகளாகின. முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலுள்ள அரசுகள் மற்றும் மத்திய வங்கிகள் நிதியியற் சந்தைகளில் நம்பகத்தன்மையை உறுதியாக வைத்திருத்தல் மற்றும் மீள ஏற்படுத்தல், பாதிப்படைந்த நிதியியல் நிறுவனங்களை மீள அமைத்தல், உண்மைப் பொருளாதாரத்தில் நிதியியல் நெருக்கடியின் தாக்கத்தைக் குறைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு பல எண்ணிக்கையான விசேடமான வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பதிலிறுத்தன. இவ் வழிமுறைகள் பண மற்றும் ஏனைய கொடுகடன் சந்தைகளுக்கு திரவத்தன்மையை உட்செலுத்துதல், கொள்கை வட்டி வீதங்களிலான குறைப்பு, வைப்புக்கள் மற்றும் வங்கிப் படுகடன் மீதான உத்தரவாதங்கள், மீள மூலதனமயமாக்கம், பிரச்சனைக்குரிய சொத்துக்களையும் பங்குகளையும் கொள்வனவு செய்தல், வங்கிகளைத் தேசியமயமாக்கல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. கொள்கை வீதங்கள் பணச் சந்தைகளிலான நிபந்தனைகளை ஓரளவிற்குத் தணித்த போதிலும் இடர்நேர்வு உயர்வாகவும் உலகளாவிய கொடுகடன் சந்தைகளிலான திரவத்தன்மை தொடர்ந்து இறுக்கமாகவும் காணப்பட்டது. தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கொடுகடன் கிடைப்பனவு மற்றும் அதிகரித்த நிதியிடற் செலவுகள், மூலதன வெளிப்பாய்ச்சல்கள், சொத்துச் சந்தைகளிலான வீழ்ச்சிகள், நாணயச் சந்தைகள் மீதான சிரமங்கள் என்பவற்றை மட்டுப்படுத்திய உயர் இடர்நேர்வு தயக்கம் மற்றும் பன்னாட்டு நிதியியற் சந்தைகளிலான இறுக்கமான திரவத்தன்மை நிபந்தனைகளால் வேறுபட்ட அளவுகளில் பாதிப்புக்குள்ளாகின. முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் மந்த நிலைக்கு நகர்வதாலும் தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் மெதுவடைவை அனுபவித்து வருவதாலும் உலகளாவிய நிதியியல் அதிர்வு உலக வர்த்தகத்திலும் வெளியீட்டிலும் கடுமையான வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது.

**உள்நாட்டு வங்கிகள் ஐக்கிய அமெரிக்க ஈட்டுடன் இணைந்த பிணையங்களுக்கோ அல்லது முறிவடைந்த நிதியியல் நிறுவனங்களுக்கோ நேரடி வெளிப்படுத்துகையைக் கொண்டிராததால் இலங்கையின் நிதியியல் நிறுவனங்கள் மீதான உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தாக்கம் 2008இல் மட்டுப்படுத்தப்பட்டது.** மூலதன கணக்கைப் பகுதியளவில் மூடியமை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பு நிதியியல் நிறுவனங்களை உலகளாவிய நிதியியல் குழப்பநிலையின் நேரடிக் தாக்கத்திலிருந்து பெருமளவிற்குப் பாதுகாத்துள்ளது. இருந்த போதிலும், ஏற்றுமதித்துறை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திலான வியாபார மந்தத்தின் எதிர்மறைத் தாக்கம் வங்கிகளின் செயற்படாக் கடன்களிலான அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் மீள் எழுச்சியையும் பலப்படுத்துவதற்கு கடந்த சில ஆண்டுகளில் முன்மதியுடைய பல வழிமுறைகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இவை ஆகக் குறைந்த மூலதனத்தை அதிகரித்தல், பொதுவான ஏற்பாட்டுத் தேவைப்பாடுகள், கட்டாய கம்பனி ஆளுகைத் தேவைப்பாடுகள், திருத்தியமைக்கப்பட்ட கடன் வகைப்படுத்தல் மற்றும் விசேட ஏற்பாட்டுத் தேவைப்பாடுகள், திருத்தியமைக்கப்பட்ட தனியான கடன்பாட்டாளர் எல்லைகள், ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்துடன், 2008 சனவரியிலிருந்து சாதாரண அணுகு முறைமைகளின் கீழ் கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வை உள்ளடக்கும் பாசல் II மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்புக்கு வங்கிகள் நகர்ந்தன. சில வகைகளிலான மூலதனத் தேவைப்பாட்டிற்கான அதிகரிப்புக்களுடன் ஏனைய நிதியியல் நிறுவனங்களை ஆளுகைப்படுத்தும் ஒழுங்கமைப்பு மற்றும் முன்மதியுடைய கட்டமைப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**இலங்கையிலுள்ள வங்கிகள் பாரிய இடர்ப்பாடுகளை எதிர் நோக்காத போதும் உள்நாட்டு நிதியியற் சந்தைகள் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தாக்கங்களை அனுபவித்தன.** வரையறைகளுக்கு உட்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அண்மையில் திறந்து விடப்பட்ட அரச பிணையங்கள் சந்தை இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் மூலதனப் பாய்ச்சல்களின் கணிசமான பின்னடைவினால் பாதிப்புக்குள்ளானது. தொகை

## சிறப்புக்குறிப்பு 9

## வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்

விலை உறுதித்தன்மையை போலல்லாது நிதியியல் முறைமையின் உறுதிப்பாடானது அதனை அளவிடுவதற்கு நிறுவப்பட்ட கூட்டு குறிகாட்டி ஒன்றை கொண்டிருக்கவில்லை. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை கணிப்பிடுவதற்கு நிதியியல் முறைமையின் செயற்றிறன் மற்றும் தாக்க சோதனைக் குறிகாட்டிகளை உள்ளடக்குகின்ற பல தரப்பட்ட நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக் குறிகாட்டிகள் நிதியியல் உறுதிப்பாட்டை ஒரு முறைமை வடிவிலான புதுமைத் தோற்றமாக அமைத்துக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றமையால் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சந்தைகளை மாத்திரமல்லாது உண்மை, கம்பனிகள், வீட்டுடமையாளர்கள் மற்றும் அரச துறைகளையும் நிதியியல் நிறுவனங்களின் பிரதான கடன்பெறுநர்களாக கருதுகின்றன. பன்னாட்டு நாணய நிதியமைப்பினால் முன்மொழியப்பட்ட நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகள் ஒட்டுமொத்த நிதியியல் முறைமைகளின் செயற்றிறன்மிக்க பரந்த குறிகாட்டிகளை வழங்குகின்ற குறிகாட்டிகளின் தொகுதியொன்றாக இருக்கிறது. இந் நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகள் இரண்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவையான வங்கித்துறையுடன் தொடர்புடைய குறிகாட்டிகளின் மையத்தொகுதி (12 குறிகாட்டிகள்), வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களையும் நிதியியல் அல்லாத கூட்டுத்தாபனங்களையும் நிதியியல் சந்தைகள் மற்றும் சொத்து சந்தைகளையும் மற்றும் வீட்டுடமையாளர்களையும் உள்ளடக்குகின்ற ஊக்குவிப்பு குறிகாட்டிகளின் தொகுதியும் ஆகும் (27 குறிகாட்டிகள்). வங்கித்துறை தொடர்பான நிதியியல் செயற்றிறனுடன் குறிகாட்டியினுடைய அடிப்படை தொகுதியானது இந் நிறுவனங்களின் செயற்றிறனுடன் தொடர்புபட்ட வங்கி வர்த்தகத்தின் பிரதான பரப்பை உள்ளடக்குவதோடு கமல்ஸ் (CAMELS) செயல்முறைக்கு இசைவானதாகவும் காணப்படுகிறது. C = மூலதனப் போதுமாந்தன்மை, A = சொத்துத்தரம், M = முகாமைத்துவ செயற்றிறன், E = உழைப்பு, L = திரவத்தன்மை, S = சந்தை இடர்நேர்விற்கான உணர்திறன்.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் மட்டத்தை கணிப்பீடு செய்வதற்காக தனியொரு குறிகாட்டியை நிறுவுவதற்கு பல மத்திய வங்கிகள் முயற்சித்திருக்கின்றன. நிதியியல் முறைமையின் சிக்கல் தன்மையின் காரணத்தாலும், நிதியியல்

**அட்டவணை சி.கு 9.1**
**நிதியியல் உறுதிப்பாட்டு/ஆற்றல் சுட்டெண்களின் வகைகள்**

| நாடு மற்றும் நிறுவனம் | சுட்டெண் | | பகுதிக் குறிகாட்டிகள்/ மாறிகள் |
|---|---|---|---|
| செக்கோசிலா வாக்கியா தேசிய வங்கி | வங்கியியல் உறுதிப்பாட்டுச் சுட்டெண் | மூலதன போதுமாந்தன்மை | மூலதன போதுமாந்தன்மை (%) |
| | | சொத்துத்தரம் | செயற்படாக் கடன்கள் / மொத்தக் கடன்கள் (%) |
| | | இலாபகரத்தன்மை | சொத்து மீதான வருவாய் (%) |
| | | | பங்கு மூலதனம் மீதான வருவாய் (%) |
| | | திரவத்தன்மை | உடனடி திரவச் சொத்துக்கள்/ சொத்துக்கள் (%) |
| | | | உடனடி திரவச் சொத்துக்கள்/ வாடிக்கையாளர் வைப்புக்கள் (%) |
| | | வட்டி வீத இடர்நேர்வு | மூன்று மாதத்திற்குரிய திரள் தேறிய ஐந்தொகை நிலை/ சொத்துக்கள் (%) |
| | | வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு | வெளிநாட்டுச் செலாவணியின் மொத்த திறந்த நிலையின் உண்மைப் பெறுமதி/ அடுக்கு 1 மூலதனம் (%) |
| | | | வெளிநாட்டுச் செலாவணியின் திறந்த ஐந்தொகை நிலையின் உண்மைப் பெறுமதி/ அடுக்கு 1 மூலதனம் (%) |
| துருக்கி மத்திய வங்கி | நிதியியல் பலச் சுட்டெண் | மூலதன போதுமாந்தன்மை | (பங்கு மூலதனம் - நிலையான சொத்துக்கள்)/ மொத்தச் சொத்துக்கள் |
| | | | மூலதனப்போதுமாந்தன்மை விகிதம் |
| | | சொத்துத்தரம் | மொத்த செயற்படாக் கடன்கள்/ மொத்த கடன்கள் |
| | | | தேறிய செயற்படாக் கடன்கள்/ பங்குடமையாளர்களின் பங்கு மூலதனம் |
| | | | நிலையான சொத்துக்கள்/ மொத்தச் சொத்துக்கள் |
| | | இலாபத்தன்மை | தேறிய இலாபம்/ மொத்தச் சொத்துக்கள் |
| | | | தேறிய இலாபம்/ பங்குடமையாளர்களின் பங்கு மூலதனம் |
| | | திரவத்தன்மை | திரவச் சொத்துக்கள்/ மொத்தச் சொத்துக்கள் |
| | | வட்டி வீத இடர்நேர்வு | 1 மாதம் வரைக்குமான முதிர்வுடனான வட்டி உணர்திறன் சொத்துக்கள் இடைவெளி/ பங்கு மூலதனம் |
| | | | 1 மாதம் வரைக்குமான முதிர்வுடனான வட்டி உணர்திறன் வெளிநாட்டுச் சொத்துக்கள் இடைவெளி/ பங்கு மூலதனம் |
| | | வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு | ஐந்தொகையில் வெளிநாட்டுச் செலாவணி நிலை/ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் |
| | | | வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய பொது நிலை/ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் |

| நாடு மற்றும் நிறுவனம் | சுட்டெண் | பகுதிக் குறிகாட்டிகள்/ மாறிகள் | |
|---|---|---|---|
| பாக்கித்தான் அரச வங்கி | நிதியியல் ஆற்றல் சுட்டெண் | மூலதன போதுமாந்தன்மை | இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான மூலதன விகிதம் |
| | | | மூலதனத்திற்கான தேறிய செயற்படாக் கடன் விகிதம் |
| | | சொத்துத்தரம் | முற்பணங்களுக்கான செயற்படாக் கடன் விகிதம் |
| | | | தேறிய முற்பணங்களுக்கான தேறிய செயற்படாக் கடன் விகிதம் |
| | | | செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகள் விகிதம் |
| | | இலாபகரத்தன்மை | சொத்துக்கள் மீதான வருவாய் |
| | | | பங்கு மூலதனம் மீதான வருவாய் |
| | | திரவத்தன்மை | மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்கள் |
| | | | வைப்புக்களுக்கான கடன்கள் விகிதம் |
| சுவிஸ் தேசிய வங்கி | தாக்கச் சுட்டெண் | வங்கி ஐந்தொகைகள் மற்றும் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட குறிகாட்டிகள் | இலாபகரத்தன்மை, மூலதனம், சொத்துத்தரம் மற்றும் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை என்பவற்றின் மாற்றங்கள் |
| | | சந்தைக் குறிகாட்டிகள் | வங்கிப் பங்குகள் மற்றும் முறிகளின் விலை மாற்றங்கள் |
| | | ஏனைய குறிகாட்டிகள் | வங்கிகளுக்கிடையிலான மேலதிக மேற்பார்வைத் தகவல்கள் |
| நெதர்லாந்து மத்திய வங்கி | நிதியியல் உறுதிப்பாட்டு நிபந்தனைகள் சுட்டி | நாணய நிபந்தனை | வட்டி வீதம், பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம், உண்மைச் |
| | | சுட்டெண் | சொத்துக்கள் மற்றும் பங்கு விலைகள் |
| | | நிதியியல் நிறுவனங்களின் கடன் தீராற்றல் | மூலதன விகிதங்கள் |
| | | பங்குச் சுட்டெண்ணின் தளம்பல் | நிதியியல் நிறுவனங்களின் பங்கு விலைகள் |
| கனடா வங்கி | நிதியியல் தாக்கச் சுட்டெண் | வங்கித்துறை | வங்கி இலாபங்கள், கொடுகடன் வளர்ச்சி, கடன் இழப்புக்கள் மற்றும் வங்கியின் பங்கு விலைகள் |
| | | வெளிநாட்டுச் செலாவணி சந்தை | நாணய மாற்று வீத அமைப்பு வகைகள் |
| | | படுகடன் சந்தைகள் | இடர்நேர்வு பரம்பல்கள் - இடர்நேர்வு மற்றும் இடர்நேர்வற்ற முறிகளின் விளைவுப் பரம்பல் |
| | | | திரவத்தன்மை அளவீடு - புரள்வு விகிதங்கள் மற்றும் விலைக்கோரல் பரம்பல்கள் |
| | | பங்கு மூலதனச் சந்தைகள் | பங்குச் சந்தை சுட்டெண்களிலான மாற்றங்கள் அல்லது சந்தை மூலதனவாக்கம் |

நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தை பங்குபற்றுநர்களுக்கும் மற்றும் நிதி தொடர்பில்லாத துறைக்கும் இடையிலான தொடர்புகளின் பெரும் எண்ணிக்கை காரணமாகவும் இது மிகவும் கடினமான செயற்பாடாக இருக்கிறது. நிதியியல் உறுதிப்பாடு தொடர்பாக நிதியியல் முறைமையின் பிரதான அங்கமாக இருக்கின்ற வங்கித்தொழில்துறைக்கான கூட்டு உறுதிப்பாட்டு குறிகாட்டியை அமைப்பதில் பல்வேறு முயற்சியாளர்களும் கவனம் செலுத்துகின்றனர். உதாரணமாக செக் தேசிய வங்கி கமல்ஸ் (CAMELS) செயல்முறையை அடிப்படையாகக் கொண்டு வங்கி நிதியியல் செயற்றிறனுடைய பகுதிக் குறிகாட்டிகளின் நிறையிடப்பட்ட சராசரியைப் பாவித்து வங்கித்துறையின் உறுதிப்பாட்டினுடைய ஒரு கூட்டு குறிகாட்டியாக இருக்கின்ற ஒரு எளிய வங்கி உறுதிப்பாட்டு சுட்டியை கட்டமைப்பு செய்திருக்கிறது. தெரிவு செய்யப்பட்ட மத்திய வங்கிகளினால் தொகுக்கப்பட்ட உறுதிப்பாட்டு/ ஆற்றல் குறிகாட்டிகளின் வகைகளை அட்டவணை சி.கு 9.1 காட்டுகின்றது.

### இலங்கைக்கான வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்

செக் குடியரசு, துருக்கி மற்றும் பாகித்தான் மத்திய வங்கிகளினால் எடுக்கப்பட்டது போன்ற ஒரு அணுகுமுறையைப் பாவித்து இலங்கை மத்திய வங்கி பரீட்சார்த்த அடிப்படையில் ஒரு எளிய கூட்டு வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்ணை அமைத்திருக்கிறது. பட்டியலிடப்பட்ட வங்கிகளின் மட்டுப்படுத்தப்பட்ட தொகை, மிகக் குறைந்த தொகையான பட்டியலிடப்பட்ட வங்கிப் பிணையங்கள் மற்றும் ஒப்பீட்டளவில் இலங்கையிலுள்ள உறுதியற்ற மற்றும் அபிவிருத்தியடையாத முதலீட்டு சந்தையின் காரணமாக நிதியியல் சந்தை குறிகாட்டிகள் உள்ளடக்கப்படவில்லை.

வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்ணுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பகுதித் தனிக் குறிகாட்டிகளானவை மிகச் சிறு வேறுபாடுகளுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினுடைய வங்கித்துறை குறிகாட்டிகளின் மையத்தொகுதியைப் போன்றதாக இருக்கிறது. மூலதனப் போதுமாந்தன்மையும் இலாப மீட்டும் தன்மையும் ஒரு வங்கியானது அதற்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளுக்கெதிராக அவற்றால் பயன்படுத்தக்கூடிய தாங்கு சக்தியை குறிப்பதோடு ஒரு நியாயமான இழப்பு மட்டத்தை உள்வாங்குவதற்காக அதனுடைய திறனின் அளவீடாகவும் இருக்கிறது. சொத்துத்தர குறிகாட்டிகள் வங்கிக் கடன் சொத்துப்பட்டியலுடன் இணைந்த கடன் இடர்நேர்வை வெளிக்காட்டுகின்றன. திரவத்தன்மை குறிகாட்டிகள்

**அட்டவணை சி.கு 9.2**
**வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்ணின் பண்புகள்**

| பகுதி குறிகாட்டிகள் | மாறிகள் | தாக்கம் | சீராக்கம் | நிறை |
|---|---|---|---|---|
| மூலதன போதுமாந்தன்மை | இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| | இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான மூலதனத் தளம் | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| சொத்துத்தரம் | மொத்தக் கடன்களுக்கு மொத்த செயற்படாக் கடன்கள் | பாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| | மொத்த கடன்களிற்கு ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | பாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| வருவாய்கள்/ இலாபகரததன்மை | சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| | பங்கு மூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பிந்திய) | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| திரவத்தன்மை | மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்கள் | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| | நியதித் திரவச் சொத்துக்களின் விகிதம் | சாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.12 |
| வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு | மூலதன நிதியங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய திறந்த நிலை | பாதகமானது | சமமாக்கப்பட்ட பெறுமானம் | 0.05 |

நிதியிடலினுடைய சந்தை மூலவளங்களிற்கான அணுகு வழிகளில் இழப்பு அல்லது பொதுமக்களின் பெருந்தொகை வைப்புக்களை மீளெடுத்தல் போன்ற நிகழக்கூடிய திரவத்தன்மை பிரச்சனைகளிற்கு எதிரான வங்கியினுடைய ஒதுக்கீட்டை அளவிடுகின்றன. வட்டி வீத இடர்நேர்வானது சொத்துக்களுக்கும் பொறுப்புக்களிற்கிடையிலான முதிர்விலான ஒவ்வாத தன்மையை அளவிடுவதுடன் உயர்ந்து செல்லும் வட்டி வீதத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற நிகழக்கூடிய இழப்புக்களையும் மறைமுகமாக அளவிடுகின்றது. வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வானது எத்திசையிலுமான செலாவணி மாற்றுவீத அசைவிற்கு வங்கிகள் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை உள்ளடக்குகின்றது.

தெரிவு செய்யப்பட்டதும் நிறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதுமான பகுதிக் குறிகாட்டிகளை அட்டவணை சி.கு. 9.2 காட்டுகிறது. சொத்துக்கள் பொறுப்புக்களினுடைய நிகர ஐந்தொகை நிலைப்பாட்டின் மீது இலகுவாக சென்றடையக்கூடிய வகையில் போதியளவு நீண்ட காலத்திற்கான தரவுகளின் கிடைக்கப் பெறாத தன்மை காரணமாக வட்டி வீத இடர்நேர்வு தற்போதைக்கு உள்ளடக்கப்படவில்லை. வட்டி வீத இடர்நேர்வினுடைய பகுதிக் குறிகாட்டியொன்று வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்ணில் அண்மிய எதிர்காலத்தில் உள்ளடக்கப்படும்.

இச் சுட்டியை அமைக்கும் பொருட்டு, முதலாவது படிமுறையாக சமமாறிகளின் நிறைப்படுத்தப்படும் திட்டத்தை பாவித்து சமப்படுத்தப்பட்ட மாறிகளுக்காக பகுதிக் குறிகாட்டிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பகுதிக் குறிகாட்டியினுடைய சமப்படுத்தப்பட்ட பெறுமதியானது $= (X_{it} - \mu_{it})/\sigma_{it}$

$X_{it}$ - t இன் காலப்பகுதியின் குறிகாட்டியின் பெறுமதியாக இருக்கிறது. $\mu_{it}$ ஆனது குறிகாட்டி $X_{it}$ இன் சராசரி மற்றும் $\sigma_{it}$ ஆனது குறிகாட்டி $X_{it}$ இன் நியம விலகலையும் குறிக்கிறது.

சுட்டெண்களுக்கான ஒவ்வொரு பகுதிக் குறிகாட்டியினதும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தைக் கணிப்பிடுவது சிரமமாக இருப்பதால் வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண்ணை தொகுப்பதில் முக்கிய காரணியாக நிறைகளின் ஒதுக்கீடு காணப்படுகிறது. இது புள்ளிவிபர முறையைப் பயன்படுத்தியோ அல்லது நிபுணத்துவ மதிப்பீட்டை பயன்படுத்தியோ செய்யப்பட முடியும். இக் கணிப்பிடுதலில் இறுதியாக குறிப்பிடப்பட்ட முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இம் முறையானது தனிப்பட்ட பகுதிக் குறிகாட்டிகளிற்கிடையிலான நிகழக்கூடிய இயைபுபடுத்தலை கணக்கில் எடுக்கவில்லை. பகுதிக் குறிகாட்டிகளும் அவற்றினுடைய நிறைகளும் அவற்றின் மீதான முக்கியத்துவத்தைப் பொறுத்து காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படலாம்.

1998 (அடிப்படை ஆண்டு) ஆம் ஆண்டிற்கும் 2008ஆம் ஆண்டிற்குமான காலப்பகுதிக்காக வரைபடம் சி.கு. 9.1, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற

சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிடமிருந்தான காலாண்டு தரவுகளைப் பயன்படுத்தி கூட்டு வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண் தொகுக்கப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டிலிருந்து வங்கித்தொழில்துறையில் நிதியியல் ஆற்றல் பலமடைந்திருப்பதை வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண் எடுத்துக் காட்டுகிறது. மூலதன விகிதத்தின் சிறு இறக்கம், செயற்படாக் கடன் விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதத்தின் இறக்கம் போன்றவற்றால் 2007இலிருந்து 2008 இற்கு வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண் சிறிது குறைந்துள்ளது. எப்படியாயிலும் வங்கித்தொழில்துறை தொடர்ந்து இலாப மீட்டுவதோடு போதுமான மூலதனம், திரவத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒதுக்கீடுகள் ஆகியவற்றால் அதன் உறுதித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது.

(அ) **மூலதன போதுமாந்தன்மை:** 2000 ஆண்டிலிருந்து மூலதன போதுமாந்தன்மையின் பகுதி குறிகாட்டி முன்னேறியது. ஆனால் மூலதன நிதியங்களைவிட இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்பால் 2008இல் சிறிது குறைவடைந்துள்ளது. வங்கிகள் பாசல் II மூலதன போதுமாந்தன்மை கட்டமைப்புக்கு மாறியுள்ளது. இக் கட்டமைப்பு கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளுடன் மேலதிகமாக தொழிற்பாட்டு இடர்நேர்வையும் உள்ளடக்குகிறது. ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலாக முழு மூலதன போதுமாந்தன்மை விகிதம் 13.5 சதவீதமாகவும் மற்றும் அடுக்கு 1 மூலதன போதுமாந்தன்மை விகிதம் 11.5 சதவீதமாகவும் இருப்பதால் வங்கித்தொழில்துறையில் மீளும் தன்மை நிலைத்து நீடித்திருந்தது.

(ஆ) **சொத்துத் தரம்:** 2001ஆம் ஆண்டிலிருந்து சொத்துத் தர பகுதிக் குறிகாட்டி குறைந்து செல்லும் போக்கிலிருந்தது. இந்தப் பகுதிக் குறிகாட்டி வங்கித் தொழில் ஆற்றல் சுட்டெண் மீது ஒரு எதிர்கணியத் தாக்கத்தைக் கொண்டிருப்பதால் இது வங்கித்தொழில் உறுதித்தன்மைக்கான சாதகமான அபிவிருத்தியாக இருக்கின்ற போதிலும் 2008இல் செயற்படாக் கடன் விகிதத்திலான அதிகரிப்பு காரணமாக உயர்ந்துள்ளது. பொருளாதார வீழ்ச்சி காரணமாக வங்கித்தொழில்துறையின் சொத்துத் தரம் சிறிதளவில் மோசமடைந்தது. வங்கிகள் செயற்படாக் கடன் விகிதங்களை குறைப்பதற்கு கடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மேல் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

(இ) **இலாபகரத்தன்மை:** 2003ஆம் ஆண்டிலிருந்து இலாபகரத்தன்மை பகுதி குறிகாட்டியானது ஒப்பீட்டளவில் உறுதியானதாக இருக்கிறது. 2008இல் இலாபத்துடன் ஒப்பிடும் போது பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்பின் காரணமாக மூலதனம் மீதான வருவாய் விகிதம் குறைவடைந்துள்ள வேளையில் சொத்து மீதான வருவாய் அதிகரித்துள்ளது. வங்கித்தொழில்துறையின் ஒட்டுமொத்த இலாபகரத்தன்மை நிலை பேணப்பட்டுள்ளது.

(ஈ) **திரவத்தன்மை:** 2000ஆம் ஆண்டிலிருந்து திரவத்தன்மை பகுதிக் குறிகாட்டி அதிகரித்துள்ள போதிலும் 2008இல் மொத்தச் சொத்துகளிற்கான திரவச் சொத்துக்கள் விகிதம் சிறிது குறைவடைந்ததால் சிறிது வீழ்ச்சியடைந்துள்ளது. வங்கித்தொழில்துறையின் திரவத்தன்மை நிலை வைப்புக்களுக்கான நியதித்திரவச் சொத்துக்களின் விகிதத்தின் அதிகரிப்பால் திருப்திகரமாக காணப்பட்டது.

(உ) **வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு:** 2004ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் இடர்நேர்வு பகுதிக் குறிகாட்டி ஒப்பீட்டளவில் உறுதியானதாக இருந்தது. 2008இல் மூலதன நிதியங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய திறந்த நிலை அதிகரித்துள்ள போதிலும் முன்மதியுடைய வரையறையினுள் காணப்பட்டது.

*உசாத்துணை நூல்கள்:*


2007ஆம் ஆண்டு நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கை - துருக்கி மத்திய வங்கி

2006ஆம் ஆண்டு மற்றும் 2007ஆம் ஆண்டு நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கை - செக்கொசிலாவாக்கியா

தேசிய வங்கி "கனடாவின் நிதியியல் தாக்க சுட்டெண்"

கனடா வங்கியின் 2003ஆம் ஆண்டின் மார்க்இலிங் மற்றும் யிங் லியு

2006ஆம் ஆண்டு நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு - பாகித்தான் அரச வங்கி


கணிசமானதாக இல்லாதபோதிலும், ஒத்தோபரிலிருந்து மூலதனச் சந்தையில் தேறிய வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்களும் காணப்பட்டன. உள்நாட்டிலான வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் உணரப்பட்ட அதிகரித்த அழுத்தங்கள் உள்நாட்டு வங்கிகளுக்கிடையேயான பணச் சந்தைகளுக்கு அளவுக்கு அதிகமாகச் சென்ற ஐக்கிய அமெரிக்க டொலர்களின் பற்றாக்குறையில் பிரதிபலிக்கிறது. மத்திய வங்கி வங்கிகளுக்குப் பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைக் குறைத்தன் மூலம் அதன் நேர்மாற்று மீள்கொள்வனவுப் பொறி முறையூடாக நிதியியல் முறைமைக்கு போதியளவு வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. இத்துடன், செலாவணி வீதத்தில் கேள்வியையும் சுமூகமான தளம்பலையும் எதிர்கொள்வதற்கு மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தை வழங்கியது. மத்திய வங்கி நிதியியல் முறைமையின் மீள் எழுச்சியை அதிகரிப்பதற்கும் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்வதற்கு அதன் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் முன்கூட்டியே முன்னெச்சரிக்கையான வழிமுறைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**உள்நாட்டுத்துறையில், அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் முறிவடைந்தமை சில ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மீது எதிர்க்கணிய விளைவைக் கொண்டிருந்தது.** அதிகாரமளிக்கப்படாத மற்றும் சட்ட ரீதியற்ற வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட இடர்நேர்வுகளால் அச்சுறுத்தப்பட்ட வங்கியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுத்ததன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு மத்திய வங்கி தலையிட்டது. சிலிங்கோ குழுமத்தின் பதிவு செய்யப்படாத கோல்டன் கீ கிறெடிற் காட் கம்பனி லிமிடெட்டிலான நெருக்கடி செலான் வங்கியிலும்

சிலிங்கோ குழுமத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட ஏனைய நிதிக் கம்பனிகளிலும் பொதுமக்களின் நம்பகத்தன்மையைப் பாதித்தது. இதன் விளைவாக, வைப்பு மீளப்பெறுகைகள் மற்றும் ஏனைய வங்கிகளிலிருந்தான கொடுகடன் வழிமுறைகளைக் குறைத்தமை காரணமாக செலான் வங்கி திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்கொண்டது. செலான் வங்கியிலான இடர்ப்பாடு நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக்கு சாத்தியமானளவிற்கு மிக்க ஆபத்தை ஏற்படுத்தியதால் 2008 திசெம்பரில் மத்திய வங்கி முறைமையின் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கையை எடுத்தது. இவ் வழிமுறைகள் செலான் வங்கியின் பணிப்பாளர் சபையை மாற்றியமைத்தல், செலான் வங்கியின் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அரசுக்குச் சொந்தமான இலங்கை வங்கியை நியமித்தல் முக்கியமாக மத்திய வங்கியிலிருந்த பிணையிடப்பட்ட கடன்பாடுகள் வடிவில் திரவத்தன்மை உதவியை வழங்கல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இதன் விளைவாக, செலான் வங்கியிலான நிலைமை உறுதியடைந்ததுடன் வங்கி எதுவித குறுக்கீடுமின்றி வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துகிறது.

**பிரச்சனைப்பட்ட நிதி மற்றும் குத்தகைக்கு விடல் கம்பனிகளில் வைப்பாளர்கள் நம்பகத்தன்மையை இழந்ததன் காரணமாக திரவத்தன்மைப் பிரச்சனைகளை அனுபவிக்கும் இக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு சிறப்பு உதவிப் பொதியொன்று அரசாலும் மத்திய வங்கியாலும் 2009 பெப்புருவரியில் அறிவிக்கப்பட்டது.** சிலிங்கோ குழுமத்திலுள்ள நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளே கூடிய அளவில் பாதிப்படைந்தன. இத் திட்டத்தின் முக்கிய பண்புகள் யாதெனில் சந்தைப் பெறுமதியின் 67 சதவீத விலையில் நிலச் சொத்துரிமைகளின் விற்பனைக்கு எதிராக நிதி மற்றும் குத்தகைக்கு விடல் கம்பனிகளுக்கு அரசுக்குச் சொந்தமான லங்காபுத்ர வங்கியூடாக அரசு திறைசேரி முறிகளை வழங்கும்; அரசு 2008 செத்தெம்பர் 30இல் வழங்கப்பட்ட மட்டம் வரை நிதி மற்றும் குத்தகைக்கு விடல் கம்பனிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக அரசு வங்கிகளுக்கு உத்தரவாதத்தை வழங்குவது, நிதி மற்றும் குத்தகைக்குவிடல் கம்பனிகளுக்குப் பிரயோகிக்கத்தக்க திரவச் சொத்து விகிதம் 5 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்படும். இப் பொதி பொதுமக்களின் நிதியங்கள் மூலம் நிதியிடப்படுவதால் இப் பொதியின் கீழ் வசதிகளைப் பெறவிரும்பும் நிறுவனங்களுக்கு, உயர் முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர்களின் சம்பளங்கள் மீது வரையறைகள் விதிக்கப்படுவதுடன் தொடர்பான குழுக்களுக்கான மாற்றல்களும் தடை செய்யப்படும்.

**அதிகாரமளிக்கப்படாத மற்றும் சட்ட ரீதியற்ற நிறுவனங்களில் நிதியங்கள் வைப்புச் செய்தல்/முதலீடு செய்வதிலுள்ள ஆபத்திற்கு எதிராக பொதுமக்களை எச்சரிப்பதற்கு கூடிய தீவிரமான பொதுமக்கள் விழிப்புணர்வுப் பிரசாரமொன்று நடத்தப்பட்டது.** மத்திய வங்கியால் உரிமம் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட கம்பனிகளை மத்திய வங்கி செய்தித் தாள்களில் கிரமமாக வெளியிடுகிறது. இத்துடன், சட்ட ரீதியற்ற நிறுவனங்கள் பற்றிய புலன் விசாரணைகளை மத்திய வங்கி நிறைவேற்றுவதுடன் அவ்வாறான பல எண்ணிக்கையான நிறுவனங்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், நேர அட்டவணை ஒன்றினுள் தேவையான தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்வதன் மூலம் மத்திய வங்கியுடன் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம் அதிகாரமளிக்கப்படாத கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. பதிவு செய்யாத இணங்கத் தவறும் கம்பனிகள் அவற்றின் வைப்பாளர்களுக்கு பணத்தை மீளச் செலுத்துமாறும் வியாபாரத்தை ஒடுக்கிவிடுமாறும் பணிக்கப்பட்டன. இவ் எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும் சில பொதுமக்கள் வழங்கப்பட்ட உயர் வட்டி வீதங்களால் கவரப்பட்டும் வரிக் கொடுப்பனவிலிருந்து தப்புவதற்கும் இந் நிறுவனங்களில் நிதியங்களைத் தொடர்ந்து வைப்புச் செய்ததன் மூலம் இவ் வஞ்சனைக்குரிய திட்டங்கள் முறிவடைந்ததும் அவர்களது பணத்தை இழக்கும் இடர்நேர்வுக்குள்ளாகின்றனர். அதிகாரமளிக்கப்படாத மற்றும் சட்ட ரீதியற்ற நிறுவனங்கள் இருப்பது வைப்பாளர்களின் நிதியங்களின் இழப்பை விளைவிப்பதுடன் நிதியியல் முறைமையின் நேர்மைக்குக் களங்கத்தை ஏற்படுத்தி பொதுமக்கள் நம்பகத்தன்மையைச் சிதைக்கிறது. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கும் நிதியியல் உறுதிப்பாட்டுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. எனவே, மத்திய வங்கி மேலே கூறப்பட்ட வழிமுறைகளை எடுத்துள்ளது. இத்துடன், சட்டத்தை ஏமாற்றுவதற்கு பல பாவனைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியற்ற நிதியியல் வியாபாரத்தையும் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதையும் தடை செய்வதற்கான ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக நிதிக் கம்பனிகள் சட்டம் திருத்தப்பட்டு வருகிறது. “வைப்புக்கள்” என்ற வரைவிலக்கணம் நிதியத்தைத் திரட்டும் பரந்தளவிலான செயற்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்படும். அதிகாரமின்றி வைப்புக்களை ஏற்றல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

## 8.2 நிதியியல் முறைமை உறுதிப்பாடு

**மோசமடைந்து செல்லும் வெளிநாட்டுச் சூழல் மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு பேணப்பட்டது.** முக்கியமாக உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் விளைவாக உயர் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் மற்றும் மெதுவான வளர்ச்சியால் பதிவு செய்யப்பட்ட குறைந்தளவு சாதகமான சூழலில் முக்கியமான நிதியியல் நிறுவனங்கள் நியாயமான அளவிற்கு மூலதனமயமாக்கப்பட்டு இலாபகரத்தன்மைமிக்கதாகவும் மீள் எழுச்சியுள்ளதாகவும் காணப்பட்டது. நிதியியற் சந்தைகள் 2008இன் முதல் மூன்று காலாண்டுகளில் சார்பு ரீதியில் உறுதியாகவிருந்த போதிலும் உலகச் சந்தைகளிலான பாதகமான அபிவிருத்திகளின் முதன்மைக் காரணத்தால் நான்காம் காலாண்டில் கூடிய தளம்பலுடன் காணப்பட்டது. முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை கூடியளவு கிடைப்பனவுடனும் பாதுகாப்புடனும் தொழிற்பட்டிருக்கையில் நிதியியல் உட்கட்டமைப்பு இவ்வாண்டில் கொடுப்பனவுகள் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டைத் தொடர்ந்து வசதிப்படுத்தியது.

**உள்நாட்டு நிதியியற் சந்தைகள் கலப்பான ஆண்டை கொண்டிருந்தன.** வங்கிகளுக்கிடையே அழைப்புப் பணச் சந்தையிலான வட்டி வீதங்கள் சராசரியாக 13.5 - 16.5 சதவீத வீச்சினுள் அசைந்து இவ்வாண்டில் குறைவான தளம்பலைக் கொண்டிருந்தது. இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சந்தை மிகையான திரவத்தன்மையைக் கொண்டிருக்கையில்

**அட்டவணை 8.1**

## தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் ஆற்றல்த்தன்மை குறிகாட்டிகள்

சதவீதம்

| நிறுவனமும் குறிகாட்டியும் | 2007(அ) | 2008(ஆ) |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம் | 13.6 | 13.3 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 11.9 | 10.3 |
| மூலதனதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 11.9 | 17.0 |
| மொத்தக் கடன்களில் செயற்படா கடன்கள் | 5.0 | 6.0 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 1.9 | 2.1 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 15.0 | 14.9 |
| வட்டிமிகை | 4.5 | 4.7 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 25.2 | 23.4 |
| நியதித் திரவ விகிதம் | 24.8 | 25.7 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்ள் | 25.4 | 25.2 |
| மூலதன நிதியங்களுக்கான வெளிநாட்டுச் செலவானி தேறிய திறந்த நிலை | 1.2 | 2.1 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம் | 20.6 | 18.5 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 21.2 | 23.8 |
| மூலதனதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 23.0 | 24.4 |
| மொத்தக் கடன்களில் செயற்படா கடன்கள் | 6.7 | 7.7 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 1.7 | 1.6 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 10 | 9.5 |
| வட்டிமிகை | 3.5 | 2.8 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 15.7 | 14.5 |
| நியதித் திரவ விகிதம் | 61.0 | 62.1 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்ள் | 42.0 | 43.6 |
| **பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம் | 15.2 | 16.0 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 13.3 | 12.3 |
| மூலதனதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 14.1 | 16.1 |
| மொத்தக் கடன்களில் செயற்படா கடன்கள் | 5.7 | 6.7 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 2.5 | 1.8 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 13.1 | 8.4 |
| மொத்த வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 27.8 | 20.6 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 31.0 | 28.0 |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டு நாணயச் சந்தையிலான அழுத்தங்களிலிருந்து எழுந்த அளவுக்கதிகமான தாக்கங்களின் பெருமளவு காரணமாக திரவத்தன்மைச் சிரமங்கள் நான்காம் காலாண்டில் அனுபவிக்கப்பட்டன. எனினும், மத்திய வங்கி அதன் கொள்கை மற்றும் தண்ட வீதங்களில் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் குறைப்புக்களூடாகவும் சந்தைக்குப் போதியளவு திரவத்தன்மையை வழங்கியதால் அழைப்பு பண வீதங்களிலான தளம்பல் சார்பு ரீதியில் குறைவாகக் காணப்பட்டது. சந்தையை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு (வரையறைகளுக்குட்பட்டு) திறந்துவிட்டமையாலும் குறுகிய கால திறைசேரி உண்டியல்களுக்கான பலமான முதலீட்டாளர் விருப்பத்தேர்வாலும் இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் திறைசேரிப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. இதன் பின்பு விளைவு வீதங்களில் மேல் நோக்கிய அசைவு அவதானிக்கப்பட்டது. இலங்கை ரூபா சார்பு ரீதியில் ஐ.அ.டொலருக்கெதிராக உறுதியாக விளங்கி 2008இல் 4 சதவீதத்தால் பெறுமதியில் தேய்வடைந்தது. பங்குச் சந்தை செத்தெம்பரில் மிகவும் கூர்மையாக வீழ்ச்சியடைந்த விலைச் சுட்டெண்களுடன் ஆண்டு முழுவதும் கீழ் நோக்கிய போக்கில் காணப்பட்டது. சகல பங்குகளுக்கான விலைச்சுட்டெண் 2008 இறுதியில் 41 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பங்குச் சந்தையிலான மந்தமான நிலைமைகள் முக்கியமாக இவ்வாண்டில் நிலவிய உயர் வட்டி வீதங்கள், குறைவான கம்பனி வருவாய்கள், உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் ஆர்வங் குறையச் செய்த தாக்கம் மற்றும் பொருளாதார வீழ்ச்சி என்பவற்றால் ஏற்பட்டது. இவ்வாண்டின் பிற்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சல் இருந்த போதிலும் பங்குச் சந்தைக்கான தேறி வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் அதிகரித்தன.

**2008இல் சோதனைமிக்க நிலைமைகளிலும் வங்கித்தொழில் துறை அதன் இலாபகரத் தன்மையையும் ஆற்றலையும் பேணியது.** வங்கித்தொழில்துறை கூடியளவு மிதமான வீதத்தில் விரிவடைந்து பொருளாதாரத்தில் நிலவிய உயர் வட்டி வீதச் சூழலைப் பிரதிபலித்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் வழங்கல் 2007இன் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 6 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்திருக்கையில் முதலீடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. அவற்றின் வைப்புத் திரட்டல்களும் 2007இன் 18 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 7 சதவீதத்தால் மிதமானளவில் வளர்ச்சியடைந்திருக்கையில் கடன்பாடுகள் மாற்றமின்றிக் காணப்பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் வட்டி மட்டங்களைப் பேணக் கூடியதாக இருந்தமையால் சொத்துக்கள் மீதான இலாபம் மற்றும் மூலதனம் மீதான இலாபம் என்பவற்றால் எடுத்துக்காட்டப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் இலாபகரத்தன்மை சிறிதளவால் முன்னேற்றமடைந்தது. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் வழங்கல் 2007இன் 21 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2008இல் அவற்றின் வைப்புக்கள் 11 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் கடன்பாடுகள் வீழ்ச்சியடைந்தன. வட்டி வீத வேறுபாடுகள் ஒடுங்கியதன் காரணமாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் சொத்துக்கள் மீதான இலாபம் மற்றும் மூலதனம் மீதான இலாபம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. வங்கிகள் 2008 சனவரியிலிருந்து பாசல் II மூலதனப் போதுமை கட்டமைப்பிற்கு நகர்ந்தது. தனிப்பட்ட வங்கிகளுக்கிடையே கணிசமான வேறுபாடுகள் இருந்தபோதிலும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் ஆகக் குறைந்த ஒழுங்கமைப்புத் தேவைப்பாட்டிற்கு மேல் பேணப்பட்டது.

**இடர்நேர்வுக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை முகாமை செய்யக்கூடிய மட்டங்களில் காணப்பட்டது.** வங்கிக் கொடுகடனின் துறை ரீதியான பகிர்ந்தளிப்பு நியாயமான அளவுக்குப் பரந்த அடிப்படையில் காணப்பட்டது. அடகு மற்றும் கடனட்டை உள்ளிட்ட நுகர்வு நோக்கங்களுக்கான கொடுகடன் மொத்த வங்கிக் கடன்களின் 30 சதவீதத்திற்கு வகை கூறியது. வங்கிக் கடன்வழங்கலின் மிகப் பெரிய பங்குகளுக்கு வகை கூறிய ஏனைய துறைகளாக வீடமைப்பு மற்றும் கட்டடவாக்கம் (17 சதவீதம்), வர்த்தகம் செய்தல் (15 சதவீதம்), ஆடை உற்பத்திகள் உள்ளிட்ட தயாரிப்பு (16 சதவீதம்) என்பன விளங்கின. வங்கிகளின் சொத்தின் தரம் சிறிதளவால் மோசமடைந்து கொடுகடன் இடர்நேர்வில் சிறிய

அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது. இதன் விளைவாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் செயற்படு கடன் விகிதம் 2008இல் அதிகரித்தது. எனவே, இப் போக்கை மாற்றியமைப்பதற்கு வங்கிகள் உயர் கொடுகடன் நியமங்களைப் பேணுவதில் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும். சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகள் சந்தை இடர்நேர்வை போதுமானளவிற்கு முகாமை செய்யக் கூடியதாக இருந்திருக்கையில், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் வட்டி வீத இடர்நேர்வுக்கு ஓரளவிற்குக் கூடுதலாக வெளிப்படுத்தின. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் திரவத்தன்மை இடர்நேர்வுக்குக் குறைவான வெளிப்படுத்துகையைக் கொண்டிருந்ததுடன் நியதித் திரவ சொத்து விகிதத் தேவைப்பாட்டை இலகுவில் சமாளித்தன. கோட்பாட்டு ரீதியிலான அணுகு முறையூடாக இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் வங்கிகளுக்கு உதவுவதற்கு இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் மத்திய வங்கி ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைகள் தொடர்பான வழிகாட்டல்களை வங்கிகளுக்கு வழங்கியது.

**2008இல் நிலவிய உயர் வட்டி வீதச் சூழலில் நிதிக் கம்பனிகள் வட்டி வீத இடர்நேர்வுக்கு கூடியளவில் பாதிப்புக்குள்ளாகும் தன்மையில் காணப்பட்டன.** பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட நிதியியல் வசதிகளிலான வளர்ச்சி மெதுவடைந்து 2007இன் 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 17 சதவீதத்தால் அதிகரித்தது. நிதிக் கம்பனிகளின் முக்கிய வியாபாரங்களான நிதிக் குத்தகைக்கு விடல் மற்றும் வாடகைக் கொள்வனவில் வட்டி வீத வேறுபாடுகள் ஒடுங்கியதன் காரணமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையின் இலாபகரத் தன்மை 2008இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. அவற்றின் செயற்படு கடன் விகிதமும் அதிகரித்தது. ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள் அண்மையில் மத்திய வங்கியால் அதிகரிக்கப்பட்டமையால் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த மூலதன நிலைமை முன்னேறியது. இதனால் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனித்துறையின் மூலதனப் போதுமாந்தன்மை பலமடைந்ததுடன் அதிர்வுகளுக்கு அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரித்தது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையின் திரவத்தன்மை நிலைமை திருப்திகரமாகக் காணப்பட்டது.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளின் இலாபகரத்தன்மையும் 2008இல் வீழ்ச்சியடைந்தது.** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடல் கம்பனிகள் இவ்வாண்டில் நிதியிடல் தடைகளை எதிர்கொண்டன. இவை அவற்றின் நிதியிடற் தேவைகளுக்காக வங்கிகள் மீது பெருமளவு தங்கியிருந்ததுடன் வங்கிகளும் குத்தகைக்கு விடல் வியாபாரத்தில் போட்டியாளராக இருப்பதால் போட்டி வீதங்களில் நிதியங்களைப் பெறுவது கடினமாகவிருப்பதை அவை அறிந்து கொண்டன. படுகடன் பிணையங்களை வழங்குவதனூடாக நிதியங்களைத் திரட்டுவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடல் கம்பனிகள் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் இணைவு விகிதம் வசதியான அளவில் விளங்கியது. 2008இன் பிற்பகுதியில் பதிவு செய்யப்பட்ட சில நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடல் கம்பனிகளிலான பொதுமக்களின் நம்பகத்தன்மை பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடல் கம்பனிகளிடையே பரவும் தாக்கத்தைக் கொண்டிருந்த சில ஒழுங்குமுறைப்படுத்தப்படாத வியாபாரத்தில் ஏற்பட்ட மோசடிகள் காரணமாக இழக்கப்படுவதை காணக் கூடியதாக இருந்தது. நிதி அமைச்சும் மத்திய வங்கியும் இத் துறையில் நம்பகத்தன்மையை மீள ஏற்படுத்துவதற்கு இப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஊக்குவிப்புப் பொதியை அறிவித்துள்ளன.

**காப்புறுதிக் கம்பனிகளின் நிதியியல் ஆற்றல் 2008இல் மேம்பட்டது.** காப்புறுதிக் கம்பனிகளின் கட்டுப்பண வருமானத்திலான வளர்ச்சி நீண்ட தவணை மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் மிதமடைந்துள்ளது. காப்புறுதிக் கம்பனித்துறையின் மொத்த இலாபகரத்தன்மை 2008இல் சிறிதளவு குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சகல கம்பனிகளும் கடன் தீராற்றல் தேவைப்பாடுகளைச் சமாளித்ததன் மூலம் இவ்வாண்டில் காப்புறுதித் துறையின் ஆற்றல் பலப்படுத்தப்பட்டது. சொத்துக்களைப் பன்முகப்படுத்தியமை மற்றும் முதலீட்டின் வெவ்வேறான வகைகள் மீது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அதிகார சபையால் வரையறைகளை விதித்தமை காப்புறுதிக் கம்பனிகளின் இடர்நேர்வுகளை பெருமளவிற்குத் தணித்தது. அரச பிணையங்களில் அவற்றின் சொத்துப்பட்டியலில் பெருமளவு விகிதாசாரத்தை வைத்திருக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் கேட்கப்பட்டமை தற்போதைய சூழ்நிலைகளில் கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வை முகாமை செய்வதற்கு அவற்றுக்கு உதவின. சகல காப்புறுதிக் கம்பனிகளும் இவ்வாண்டில் அவற்றின் கோரல்களைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தன. காப்புறுதி செய்பவர் அதன் கடப்பாடுகளை சமாளிக்க இயலாத சந்தர்ப்பத்தில் பயன்படுத்தக் கூடிய பூட்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியமும் காணப்படுகிறது. முன்மதியுடைய ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான சட்டக் கட்டமைப்பு காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதியின் முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் தரமுயர்த்தப்படும். மூலதனத் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல், விதிகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக இலங்கைக் காப்புறுதிச் சபையின் அதிகாரங்கள் பலப்படுத்தப்படும். காப்புறுதிக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் தரகர்கள் இழப்பைச் சரிப்படுத்துநர்களுக்கான "தகுதியான மற்றும் பொருத்தமான" பரீட்சிப்பு தேவைப்பாடாக இருக்கும், நிறுவன ரீதியிலான முகவர்களின் நியமன முன் அனுமதி அறிமுகப்படுத்தப்படும். ஏனைய முக்கிய மாற்றங்களாக ஆயுள் மற்றும் ஆயுளற்ற கம்பனிகளின் தேவைப்பாடு மூன்று வருட காலப்பகுதியினுள் தனித்தனியாகக் கூட்டிணைக்கப்படுதல் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளை பங்குச் சந்தையில் ஒரு ஆண்டினுள் பட்டியலிடல் என்பன விளங்கின. காப்புறுதிக் கம்பனிகளின் நிதியியற் பலத்தையும் ஆற்றலையும் மேம்படுத்துவதற்கும் கைத்தொழிலின் இணைப்பை ஊக்குவிப்பதற்கும் 2009இல் ஒவ்வொரு வகை காப்புறுதி வியாபாரத்துக்கும் காப்புறுதிக் கம்பனிகளின் ஆகக் குறைந்த பங்கு மூலதனத்தை தற்போதைய மட்டமான ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.250 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு இலங்கைக் காப்புறுதிச் சபை முன்மொழிகிறது.

**மிகப் பெரிய இரு ஓய்வூதிய நிதியங்களான ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் இடர்நேர்வு மட்டங்கள் தொடர்ந்து குறைவாக விளங்கின.**

ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் சொத்துப்பட்டியலில் பெரும்பாலனவை இடர்நேர்வு இல்லாத அரச பிணையங்களில் வைத்திருக்கப்படுவதால் கொடுகடன் இடர்நேர்வு புறக்கணிக்கத்தக்கதாகும். இந் நிதியங்கள் உறுப்பினர் உதவுதொகைகள் மற்றும் திறைசேரிப் பிணையங்களிலான முதலீடுகளூடாக நிதியங்களின் சாதகமான உட்பாய்ச்சல்கள் காரணமாக திரவத்தன்மை இடர்நேர்வுக்கும் பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் கொண்டிராது. ஊழியர் நேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் வெளிப்படுத்துகைக்குள்ளான முக்கிய இடர்நேர்வு நிலையான வருமானமுள்ள பிணையங்களிலான முதலீடுகளில் உயர் செறிவைக் கொண்டிருப்பதன் காரணமாக ஏற்பட்ட வட்டி வீத இடர்நேர்வாகும். எனினும், இச் சொத்துக்களின் பெரும்பாலானவை “சந்தைப் பெறுமதிப்படி” என்பதைத் தேவைப்படுத்தாத முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்படுவதால் இவ் இடர்நேர்வு பெருமளவிற்குத் தணிக்கப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய தனியார் ஓய்வூதிய மற்றும் சேம நிதியங்களும் முக்கிய நிதியங்களைப் போன்று ஒத்த இடர்நேர்வு தோற்றத்தைக் கொண்டிருந்தன.

**2009இல் இடர்நேர்வுகள் உயர்ந்த மட்டங்களில் தொடர்ந்து இருக்கப் போகின்ற போதிலும், முன்னோக்கிய பார்வையில் நிதியியல் முறைமை மீள்எழுச்சியுள்ளதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** உலக வர்த்தகத்திலான திடீர் மந்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சி இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களை ஓரளவுக்கு பாதிக்கும் போல் தோன்றுகிறது. இச் சந்தர்ப்பங்களில், நிதியியல் நிறுவனங்களின் வருவாய்கள் மிதமடையக் கூடும் என்பதுடன் சொத்தின் தரமும் வீழ்ச்சியடையலாம். எனினும், அத்தகைய பாதகமான அபிவிருத்திகளை ஈடு கொடுப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் போதியளவு மூலதனத் தாங்கிருப்புகளைக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், சவால்மிக்க சூழலில் மீள்எழுச்சியைப் பேணுவதற்கு நிதியியல் நிறுவனங்கள் முன்மதியுடைய கொள்கைகளையும் முன்னேற்றமடைந்த இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் நடைமுறைப்படுத்துவது முக்கியமாகும். மேல் நோக்கிய பக்கத்தில், பணவீக்கத்திலான வீழ்ச்சியின் சாதகமான தன்மையைத் இதைத் தொடர்ந்து வட்டி வீதம் குறைவடைந்தமை பொருளாதாரச் செயற்பாட்டைத் தூண்டி வியாபாரத்துறையின் செயலாற்றத்தை மேம்படுத்தும். இதற்கும் மேலாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விடுவிக்கப்பட்ட பகுதியிலான மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடு நிதியியல் பணிகள் மேலும் விரிவடைவதற்கான வாய்ப்புக்களை வழங்கும். மத்திய வங்கி பல எண்ணிக்கையான செயலாற்றம் சார்ந்த வழிமுறைகளை எடுத்துள்ளதுடன், இவை நிதியியல் முறைமையின் மீள்எழுச்சியை அதிகரிக்க உதவியதுடன் நிதியியல் முறைமையில் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டதும் முன் எச்சரிக்கையான வழிமுறைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

## 8.3 நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

### இலங்கை மத்திய வங்கி

**மத்திய வங்கியின் மொத்த சொத்துக்கள் 6.5 சதவீதத்தினால் அதிகரித்து 2007 உடன் ஒப்பிடுமிடத்து ஒரு தாழ்ந்த வளர்ச்சியை கொண்டிருந்தது.** மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்களிலான அதிகரிப்பு வெளிநாட்டு சொத்துக்களின் வீழ்ச்சியை ஈடுசெய்த உள்நாட்டு சொத்துக்களிலான அதிகரிப்பின் விளைவாகும். இந்த தோற்றப்பாடு வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு உள்நாட்டு சொத்துக்களிலான வீழ்ச்சியை ஈடுசெய்த 2008இன் முதல் மூன்று காலாண்டு காலத்தில் நிகழ்ந்ததற்கு முழுமையாக நேர்மாறானதாகக் காணப்படுகின்றது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களிலான அதிகரிப்பு கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுக்கடன், கடன், இலங்கை அபிவிருத்தி முறிகளின் தேறிய விற்பனை மற்றும் அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டு கடன்கள் மற்றும் கொடைகளது பெறுகைகளை கொள்வனவு மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளின் கணிசமான உட்பாய்ச்சல்கள் காணப்பட்ட போது உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணய சந்தையிலிருந்து மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்தமை போன்றவற்றினால் ஏற்பட்டதாகும். மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் ரூபாத் திரவத்தன்மையின் உட்செலுத்துதலுக்கு வழிவகுத்தமையினால் அவ்வாறு உருவாக்கப்பட்ட மிதமிஞ்சிய சந்தைத் திரவத்தன்மையை ஈர்த்துக் கொள்வதற்கு வங்கி தனது சொத்துப்பட்டியலில் வைத்திருந்த திறைசேரி உண்டியல்களை விற்று அதன் மூலம் உள்நாட்டு சொத்துக்களைக் குறைத்தது.

**அட்டவணை 8.2 முக்கிய நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள்**

| | 2007(அ) | | 2008(ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு% | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு% |
| **மத்திய வங்கி** | **561.4** | **13.0** | **597.1** | **12.5** |
| **வங்கித்தொழில்துறை** | **2,504.2** | **58.1** | **2,714.2** | **56.7** |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (இ) | 2,098.3 | 48.7 | 2,277.0 | 47.5 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 405.9 | 9.4 | 437.2 | 9.1 |
| **வங்கியல்லா வைப்புக்களை ஏற்க்கும் நிதியியல் நிறுவனங்கள்** | **175.3** | **4.1** | **220.1** | **4.6** |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 142.0 | 3.3 | 175.6 | 3.7 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 28.7 | 0.7 | 39.3 | 0.8 |
| சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 4.7 | 0.1 | 5.2 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **180.8** | **4.2** | **229.2** | **4.8** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் | 95.5 | 2.2 | 109.9 | 2.3 |
| முதன்மை வணிகர்கள் | 53.9 | 1.3 | 86.2 | 1.8 |
| பங்குத்தரகர் கம்பனிகள் | 3.6 | 0.1 | 3.2 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகல் | 6.3 | 0.1 | 6.8 | 0.1 |
| துணிகர மூலதனம் கம்பனிகள் | 1.1 | 0.0 | 1.1 | 0.0 |
| கொடுகன் தரமிடல் முகவர்கள் | 0.1 | 0.0 | 0.1 | 0.0 |
| ஏனையவை | 20.2 | 0.5 | 21.9 | 0.5 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **889.4** | **20.6** | **1,030.2** | **21.5** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 134.9 | 3.1 | 155.1 | 3.2 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 562.4 | 13.0 | 655.3 | 13.7 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 78.7 | 1.8 | 92.4 | 1.9 |
| தனியார் ஊழியர் சேமலாப நிதியம் | 96.2 | 2.2 | 108.0 | 2.3 |
| அரச பணி சேமலாப நிதியம் | 17.3 | 0.4 | 19.4 | 0.4 |
| **மொத்தம்** | **4,311.2** | **100.0** | **4,790.8** | **100.0** |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் கரை கடந்த வங்கித் தொழில் பிரிவுகள் இரண்டினதும் ஒன்று திரட்டப்பட்ட சொத்துக்கள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இது இலக்கிடப்பட்ட மட்டத்தில் ஒதுக்குப் பணத்தினை பேணுவதை இயலச் செய்தது. எனினும், உலகளாவிய திரவத்தன்மை நெருக்கடிக்குப் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளில் மீளப் பெறுகைகள் கணிசமானளவாக காணப்பட்டு வெளிநாட்டு நாணயத்தின் கணிசமான வெளிப்பாய்ச்சல்களுக்கு வழிவகுத்தது. எனவே ரூபாவின் நாணய மாற்று வீதத்தில் அளவுக்கு மிஞ்சிய தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி தேவையேற்பட்ட போது வெளிநாட்டு நாணய சந்தையில் தலையிட்டது. மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய வழங்கல்கள் பணச்சந்தையில் ரூபா திரவத்தன்மையின் பற்றாக்குறைக்கு வழிவகுத்ததுடன் சந்தைக்கு ரூபா திரவத்தன்மை உட்செலுத்தப்படுவதை வேண்டி நின்றது. மத்திய வங்கி முதலாந்தர சந்தையிலும் இரண்டாந்தரச் சந்தைகளில் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதன் மூலம் ரூபா திரவத்தன்மையை உட்செலுத்தியதுடன் அதன் காரணமாக 2008 இறுதியில் மத்திய வங்கியின் உள்நாட்டு சொத்துக்கள் அதிகரித்தன.

**மத்திய வங்கியின் பொறுப்புகள் தொடர்பில், மத்திய வங்கியின் நாணய வழங்கல்கள் 2008இல் 7.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளுக்காக வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் வைப்புக்கள் 2007இல் 10.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இந்தக் குறைவினை ஆண்டின் இறுதிப்பகுதியளவில் நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாட்டின் 225 அடிப்படைப்புள்ளிகளிலான குறைப்பு மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கையின் காரணமாக ஒப்பீட்டளவில் வைப்புக்களின் தாழ்ந்த வளர்ச்சி போன்றவற்றிற்கு காரணப்படுத்த முடியும். 2008 காலப்பகுதியில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நாணயங்கள் 2007இல் உட்செலுத்தப்பட்ட ரூ.16.2 பில்லியன் நாணயங்களுடன் ஒப்பிடுமிடத்து ரூ.12.7 பில்லியனாக மாத்திரமே காணப்பட்டன.

**உள்நாட்டு சொத்துக்களின் முன்னெப்பொழுதும் இல்லாதவாறான அதிகரிப்பு, உலக நிதியியல் நெருக்கடி மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கம் போன்றவற்றினால் அவசியமாயிற்று.** உலகம் முழுவதிலும் இறுக்கமான திரவத்தன்மை நிலைப்பாடுகள் காணப்பட்டதன் விளைவாக வெளிநாட்டு நிதிகளின் கிடைப்பனவு மட்டுப்படுத தப்பட்டமையினால் அரசாங்கம் உள்நாட்டு நிதியிடலை நாட வேண்டியிருந்தது. ஆண்டின் இறுதிப்பகுதியில் உள்நாட்டுச் சந்தையில் ரூபாத் திரவத்தன்மை பற்றாக்குறையாக இருந்தமையினால் திரவத்தன்மையை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதாரச் செயற்பாட்டின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் போதுமான பணம் பொருளாதாரத்திற்கு உட்செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக வெளிநாட்டுச் சொத்துக்களின் கணிசமானளவு குறைவினை அதே அளவான உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பொன்றினால் ஈடுசெய்ய வேண்டியிருந்தது. இதனொரு விளைவாக, மத்திய வங்கியின் ஐந்தொகை பலவீனமடைந்தது நாடு கணிசமானளவு வெளிநாட்டு நாணய மாற்றத்தின் உட்பாய்ச்சலை பெற்றுக் கொள்ளும் வரை அண்மைய எதிர்காலத்தில் இந்தச் சூழ்நிலை தொடர்ந்தும் காணப்படும்.

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்


**2008இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் செயற்பாடுகள் மேலும் விரிவடைந்ததெனினும் அது மெதுவான வீதத்திலேயே காணப்பட்டது.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றுடன் ஒன்றிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் இடர்நேர்வை தாங்கும் இயலளவையும் மேலும் மேம்படுத்தின. உலக நிதியியல் நெருக்கடிச் சூழலில் இந்த மேம்பாடு பாராட்டுவதற்குரியது. 2008 இறுதியில் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் காணப்பட்டு 2,068 கிளைகளையும் 2,665 ஏனைய பணி நிலையங்களையும் கொண்டதொரு வலைப்பின்னலுடன் தொழிற்பட்டன. 2008 இறுதியில் 1,583 தன்னியக்க கூற்றுக் பொறிகள் காணப்பட்டு வங்கித்தொழில் சமூகம் அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைகளின் பெருமளவு தங்கியிருந்ததைப் பிரதிபலிக்கின்றது.

**மொத்த சொத்துக்களின் வளர்ச்சி 2007இன் 17.4 சதவீதத்திற்கெதிராக 2008இல் 8.5 சதவீதத்திற்கு தேய்வடைந்தது.** இதற்கு முக்கியமாக இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் உயர்த்தப்பட்ட முன்மதியுடைய தேவைப்பாடுகள் போன்றவற்றின் விளைவாக கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலின் வளர்ச்சி குறைவடைந்தமை காரணமாகும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2008 இறுதியில் ரூ.2,276.1 பில்லியனாகவிருந்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் துறைக்குள், மொத்த சொத்துக்களில் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 9.9 சதவீத வளர்ச்சியை பதிவு செய்த வேளையில் அரசிற்குச் சொந்தமான வங்கிகள் முக்கியமாக அவற்றின் வைப்புக்கள் தளம் மற்றும் மூலதன நிதிகளினால் ஆதரவளிக்கப்பட்டு 8.7 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன. வெளிநாட்டு வங்கிகள் 3.8 சதவீதத்தினைப் பதிவு செய்தன. சொத்துக்களிலான மொத்த வளர்ச்சியில் உள்நாட்டு தனியார் வங்கிகள், அரசிற்கு சொந்தமான வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் பங்களிப்பு முறையே 52.6 சதவீதம், 40.2 சதவீதம் மற்றும் 7.2 சதவீதமாகக் காணப்பட்டது. இதேவேளை, கடன்களின் விரைவான விரிவாக்கத்தை மிதமடையச் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளினால் சொத்துக்களின் மொத்த வளர்ச்சியில் மொத்தக்கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2008இல் 48.6 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. இது 2007இல் பதிவு செய்யப்பட்ட 69.0 சதவீதத்திலிருந்து ஒரு விரைவான வீழ்ச்சியாகும்.


**2008 இறுதியளவில் கடன் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சி கணிசமானளவு மெதுவடைந்தது.** மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் ரூ.1,453.2 பில்லியனாக விளங்கி 2007இன் 18.7 சதவீத வளர்ச்சிக்கெதிராக இவ்வாண்டில் 6.4 சதவீத வளர்ச்சியை மாத்திரம் பதிவு செய்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் முழுமொத்த வளர்ச்சியில் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் உள்நாட்டு தனியார் வங்கிகள் முறையே 58.3 சதவீதம் மற்றும் 35.6 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்த வேளையில் அரச வங்கிகள் 6.0 சதவீதத்தினை மாத்திரம் பங்களிப்பு செய்தது. வெளிநாட்டு வங்கிகள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதியுயர் ஆண்டு வளர்ச்சியை (16.9 சதவீதம்) பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்ததாக உள்நாட்டுத் தனியார் வங்கிகள் (7.8 சதவீதம்) காணப்பட்டன.

**வரைபடம் 8.1** உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் (2008 இறுதியிலுள்ளவாறு)

வரைபடம் 8.1.1
வர்த்தக் வங்கிகளின் நிதியங்களின் மூலங்கள்




வரைபடம் 8.1.2
வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் பயன்பாடுகள்




கொடுகடனின் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிர்ந்தளிப்பின்படி, **வங்கிகளினால் உயர்ந்த வீதங்கள் விதிக்கப்பட்ட போதும், மேலதிகப் பற்றுக்கள், அடகுபிடித்தல் மற்றும் கடன் அட்டைகள் மூலமான கொடுகடன்கள் என்பன முக்கிய உந்து சக்திகளாகவிருந்தன.** குத்தகை வசதிகளும் வியாபார செயற்பாடுகளுக்கான கொடுகடனும் ஒரு கடுமையான வீழ்ச்சியைக் காட்டின. அடகுபிடித்தல், முற்பணங்கள் மற்றும் கொடுகடன் அட்டைகள் உள்ளடங்கலாக நுகர்வு செயற்பாடுகள் (29.5 சதவீதம்), வர்த்தகம் (17.4 சதவீதம்), புடவை உற்பத்திகள் உள்ளடங்கலான தயாரிப்புக்கள் (16.3 சதவீதம்) மற்றும் சொத்து அபிவிருத்தி மற்றும் வீடமைப்பை உள்ளடக்கிய கட்டுமாணம் (14.9 சதவீதம்) ஆகியன உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் அதிகளவு கொடுகடன் வழங்கப்பட்ட துறைகளாகும். இந்த நான்கு துறைகள் மொத்த வெளிநின்ற கொடுகடனில் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகை கூறின. எனினும், இந்தத் துறைகளில் சிலவற்றிற்கான கொடுகடனின் விகிதம் 2007 இறுதியில் நிலவிய மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தது.

**இறுக்கமான நாணயக் கொள்கை நிலை மற்றும் உயர்வான செயற்படாக் கடன்கள் தொடர்பில் வங்கிகளின் அதிகளவு எச்சரிக்கை போன்றவற்றின் காரணமாக கொடுகடன் அட்டைகளினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் குறிப்பிடத்தக்களவு மெதுவடைந்தது.** ஒன்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கொடுகடன் அட்டைகளினூடாக சந்தைக்கு கொடுகடன்களை வழங்குகின்றன. இத்தகைய கடன் வழங்கலின் பிணையிடப்படாத தன்மையினால் கொடுகடன் அட்டைகளின் செலுத்தப்படாத நிலுவைகள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதம் 32.0 சதவீதம் முதல் 48.0 சதவீத வீச்சில் காணப்பட்டது. மொத்த கொடுகடன் அட்டை சொத்துப்பட்டியல் ரூ.34.7 பில்லியனாக காணப்பட்டு 2007இன் 34.2 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 18.9 சதவீதத்திலானதொரு வளர்ச்சியை பதிவு செய்தது. கொடுகடனின் ஏனைய பரப்புக்களின் மெதுவான வளர்ச்சியின் முக்கியமான காரணத்தினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த கடன் சொத்துப்பட்டியலில் கொடுகடன் அட்டைக் கடன்களின் பங்கு 2007இல் 2.2 சதவீதத்திலிருந்து 2008இல் 2.4 சதவீதமாக சிறிதளவு அதிகரித்தது.

கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட மற்றும் நிதியினை அடிப்படையாகக் கொண்ட **வர்த்தக வங்கிகளின் அரசதுறைக்கான மொத்த வெளிப்படுத்துகை தொடர்ந்தும் அதிகரித்தது.** இது முக்கியமாக உள்ளூர் அரச அமைப்புக்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கத்தினால் வங்கிக் கொடுகடன் அதிகளவில் பயன்படுத்தப்பட்டதனாலாகும்.

உலக நிதியியல் நெருக்கடிக்கு மத்தியிலும், **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முக்கிய நிதியியல் ஆற்றல் தன்மை வாய்ந்த குறிகாட்டிகள் ஆரோக்கியமான மட்டங்களில் பேணப்பட்டன.** முக்கியமாக தேறிய வட்டி அளவு மற்றும் மற்றைய கட்டணங்களை அடிப்படையாகக் கொண்ட வருமானம் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வரிக்கு முன்னைய இலாப நிதிகளில் இலாபத்தன்மை 1.9 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதத்திற்கு மேம்பட்டது. எனினும், முக்கியமாக மூலதன உள்ளீடு மற்றும் பிடித்து வைக்கப்பட்ட இலாபங்களினால் உருவாக்கப்பட்ட சராசரி பங்கு மூலதனத்திலான உயர்ந்த அதிகரிப்பினால் பங்கு மூலதனம் மீதான வருவாய் சிறிதளவு வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் துறை செலவு வினைத்திறனில் மேம்பாட்டினை தொடர்ந்தும்

**அட்டவணை 8.3** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கொடுகடன்அட்டைத் தொழிற்பாடுகள்

ரூ. மில்லியன்

| | 2007(அ) | 2008(ஆ) | %மாற்றம் |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 889,338 | 917,418 | 3.2 |
| உள்ளூர் (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 57,374 | 57,641 | 0.5 |
| உலகளாவிய (உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 831,964 | 859,777 | 3.3 |
| ஆண்டு இறுதியில் வெளிநின்ற கொடுகடன் (ரூ.மில்) | 28,838 | 34,212 | 18.6 |
| உள்ளூர் (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 758 | 856 | 12.9 |
| உலகளாவிய (உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 28,080 | 33,356 | 18.8 |
| வரவேண்டிய நிலுவை | | | |
| (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 7.02 | 6.91 | |
| வரவேண்டிய முன்னைய நிலுவை | 7.16 | 8.83 | |
| (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 1.5 - 4.0 | 1.5 - 4.0 | |
| வணிகர்களிடமிருந்தான தரகு | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 8.4** **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

ரூபா மில்லியன்

| விபரம் | 2007(அ) முடிவில் | 2008(ஆ) முடிவில் | மாற்றம் 2008/2007 தொகை | மாற்றம் 2008/2007 % |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| திரவச்சொத்துக்கள் | 613,775 | 730,604 | 116,829 | 19.0 |
| கையிலுள்ள பணம் | 29,390 | 34,264 | 4,874 | 16.6 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 95,238 | 88,624 | -6,614 | -6.9 |
| திறைசேரி உண்டியல்கள் | 92,297 | 86,838 | -5,459 | -5.9 |
| திறைசேரி முறிகள் | 132,176 | 194,150 | 61,974 | 46.9 |
| ஏனைய சொத்துக்கள் | 264,674 | 326,728 | 62,054 | 23.4 |
| **கடன்களும் முற்பணங்களும் (வட்டித் தொங்கல் நீங்கலாக)** | **1,370,230** | **1,455,804** | **85,574** | **6.2** |
| கழி : ஒதுக்கங்கள் | 48,468 | 56,412 | 7,944 | 16.4 |
| தேறிய : கடன்களும் முற்பணங்களும் | 1,321,762 | 1,399,393 | 77,631 | 5.9 |
| **நிலையான ஏனைய சொத்துக்களும்** | **162,742** | **146,118** | **-16,624** | **-10.2** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| மூலதன நிதியங்கள் | **161,710** | **180,564** | **18,854** | **11.7** |
| **மொத்த வைப்புக்கள்** | **1,456,701** | **1,562,779** | **106,078** | **7.3** |
| கேள்வி வைப்புக்கள் | 175,129 | 167,269 | -7,860 | -4.5 |
| தவணை, சேமிப்புவைப்புக்கள் | 1,208,363 | 1,330,279 | 121,934 | 10.1 |
| ஏனையவை | 73,209 | 65,213 | -7,996 | -10.9 |
| **கடன்பாடுகள்** | **373,853** | **409,920** | **36,067** | **9.6** |
| உள்நாட்டு கடன்பாடுகள் | 229,216 | 272,457 | 43,259 | 18.9 |
| வெளிநாட்டு கடன்பாடுகள் | 144,637 | 137,445 | -7,192 | -5.0 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | **106,015** | **122,852** | **16,837** | **15.9** |
| **மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **2,098,279** | **2,276,115** | **177,836** | **8.5** |

(அ) திருத்தியமைக்கப்ட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பிரதிபலித்தது. தொழிற்பாட்டு செலவினங்களில் ஊழியர்களது செலவின் தாக்கம் குறைவடைந்தமையின் முக்கிய காரணமாக தொழிற்பாட்டு விகிதம் 2007இல் 56.7 சதவீதத்திலிருந்து 2008இல் 54.3 சதவீதத்திற்கு மேலும் மேம்பாடடைந்தது. மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 10 சதவீதமாகக் குறைந்த தேவைப்பாட்டுடன் ஒப்பிடுமிடத்து 13.0 சதவீதமாகவிருந்து, திரவச் சொத்துக்கள் விகிதம் ஆகக் குறைந்த தேவைப்பாடான 20 சதவீதத்திற்கெதிராக 25.7 சதவீதமாகவிருந்தது.

**எனினும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தரம் தேய்வடைந்தது.** இது மொத்த செயற்படாக் கடன் விகிதம் 2007 இறுதியில் 5.0 சதவீதத்திலிருந்து 2008 இறுதியில் 6.0 சதவீதமாக அதிகரித்ததில் பிரதிபலிக்கப்பட்டது. கடன்பெறுநர்களின் மீளச் செலுத்தும் ஆற்றல் தேய்வடைந்தமையையும் இறுக்கமான பொருளாதாரச் சூழலில் வங்கிக் கைத்தொழில் முழுவதிலும் கொடுகடன் சொத்துப்பட்டியல் குறுகியதையும் இதற்கு காரணம் கற்பிக்க முடியும். ஒதுக்கீட்டு உள்ளடக்கங்களினால் கொடுகடன் இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த தீவிரத்தை குறைக்கும் தன்மை 2007 இறுதியில் 71.5 சதவீதத்திலிருந்து 64.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது தற்போதைய செயற்படாக் கடன்களின் ஏறத்தாழ 41.0 சதவீதமாகும். இது 50 சதவீதத்திற்கு குறைவான ஒதுக்கீட்டு தேவைப்பாட்டினை வேண்டி நிற்கும் வகையில் காணப்படுவதனாலாகும். செயற்படாக் கடன்களின் ஒப்பீட்டளவில் விரைவான வளர்ச்சியின் காரணமாக மூலதன விகிதத்தில் தேறிய செயற்படாக் கடன்களின் விகிதமும் 2007இல் 11.9 சதவீதத்திலிருந்து 2008 இறுதியில் 17 சதவீதத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் விரைவாக தேய்வடைந்தது.

**ஆயினும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 2008இல் தொடர்ந்து சிறப்பாகச் செயலாற்றின.** இது முக்கியமாக முக்கிய கடன்வழங்கல் செயற்பாடுகளின் மூலமான உயர்ந்த தேறிய வட்டி வீத அளவுகள், கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட வருவாயின் வளர்ச்சி மற்றும் வங்கிகளின் செலவு முகாமைத்துவத்தின் மீதான தொடர்ச்சியான அக்கறையினால் உயர்ந்த உற்பத்தித்திறனுக்கு இட்டுச்சென்ற தொழிற்பாட்டு வினைத் திறனிலான மேம்பாடு போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது. இதன்படி, வரிக்கு முன்னைய இலாபம் ரூ.45.7 பில்லியனாக விளங்கி 2007இல் 24.0 சதவீதத்திலானதொரு வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 21.7 சதவீதத்திலானதொரு வளர்ச்சியுடன் காணப்பட்டது. இத்துறையின் இலாபங்களிலான வளர்ச்சியில் வெளிநாட்டு வங்கிகள் 61 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்த வேளையில் உள்நாட்டு தனியார் வங்கிகள் 18.8 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன. வட்டி வருவாய் தொடர்ந்தும் வருவாயின்

**அட்டவணை 8.5 வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | 2007 (அ) முடிவில் | 2008 (ஆ) முடிவில் |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | **23** | **22** |
| உள்நாட்டு வங்கிகள் | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 12 | 11 |
| II. வர்த்தகவங்கிக்கிளைகளும் ஏனைய பணி நிலையஙக்களும் | **4,331** | **4,733** |
| கிளைகள் | 1,934 | 2,068 |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 1,758 | 1,894 |
| முதன்மைக் கிளைகள் | 1,261 | 1,355 |
| விரிவாக்க/ கொடுப்பனவு அலுவலகங்கள்/ பணிக்கரும பீடங்கள் | 497 | 539 |
| கடல்கடந்த கிளைகள் | 12 | 12 |
| வெளிநாட்டு வங்கிக்கிளைகளும் ஏனைய பணிநிலையங்களும் | 176 | 174 |
| கிளைகள் | 43 | 41 |
| ஏனைய பணிநிலையங்கள் | 133 | 133 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகள் | 2,397 | 2,665 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | **15** | **14** |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 6 | 6 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2 | 2 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 3 | 2 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 2 |
| II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | **620** | **636** |
| கிளைகள் | 409 | 423 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 218 | 219 |
| தேசிய சேமிப்பு வங்கி | 118 | 125 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 14 | 18 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 28 | 28 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 31 | 33 |
| ஏனைய பணி நிலையங்கள் | 36 | 38 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகள் | 175 | 175 |
| அனைத்து வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | **4,951** | **5,369** |
| தன்னியக்க கூற்றுப்பொறிகளின் மொத்த எண்ணிக்கை | **1,370** | **1,583** |
| விற்பனை நிலையங்களின் இலத்திரனியல் நிதிமாற்றல் வசதிகளின் மொத்த எண்ணிக்கை | **19,227** | **23,447** |
| வங்கித்தொழில் அடர்த்தி : | | |
| 100,000 ஆட்களுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | 9.7 | 10.2 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

முக்கிய மூலமாகவிருந்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வட்டி அளவு 2007இல் 4.5 சதவீதத்திலிருந்து 2008இல் 4.7 சதவீதத்திற்கு சிறிதளவு மேம்பாடடைந்தது. சொத்துக்கள் மீதான வரிக்கு முந்திய வருவாய் நியதிகளில் இலாபத்தன்மை முன்னைய ஆண்டிற்கு மேலாக மேம்பாடடைந்து 2.1 சதவீதமாகவிருந்தது. எனினும், இலாபங்களின் அதிகரிப்புகளு மாறாக சராசரி பங்கு மூலதனத்தின் உயர்வான அதிகரிப்பின் காரணமாக பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**2008இன் இறுதியில் மொத்த உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது.** அவற்றின் கிளை வலையமைப்பு 2008 இறுதியில் 423 ஆக அதிகரித்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் இலாபத்தில் தாழ்ந்த வளர்ச்சி காணப்பட்ட போதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையை கொண்டிருந்தன. அவற்றின் மொத்தச் சொத்துக்கள் 2007இன் 14.3 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 7.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த

**அட்டவணை 8.6 உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் துறைவாரியான பகிர்ந்தளிப்புக்கள் (அ)**

ரூ.மில்லியன்

| | 2007(ஆ) | மொத்த சதவீதபங்கு | 2008(இ) | மொத்த சதவீதபங்கு |
|---|---|---|---|---|
| ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட | | | | |
| மொத்தக் கடன்கள் | **68,367** | **100.0** | **68,462** | **100.0** |
| வேளாண்மை | 3,532 | 5.2 | 2,544 | 3.7 |
| கைத்தொழில் | 16,728 | 24.5 | 5,076 | 7.4 |
| சுற்றுலா | 274 | 0.4 | 266 | 0.4 |
| வர்த்தகம் | 5,584 | 8.2 | 2,556 | 3.7 |
| நிதியியல் | 11,653 | 17.0 | 11,655 | 17.0 |
| வீடமைப்பு | 17,378 | 25.4 | 13,080 | 19.1 |
| கடன் மீட்பு | 1,318 | 1.9 | 509 | 0.7 |
| ஏனைய கடன்கள் | 11,900 | 17.4 | 32,776 | 47.9 |
| வழங்கப்பட்ட கடன்கள் (ஈ) | **59,766** | | **66,087** | |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் | 87 | | 97 | |

(அ) பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நீங்கலாக
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதளிக்கப்பட்ட ஆனால் ஆய்வுக்குரிய காலப்பகுததியில் பகிர்ந்நதளிக்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்குகின்றது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வேளையில் அவற்றின் கடன்களும் முற்பணங்களும் 2007இன் 21.0 சதவீதத்திற்கு எதிராக 5.6 சதவீதத்தினால் மாத்திரமே வளர்ச்சியடைந்தன. 2007இன் இறுதியிலிருந்து மொத்த வைப்புக்கள் 10.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கடன் பெறுகைகள் 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியலில் வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி (32.8 சதவீதம்), நுகர்வோர் கடன் வழங்கல் (30.5 சதவீதம்) மற்றும் நிதியியல் சேவைகள் (11.1 சதவீதம்) போன்றவை முதன்மை வகித்தன.

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

**பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் சில பாதகமான அபிவிருத்திகள் காணப்பட்ட போதும் பன்னாட்டு நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகள் விரிவடைந்தன.** 2008இல் புதிய இரு கம்பனிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டதுடன் பன்னாட்டு நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 34 ஆக அதிகரித்தது. அதேவேளை பன்னாட்டு நிதிக் கம்பனிகளின் கிளைகள் மற்றும் பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2007இன் இறுதியில் 201 இலிருந்து 248 ஆக அதிகரித்தது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களில் 46 சதவீதத்திற்கு வகை கூறிய இரு பாரிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் இத்துறையின் சொத்துக்கள் திரண்டிருந்த பதிவு செய்யப்பட்ட அதேவேளை பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் சொத்துக்களில் எட்டு பாரிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் 75 சதவீதத்திற்கு வகை கூறின. நடுத்தரளவு கொண்ட பதினாறு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மொத்தச் சொத்துக்களில் 23 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் மிகச் சிறிய எட்டு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மொத்தச் சொத்துக்களில் 2 சதவீதத்திற்கு வகை கூறின. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் முதன்மையாக தாழ்ந்த வருமானக் குழுக்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து கொடுகடன் வசதிகள் கிடைக்காத குறைந்தளவு நம்பிக்கைத்

தன்மையுடைய வாடிக்கையாளர்களது தேவையை பூர்த்தி செய்கின்றன. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2007இன் ரூ.142 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டு காலப்பகுதியில் ரூ.176 பில்லியன் ரூபாவாக 23 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**பல்வேறு துறைகளுக்குமான கடன் வசதிகளின் வளர்ச்சி மெதுவடைந்தது.** பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தில் முக்கிய செயற்பரப்பாக நிதிக் குத்தகை, வாடகைக் கொள்வனவு மற்றும் பிணையிடப்பட்ட கடன்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 2007இல் பதிவு செய்யப்பட்ட 26 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2008இல் ரூ.112 பில்லியனுக்கு 17 சதவீதத்தினால் அதிகரித்தன. இந்த அதிகரிப்பு முக்கியமாக வாடகைக் கொள்வனவு, அடகுபிடித்தல் மற்றும் பிணையிடப்பட்ட முற்பணங்கள் மூலமாக ஏற்பட்டது. மொத்த கடன் வழங்கலில் 31 சதவீதத்திற்கு வகை கூறிய வாடகைக் கொள்வனவு வசதிகள் 23 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் மொத்த கொடுகடனில் 38 சதவீதத்திற்கு வகை கூறிய நிதிக் குத்தகை 1.5 சதவீதத்திலானதொரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நிதிக் குத்தகைகள் மீது மீளக் கோரல் ஒப்பிடத்தக்க உள்ளீட்டு பெறுமதிசேர் வரியின் மீது மேல் எல்லை விதிக்கப்பட்டமை நிதிக் குத்தகைகளிற்கான கேள்வியில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. உண்மைச் சொத்துக்களின் தொடர்பில் வழங்கப்பட்ட கடன்கள் இவ்வாண்டில் ரூ.10.8 பில்லியனை 17 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2008இல் அடகுபிடித்தலின் கீழ் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூ.5.5 பில்லியனாக 107 சதவீதத்தினால் அதிகரித்தமை தாழ்ந்த வருமானக் குழுக்களின் நிதியியல் இடர்பாடுகளது ஒரு குறிகாட்டியாக கருதப்படலாம்.

**நிதியிடலின் முக்கிய மூலமாக வைப்புக்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.** பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த வளங்களில் வைப்புக்கள் 59 சதவீதத்திற்கு வகை கூறியது. 2008இல் வைப்புப் பொறுப்புக்கள் ரூ.103 பில்லியனாக 32 சதவீதத்தினால் அதிகரித்தது. வைப்புக்களிலான வளர்ச்சிக்கு இவ்வாண்டில் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கிளை வலையமைப்பின் விரிவாக்கமும் காரணங்களாக இருக்க முடியும். பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் ஏனைய இரு முக்கிய நிதியிடல் மூலங்களாக கடன் பெறுகையும் மூலதன நிதிகளும் காணப்பட்டு மொத்த வளங்களில் முறையே 15 சதவீதம் மற்றும் 14 சதவீதத்திற்கு வகை கூறின.

**உயர்ந்த வட்டி வீதச் சூழலில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் முக்கிய வியாபார துறையான குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவில் வட்டி வேறுபாடு குறுக்கமடைந்தமையால் அவற்றின் இலாபத்தன்மையில் ஒரு குறைவினை எதிர்நோக்கின.** பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தொழிற்பாட்டு இலாபம் (வரிக்கு முந்திய) 2007இல் 2.6 பில்லியனிலிருந்து ரூ.2.3 பில்லியனுக்கு 12 சதவீதத்தினால் குறைவடைந்தது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் வட்டி வருவாய் 31 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை வட்டிச் செலவினங்கள் 50 சதவீதத்தால் அதிகரித்து தேறிய வட்டி வருவாய் குறைவடையச் செய்தது. ஏனைய தொழிற்பாட்டு வருவாய்கள் 27 சதவீதத்தினால் ரூ.5.1 பில்லியனுக்கு அதிகரித்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் இலாபங்களுக்கு ஆதரவளித்தது. எனினும் சந்தைப் பங்குபற்றுநர்களுக்கிடையிலான போட்டி, உயர்ந்த கடன்பெறுகை செலவினத்தினூடாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் இலாபத்தன்மையை குறைவடைச் செய்தது.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையின் மூலதன நிலைப்பாடு உறுதியடைந்தது.** நிதிக் கம்பனிகளுக்கான ஆகக் குறைந்த மூலதன தேவைப்பாடு 2008 யூலையிலிருந்து ரூ.100 மில்லியனிலிருந்து ரூ.200 மில்லியனாக அதிகரித்தது. சில சிறிய கம்பனிகள் தேவைப்பாட்டினை இன்னமும் பூர்த்தி செய்யாத போதும் பெரும்பாலான நிதிக் கம்பனிகள் அதிகரித்த தேவைப்பாட்டுடன் ஏற்கனவே இணங்கியொழுகியுள்ளன. உயர்ந்த மூலதன மட்டங்கள் 2008 எதிர்நோக்கிய அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிப்பதில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு ஆதரவளித்தது.

**நிதிக் கம்பனிகள் சட்டத்தின் தொடர்பில் வைப்புக்கள் மீதான வட்டி வீத மேல் எல்லைகள் மற்றும் கம்பனி ஆளுகை தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன.** கம்பனி ஆளுகை மீதான ஒழங்குவிதிகள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் முழுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆற்றல்மிக்க தன்மையை மேம்படுத்துவதற்காக வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு இயக்குநர் சபைகளை மிகுந்த கடப்பாட்டையும் பொறுப்புக்கூறும் தன்மையையும் கொண்டிருப்பதை உருவாக்குவதை நோக்காகக் கொண்டிருந்தது. ஒழுங்குவிதியின் முக்கிய விடயங்கள் இயக்குநர் சபை இயக்குநர்களின் உள்ளமைப்பு மற்றும் பொறுப்புக்கள், இயக்குநர்களின் தகுதி மற்றும் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான பிரமாணம், இயக்குநர் சபைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முகாமைத்துவத் தொழிற்பாடுகள், முதன்மை நிறைவேற்று இயக்குநர் மற்றும் தலைவர் பணிகளினை வேறுபடுத்தல், இயக்குநர் சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்டதாகவிருந்தது. ஒழுங்குவிதி அவசியமான மாறிச் செல்லும் இடைக்கால ஏற்பாடுகளுடன் 2009 சனவரி 1ஆம் நாளிலிருந்து பிரயோகிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அதிகாரம் வழங்கப்படாமல் நிதியியல்துறை வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிறுவனங்களின் மீது தனது விசாரணைகளை தொடர்ந்தது. எனினும், அதிகாரம் வழங்கப்படாமல் நிதியியல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பல்வேறு நிறுவனங்கள் முறிவடைந்தமை வைப்பாளர்களுக்கிடையில் அதிகரித்த நம்பிக்கையின்மைக்கு வழிவகுத்ததுடன் 2008 இறுதிப்பகுதியில் சில பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தீவிரமான திரவத்தன்மை பிரச்சனைகளுக்கு காரணமாகியது.

### சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

**2008இல் மூன்று புதிய கம்பனிகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் 2008இல் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 22இற்கு கொண்டு வரப்பட்டது.** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களில் நான்கு பாரிய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் 71 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் 10 நடுத்தரளவு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் 6 சிறியளவு

சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் அவற்றின் மொத்தச் சொத்துக்களில் முறையே 27 சதவீதம் மற்றும் 2 சதவீதத்திற்கு வகை கூறின. மொத்த நிதிக் குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வியாபாரத்தில் 90 சதவீதத்திற்கு மேல் வகை கூறிய வர்த்தக மற்றும் தனிப்பட்ட வாகன நிதியிடலில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் முதன்மையாக ஈடுபட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2008இல் ரூ.110 பில்லியனுக்கு 15 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் தேறிய இலாபங்கள் 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தமது நிதியிடல் தேவைகளுக்கு பிரதானமாக வங்கிக் கடன்பெறுகையில் தங்கியுள்ளதுடன் ஏறத்தாழ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன. எனவே, சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் போட்டித்தன்மையான வீதத்தில் வங்கித்தொழில் மூலங்களிலிருந்து நிதிகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கின. இந்த நிலைப்பாட்டைத் தளர்த்துவதற்காக படுகடன் கருவிகளை வழங்குவதனூடாக நிதிகளை திரட்டுவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு மத்திய வங்கி 2008இல் அனுமதியளித்தது. பெரும்பாலான சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பொதுவாக நிலையான வட்டி வீதங்களைக் கொண்டதாக நீண்ட கால சொத்துக்களுக்கு குறுங்கால கடன்பெறுகைகளினூடாக நிதியளித்தன. வட்டி வீதங்கள் மேல் நோக்கி நகர்கின்றதானதொரு சூழலில் இது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டிருந்தது. சந்தை பங்குபற்றுநர்களுக்கிடையிலான இறுக்கமான போட்டி மற்றும் பன்னாட்டு ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் பாதகமான நிதியியல் சந்தை அபிவிருத்திகளின் எதிர்பாராத தாக்கம் போன்றவையும் 2008இல் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் குறைவடைந்த இலாபத்தன்மைக்கான காரணங்களாகும். எனினும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளால் பேணப்பட்ட வலுவான மூலதனத் தளம் இத்தகைய பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதனை இயலச் செய்துள்ளன.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

### முதனிலை வணிகர்கள்

**ஆண்டின் பெரும்பாலான பகுதிகளின் அரச பிணையங்கள் சந்தையில் விளைவு வீதங்கள் குறைவடைந்ததால் 2008 காலப்பகுதியில் முதனிலை வணிகர்கள் தொழில்துறை சிறப்பாகச் செயலாற்றியது.** எனினும், சொத்துப்பட்டியல்களை மீளக்கட்டமைப்பதற்கு வழிவகுத்த சந்தை வட்டி வீதங்களின் உயர்வின் காரணமாக 2008இன் இறுதிப்பகுதியில் சில மீள்மதிப்பீட்டு நட்டங்கள் காணப்பட்டன. முதனிலை வணிகர்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் 59 சதவீதத்தினால் அதிகரித்து 2008இன் இறுதியில் ரூ.83 பில்லியனாகவிருந்தது. அவற்றின் மூலதனத்தளமும் 2008 இறுதியில் 14 சதவீதத்தால் அதிகரித்து ரூ.6.4 பில்லியனாக காணப்பட்டது. 2008இல் முதனிலை வணிகர் துறையின் வரிக்கு முந்திய தேறிய இலாபங்கள் ரூ.1.6 பில்லியனாக கணிசமானளவு அதிகரித்தன. இதன் விளைவாக, முதனிலை வணிகர் துறையின் நிதியியல் குறிகாட்டிகள் மேம்பாடடைந்தன. சொத்துக்கள் மீதான வருவாய் 2.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பங்கு மூலதனம் மீதான வருவாய் 26.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் போதுமாந்தன்மை 35.2 சதவீதத்திலிருந்து 16.5 சதவீதத்திற்கு குறைவடைந்து மூலதனத்தின் உயர்ந்த பயன்பாட்டைக் குறித்து நிற்கின்றது. மூலதனப் போதுமாந்தன்மை வீதம் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 8 சதவீதத்தினைவிட மிகவும் உயர்வாகக் காணப்பட்டது. ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய நிதியியல்துறைகளின் நெருக்கடி திரவத்தன்மை நெருக்கடிகளின் வடிவத்தில் முதனிலை வணிகர்கள் துறையை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாதித்தது. எனினும், முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியின் திறந்த சந்தை தொழிற்பாட்டு வசதியை பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டமையினால் இந்தப் பிரச்சனை பெருமளவில் தீர்க்கப்பட்டது.

**அட்டவணை 8.7 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகளால் வழங்கப்பட்ட குத்தகையிடல் மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகளின் துறைவாரியான பகுப்பாய்வு**

ரூ.மில்லியன்

| துறை | 2007 (அ) காலப்பகுதியில் | 2008 (அ) காலப்பகுதியில் |
|---|---|---|
| வேளாண்மை | 1,732 | 3,114 |
| கைத்தொழில் | 1,795 | 1,638 |
| வர்த்தகம் | 20,462 | 22,811 |
| போக்குவரத்து | 26,245 | 33,369 |
| கட்டடவாக்கம் | 1,165 | 1,000 |
| பணிகள் | 9,939 | 11,501 |
| ஏனையவை | 2,797 | 3,207 |
| **மொத்தம்** | **64,135** | **76,640** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**நீண்டகாலமாக உரைக்கப்பட்ட தேவையான முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர் பாதுகாப்பை உயர்த்துவது 2008இல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.** இரண்டாந்தர சந்தையில் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் தொடர்பில் முதலீட்டாளர் பாதுகாப்பை உயர்த்தும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களம் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையை அறிமுகப்படுத்தியது. இது முதனிலை வணிகர்களினாலும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளாலும் அவற்றின் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் பொதுவாக பயன்படுத்த முடியும். முதனிலை வணிகர்களது சம்மேளனம் மற்றும் இலங்கை வங்கிகள் சம்மேளனத்தினுடன் இணைந்து இந்த உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் 2009 சனவரியிலிருந்து பயன்படுத்தப்பட்டது.

### நம்பிக்கைக் கூறுகள்

**2008இல் மூன்று புதிய நம்பிக்கைக் கூறுகள் உருவாக்கப்பட்டதன் காரணமாக நம்பிக்கைக் கூறுகள் துறை விரிவடைந்தது.** எனினும், ஆண்டின் இறுதிப்பகுதியில் பங்குச்சந்தை விலைகள் வீழ்ச்சியடைந்ததால் பங்குகள் மீதான கணிசமான முதலீடுகள் பாதிக்கப்பட்டன. 17 நம்பிக்கைக் கூறுகள் காணப்பட்டதுடன் இவற்றுள் 13 திறந்த நிதியங்களாகவும் 4 மூடிய நிதியங்களாகவும் காணப்பட்டன. இந்த நம்பிக்கைக் கூறுகளில் 8 வருவாய் நிதியங்களாகவும் 4 வளர்ச்சி நிதியங்களாகவும் 4 சமநிலைப்படுத்தப்பட்ட நிதியங்களாகவும் 1 சுட்டெண் நிதியமாகவும் காணப்பட்டன. நம்பிக்கைக் கூறு உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 22,699 ஆக

சிறிதளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் வழங்கப்பட்ட நம்பிக்கைக் கூறுகளின் மொத்த எண்ணிக்கை 638 மில்லியனாக அதிகரித்து உடமை ஒருமிப்பு அதிகரித்திருப்பதனை குறித்து நிற்கின்றது. நம்பிக்கைக் கூறுகள் 5 கம்பனிகளால் முகாமை செய்யப்படுவதுடன் அவை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நம்பிக்கைக் கூறுகளின் தொடர்புபட்ட நிதியங்களின் பத்திரங்களிலும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நம்பிக்கைக் கூறு குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு வரையறைகளின் தொடர்பில் இவற்றின் வெளிப்படுத்துகை மட்டங்களை கண்காணிக்கின்றது. 2008 இறுதியில் நம்பிக்கைக் கூறுகள் துறையின் தேறிய சொத்துப் பெறுமதி 8 சதவீதத்தால் அதிகரித்தது. பங்குச் சந்தை 2008 செத்தெம்பரிலிருந்து வீழ்ச்சியடைந்ததால் நிதியங்களின் பங்குகளிலான முதலீடுகளின் தேறிய சொத்துக்களின் பெறுமதியில் ஒரு தேய்வை எதிர்நோக்கின. எனினும், பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியல்களின் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் விலைச் சுட்டெண்களைவிட இத்தகைய நிதியங்கள் சிறப்பாகச் செயலாற்றின. அரச பிணையங்களில் பெருமளவாக முதலீடுகளைக் கொண்ட நிதியங்கள் உயர்ந்த வருவாய்களைக் கொண்டிருந்தன. கடந்த சில ஆண்டுகளாக மொத்த நம்பிக்கைக் கூறு முதலீடுகளின் பங்குகளின் பகுதி 2004இல் 70 சதவீதத்திலிருந்தும் 2007இல் 58 சதவீதத்திலிருந்தும் வீழ்ச்சியடைந்தாலும் 2008இல் கூறு நம்பிக்கைக் கூறுகளின் மொத்த முதலீடுகளில் 38 சதவீதத்திற்கு வகை கூறின. அரச பிணையங்களின் முதலீடுகளின் பங்கு 38 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் கம்பனிப் படுகடன் பிணையங்கள் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

### துணிகர தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள்

**துணிகர முயற்சி மூலதனக் கம்பனிகளின் முதன்மை வியாபாரம் முக்கியமான புதிய துணிகர முயற்சிகளை அறிமுகம் செய்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு பங்கு மூலதனம் வழங்குவதாகும்.** இவ்வாண்டில் செயற்பாடுகளில் ஒரு சிறியளவான அதிகரிப்புக் காணப்பட்டது. 2008 இறுதியில் துறையின் மூன்று கம்பனிகள் ரூ.804 மில்லியன் மொத்த முதலீடுகளுடன் 34 செயற்றிட்டங்களிற்கு நிதியளித்தன. துணிகர தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் தொடர்ந்தும் வலு மற்றும் நலக்கவனிப்பு துறையின் மீதான முதலீடுகளில் கவனம் செலுத்துகின்றன.

### ஒப்பந்தரீதியான சேமிப்பு நிறுவனங்கள்

#### ஓய்வுகால நல நிதியங்கள்

**ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், அரசதுறை சேமலாப நிதியம், பங்களிப்புச் செய்யும் ஓய்வூதிய நிதியம் மற்றும் தனியார் சேமலாப நிதியம் போன்ற எல்லா நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2008இல் ரூ.876 பில்லியனாக 16 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** அரச பணிகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் பங்களிப்புச் செய்யும் ஓய்வூதிய நிதியம் போன்றவை முறையே ரூ.19 பில்லியன் மற்றும் ரூ.1.2 பில்லியன் சொத்துத் தளத்தை கொண்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, 2008இல் 176 தனியார் சேமலாப நிதியங்கள் ரூ.108 பில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்களுடன் தொழிற்பட்டன.

**அட்டவணை 8.8**
**முக்கிய ஓய்வுகால நல நிதியங்களின் முக்கிய குறிகாட்டிகள்**

| | ஊ.சே.நி | | ஊ.ந.நி | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2007 | 2008 |
| கணக்குகளினுடைய எண்ணிக்கை (மில்) | 11.9 | 12.5 | 7.9 | 8.0 |
| இதில் : செயற்படும் கணக்குகள் (%) | 18.5 | 18.4 | 24.1 | 26.3 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்வழங்குநரினுடைய எண்ணிக்கை | 61,116 | 64,000 | 54,904 | 58,446 |
| மொத்தப் பங்கிளப்புக்கள் (ரூ.பில்) | 40.6 | 46.0 | 7.3 | 8.3 |
| மொத்த மீள்செலுத்துகைகள் (ரூ.பில்) | 21.8 | 25.6 | 4.1 | 4.9 |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த வெளிநின்ற மீதி (ரூ.பில்) | 549.4 | 645.0 | 75.9 | 88.9 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்) | 562.4 | 655.3 | 78.7 | 92.4 |
| மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 541.5 | 627.2 | 73.5 | 86.8 |
| இதில் : அரச பிணையங்கள் (%) | 96.5 | 96.9 | 90.6 | 91.4 |
| மொத்த வருமாணம் (ரூ.பில்) | 59.4 | 74.7 | 8.3 | 11.5 |
| அங்கத்தவர் கணக்குகளுக்கு செலுத்தப்பட்ட வட்டி வீதம் (%) | 11.20 | 13.40 | 10.25 | 12.00 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**நாட்டின் பிரதான ஓய்வுகால நல நிதியமான ஊழியர் சேமலாப நிதியம் அதிகரித்த தேறிய பங்களிப்பு, முதலீட்டு வருவாய் மற்றும் சொத்துக்களுடன் விரிவாக்கமடைந்தது.** ஊழியர் சேமலாப நிதியம் தொழில் ஆணையாளரால் நிருவகிக்கப்படுகின்ற வேளையில் நிதியினை முகாமை செய்யும் கடப்பாடு மத்திய வங்கியின் நாணயச் சபைக்கிருக்கின்றது. ஊழியர் சேமலாப நிதியம் 12.5 மில்லியன் கணக்குகளைக் கொண்டிருப்பதுன் இதில் ஏறத்தாழ 2.3 மில்லியன் பங்களிப்புச் செய்கின்ற செயற்படுகின்ற கணக்குகளாகும். வேறுபாட்டிற்கு சில அங்கத்தவர்கள் பல்வேறு கணக்குகளை கொண்டிருப்பதே முக்கிய காரணமாகும். ஊழியர் சேமலாப நிதியம் பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 5 சதவீதத்தால் அதிகரித்து 2008இல் 64,000 ஆக உயர்வடைந்தது. 2008 இறுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 17 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.655 மில்லியனாக விளங்கியது. மொத்தப் பங்களிப்புக்கள் மற்றும் மீளப் பெறுகைகள் முறையே ரூ.46 பில்லியன் மற்றும் ரூ.26 பில்லியனாகக் காணப்பட்டு முறையே 14 சதவீதம் மற்றும் 19 சதவீதம் அதிகரிப்புக்களை பதிவு செய்தன. ஊழியர் சேமலாப நிதியம் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் 16 சதவீதத்தினால் ரூ.627 பில்லியனாக அதிகரித்து மொத்தச் சொத்துப்பட்டியலில் 97 சதவீதத்திற்கு வகை கூறிய அரச பிணையங்களை முதன்மையாகக் கொண்டிருந்தது. ஊழியர் சேமலாப நிதியம் இவ்வாண்டில் ரூ.75 பில்லியனை மொத்த வருவாயாக உழைத்துள்ளது. 2008இற்காக அங்கத்தவர் மீதிகளுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட விளைவு வீதம் 13.4 சதவீதமாக காணப்படுகின்றது. இந்தப் பிரகடனப்படுத்தப்பட்ட வீதம் 2008இல் ஆண்டு சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமான 10.3 சதவீதத்தை விட உயர்வானதாகும்.

**நாட்டில் தொழில்தருநர் பங்களிப்புச் செய்யும் ஓய்வு கால நலத்திட்டமான ஊழியர் நம்பிக்கை நிதியமும் உயர்ந்த தேறிய பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாய்களுடன் அதன் சொத்துத் தளத்தில் ஒரு அதிகரிப்பை பதிவு செய்தது.** நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் முகாமை செய்யப்படுகின்ற ஊழியர் நம்பிக்கை நிதியம் 8 மில்லியன் கணக்குகளையும் இதில் 2.1 மில்லியன் செயற்படும் கணக்குகளையும் கொண்டிருக்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற தொழில்தருநரின் மொத்த எண்ணிக்கை 58,446 ஆக காணப்பட்டு 2008இல் 6 சதவீத அதிகரிப்பொன்றினைக் கொண்டிருந்தது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2008இல் 18 சதவீதத்தினால் ரூ.92 பில்லியனாக அதிகரித்த வேளையில் 2008இல் மொத்தப் பங்களிப்புக்கள் 14 சதவீதத்தினால் ரூ.8 பில்லியனுக்கு அதிகரித்தது. அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஓய்வுகால நலன்கள் ரூ.5 பில்லியனாக விளங்கி 20 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. 2008இல் நிதிகளின் தேறிய உட்பாய்ச்சல் சிறிதளவு அதிகரித்தது. 2008 இறுதியில் மொத்த வெளிநின்ற அங்கத்தவர் மீதி 17 சதவீதத்தினால் ரூ.89 பில்லியனாக உயர்வடைந்தது. 2008 இறுதியில் மொத்த முதலீடுகள் 18 சதவீத அதிகரிப்புடன் ரூ.87 பில்லியனாகக் காணப்பட்டதுடன் அரச பிணையங்கள் மீது அதிகளவில் (91 சதவீதம்) குவிந்திருந்தது.

### காப்புறுதிக் கம்பனிகள்

**காப்புறுதித்துறை மிதமான வளர்ச்சியை பதிவு செய்தது.** நிதியியல் முறைமையின் மொத்த சொத்துக்களில் காப்புறுதித்துறை ஏறத்தாழ 3 சதவீதத்திற்கு வகை கூறியது. காப்புறுதியின் பரப்பெல்லை சனத்தொகையின் 10 சதவீதத்திற்கு குறைவாகவிருப்பதாக மதிப்பிடப்பட்டிருப்பதனால் இத்துறைக்கு வளர்ச்சிக்கான கணிசமான வாய்ப்பு காணப்படுகிறது. காப்புறுதித்துறை 16 கம்பனிகளை உள்ளடக்கியிருப்பதுடன், இதில் 11 கம்பனிகள் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் ஈடுபடுகின்ற கூட்டு காப்புறுதியாளராகவும், அதேவேளை 3 கம்பனிகள் தனியே பொதுக் காப்புறுதியில் மாத்திரம் ஈடுபட்டுள்ளதுடன் 2 கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் நடாத்துகின்றன. ஐந்து கம்பனிகள் வெளிநாட்டு காப்புறுதிக் கம்பனிகளுடன் கூட்டு நடவடிக்கைகளை கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, 50 காப்புறுதி தரகர்களும் 25,000 காப்புறுதி முகவர்களும் காணப்படுகின்றனர். இரு கம்பனிகள் காப்புறுதித் துறையின் சொத்துக்களில் 66 சதவீதத்திற்கு வகை கூறுகின்ற வேளையில் மொத்தக் காப்புறுதி சொத்துக்களில் பாரிய சொத்து நிறுவனங்கள் 94 சதவீதத்திற்கு வகை கூறின. நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதிக்கான காப்புறுதிக் கட்டண வருவாய் 2008இல் 14 சதவீதம் மற்றும் 11 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து கடந்த ஆண்டுன் ஒப்பிடுமிடத்து ஒரு மிதமடைதலைக் குறித்து நிற்கின்றது. 2008 இறுதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 15 சதவீதத்தினால் ரூ.155 பில்லியனாக அதிகரித்தன. பெரும்பான்மையாக காப்புறுதிக் கம்பனிகள் 2008இல் விற்கப்படாத பங்குகள் கொள்வனவினையும் தொழிற்பாட்டு இலாபங்களையும் அடைந்தன.

**அனைத்துக் கம்பனிகளும் கடன் தீராற்றல் அளவுத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்தன.** காப்புறுதிக் கம்பனிகளின் ஆற்றல்மிக்க தன்மையை அளவிடுகின்ற முக்கிய குறிகாட்டியாக கடன் தீராற்றல் அளவு காணப்படுகின்றது. 2008இல் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி இரண்டும் தொடர்பாக அனைத்து கம்பனிகளும் கடன் தீராற்றல் அளவு தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுகின்றன. இவ்வாண்டில் இத்துறையில் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி இரண்டிற்குமான கடன் தீராற்றல் அளவு விகிதங்களின் அதிகரிப்பு இத்துறையின் ஆற்றல்மிக்க தன்மை மட்டங்களில் ஒரு மேம்பாடு காணப்படுவதை குறித்து நிற்கின்றது. ஒரு முன்மதியுடைய தேவைப்பாடாக காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் நீண்டகால நிதிகளில் ஆகக் குறைந்தது 30 சதவீதத்தையும் பொதுக் காப்புறுதிகளின் தொழில்நுட்ப ஒதுக்குகளில் 20 சதவீதத்தையும் அரச பிணையங்களில் பேணிக் கொள்ள வேண்டும். 2008இல் காப்புறுதிக் கம்பனிகள் தமது முதலீடுகளின் பெரும்பகுதியை வேறுபட்ட முதிர்வுகளைக் கொண்ட அரச பிணையங்களில் (நீண்ட காலத்தில் 49 சதவீதமும் பொதுக் காப்புறுதி ஒதுக்கங்களில் 29 சதவீதமும்) கொண்டிருந்ததுடன் இது அவற்றின் உழைப்புக்களை வலுப்படுத்தியதுடன் இடர்நேர்வுகளைக் குறைப்பதில் துணை புரிந்துள்ளது. 2008 சனவரியிலிருந்து காப்புறுதி கம்பனிகள் பொதுக் காப்புறுதி தவணைக் கட்டணத்தின் 20 சதவீதத்தை தேசிய காப்புறுதி நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டது. இது மொத்தத் தவணைக் கட்டணத்தில் ஒரு கணிசமான பகுதி நாட்டில் தடுத்து வைத்திருக்கப்படுவதை உறுதிப்படுத்தும். காப்புறுதி கொள்கை வைத்திருப்பவர்களினைப் பாதுகாப்பதற்கான நிதியானது காப்புறுதி கம்பனிகள் மீது அறவிடப்படும் செஸ் வரியினால் நிதியிடப்படுவதுடன் காப்புறுதியாளர் தனது கடப்பாடுகளை பூர்த்தி செய்யத் தவறும் போது காப்புறுதிக் கொள்கை வைத்திருப்பவரை பாதுகாப்பதற்கு பயன்படுத்தபட முடியும்.

**காப்புறுதித் துறையுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, மேற்பார்வை மற்றும் நிறைவேற்றல் அமைப்பு தொடர்ந்தும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.** காப்புறுதிக் கம்பனிகளின் இடர்நேர்வு மதிப்பிடுவதற்காகவும் இடர்நேர்வை குறைப்பதற்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை உறுதிப்படுத்துவதற்காகவும் காப்புறுதிக் கம்பனிகளும் முகவர்களும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதை கண்காணிப்பதற்காக இலங்கை காப்புறுதிச் சபை தலத்திலான கண்காணிப்புக்களையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களையும் நடாத்துகின்றது. காப்புறுதி கம்பனிகளின் ஆகக் குறைந்த மூலதன தேவைப்பாட்டை தற்போதைய ரூ. 100 மில்லியனிலிருந்து 2009இல் ஒவ்வொரு வகை காப்புறுதி வியாபாரத்திற்கும் ரூ.250 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு இலங்கை காப்புறுதிச்சபை பரிந்துரைத்துள்ளதுடன் 2010 அளவில் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதன போதுமாந்தன்மை கட்டமைப்பிற்கு நகருவதற்கான செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காப்புறுதி கைத்தொழில் முழுமைக்கும் முன்மதியுடைய மேற்பார்வை தொடர்பில் ஒழுங்குபடுத்துநரின் அதிகாரங்களை வலுப்படுத்துவதற்காக காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு அனைத்தையுமுள்ளடக்கிய திருத்தங்களை இலங்கை காப்புறுதிச்சபை தயாரித்துள்ளதுடன் இது மேலும் தாமதமின்றி சட்டமாக்கப்பட வேண்டும்.

## 8.4 நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

**வங்கித்தொழில் முறைமையின் திரவத்தன்மை நிலைப்பாடு இறுதிக் காலாண்டிலிருந்த திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மாறாக 2008இன் முதல் ஒன்பது மாதங்களில் மிகையாகக் காணப்பட்டது.** 2008இன் முதல் மூன்று காலாண்டுகளில் மிதமிஞ்சிய திரவத்தன்மையின் நாளாந்த சராசரி ரூ.5 பில்லியனாக காணப்பட்ட வேளையில் நான்காம் காலாண்டில் திரவத்தன்மைப் பற்றாக்குறையின் நாளாந்தச் சராசரி ரூ.10 பில்லியனாக காணப்பட்டது. வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணக் கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்த அளவு முதல் மூன்று காலாண்டுகளில் ரூ.6.8 பில்லியனிலிருந்து

ஆண்டின் இறுதிப்பகுதியிலான திரவத்தன்மை பற்றாக்குறையை பிரதிபலித்து நான்காம் காலாண்டில் ரூ.11.8 பில்லியனுக்கு உயர்வடைந்தது. 2008இல் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்த அளவு சராசரியாக ரூ.8 பில்லியன்களாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டை ஒத்ததாகக் காணப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து, நான்காம் காலாண்டில் காணப்பட்ட ரூபாத் திரவத்தன்மை நெருக்கடியினைத் தொடர்ந்து உள்நாட்டில் வெளிநாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மையான டொலர் மீதிகளுக்கான பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக மத்திய வங்கி வெளிநாட்டு நாணய மாற்றத்தினை வழங்கியுள்ளது.

**மத்திய வங்கியினால் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் தளம்பல்களை கட்டுப்படுத்த முடிந்துள்ளது.** சில சந்தர்ப்பங்களில் அதாவது ஏப்பிறலில் பண்டிகைக் காலம் மற்றும் சனவரி, மே மற்றும் யூனில் சில நாட்களில் திரவத்தன்மை பற்றாக்குறைகள் காணப்பட்ட போது அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 19 - 21 சதவீதத்திற்கு உயர்வடைந்த போதிலும் 2008இன் முதல் ஒன்பது மாதங்களில் 13.5 - 15.5 சதவீத வீச்சில் காணப்பட்டன. இறுதிக் காலாண்டில் அழைப்பு பணச்சந்தை வீதங்கள் சராசரியாக 15 - 16.5 சதவீதத்திற்கு மேல் நோக்கி நகர்ந்தது. மத்திய வங்கி சந்தைப்பங்குபற்றுனர்களுடனான அதன் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின்மீது அறவிடப்படும் தண்டவட்டிவீதம் 2008இல் 19 சதவீதமாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் இது சந்தைவட்டி வீதத்திற்கான அடிப்படையாகத் தொழிற்பட்டது. மத்திய வங்கி ஆண்டின் இறுதிப்பகுதியில் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதத்தில் இரு தொடர்ச்சியான குறைப்புக்களின் மூலம் அதன் திறந்த சந்தை தொழிற்பாடுகளினூடாக ரூ.24.5 பில்லியனை நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு நிதியை உட்செலுத்தியமை 2008இல் பணச்சந்தை வீதங்களின் தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்குத் துணைபுரிந்தது.

**அட்டவணை 8.9 — பணச் சந்தைத் தொழிற்பாடுகள் 2006 - 2008**

ரூ.மில்லியன்

| | | அழைப்புப் பணச்சந்தை | | முதலாம்தர திறைசேரி உண்டியல் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|
| | | நாளாந்த சராசரி அளவு | வழங்கப்பட்ட தொகை | கொள்வனவு செய்யப்பட்ட தொகை | | |
| | | | | மத்திய வங்கி | முதனிலை வணிகர்கள் | ஏனையவை (அ) |
| 2006 | 1ஆம் காலாண்டு | 4,807.71 | 147,481 | 16,796 | 117,443 | 13,242 |
| | 2ஆம் காலாண்டு | 7,013.61 | 144,412 | 28,731 | 101,630 | 14,051 |
| | 3ஆம் காலாண்டு | 6,494.94 | 152,254 | 47,755 | 88,144 | 16,355 |
| | 4ஆம் காலாண்டு | 8,767.95 | 183,719 | 71,581 | 89,785 | 22,353 |
| 2007 | 1ஆம் காலாண்டு | 7,555.30 | 141,804 | 35,051 | 89,069 | 17,684 |
| | 2ஆம் காலாண்டு | 6,274.05 | 239,165 | 78,726 | 98,530 | 61,909 |
| | 3ஆம் காலாண்டு | 7,220.77 | 212,007 | 68,138 | 94,253 | 49,616 |
| | 4ஆம் காலாண்டு | 7,592.39 | 224,212 | 40,946 | 106,606 | 76,660 |
| 2008 | 1ஆம் காலாண்டு | 6,295.21 | 201,330 | 8,156 | 92,186 | 100,988 |
| | 2ஆம் காலாண்டு | 6,208.72 | 212,181 | 17,139 | 78,232 | 116,810 |
| | 3ஆம் காலாண்டு | 5,579.00 | 164,368 | 10,262 | 57,746 | 96,360 |
| | 4ஆம் காலாண்டு | 9,657.76 | 201,697 | 148,170 | 24,432 | 29,095 |

(அ) தனிப்பட்ட இடமளிப்புகளினூடாக வழங்கப்பட்ட தொகைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தை

**2008 ஒத்தோபர் இறுதி வரையில் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனாலும் அதன் பின்னர், இந்தப் போக்கு கணிசமானளவு எதிரிடையாக மாறியது.** 2007 திசெம்பரிலிருந்து திறைசேரி முறிகளின் 10 சதவீதம் வரையும் 2008 மே மாதத்திலிருந்து திறைசேரி உண்டியல்களின் 10 சதவீதம் வரையும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வைத்திருப்பதற்கு அனுமதியளித்ததன் மூலம் அரச பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீடு மேலும் தாராளமயமாக்கப்பட்டது. 2008 ஓகத்து இறுதி வரை நாட்டின் அதிகரித்த வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களிற்கு பங்களிப்புச் செய்து இந்தக் காலப்பகுதியில் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காகவும் நாணய மாற்று வீதத்தின் தளம்பலையும் அளவுக்கு மிஞ்சிய பெறுமதி உயர்வடைதலையும் கட்டுப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தை சந்தையிலிருந்து கொள்வனவு செய்தது. எனினும், பன்னாட்டு ரீதியில் இறுக்கமான திரவத்தன்மை நிலைப்பாடுகளினைக் கொண்டு வந்த உலக நிதியியல் நெருக்கடியினொரு விளைவாக 2008 செத்தெம்பரின் பின்னர் சூழ்நிலை மாற்றமடைந்தது. வெளிநாட்டு நிதிகளின் கணிசமானளவு வெளிப்பாய்ச்சலைத் தொடர்ந்து, குறிப்பாக அரச பிணையங்களிலிருந்து, உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையின் இறுக்கமான திரவத்தன்மை நிலைப்பாடுகளுள்ள சூழ்நிலையில் இறக்குமதியாளர்களின் ஐ.அ.டொலருக்கான கேள்வி நாணயமாற்று வீதத்தில் அழுத்தத்தினைத் தோற்றுவித்தது. எனவே, ஐ.அ.டொலரை விற்பதன் மூலம் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையிட்டது. அதேநேரம், வர்த்தக வங்கிகளது ஊக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணிகளின் தேறிய திறந்த நிலைப்பாடுகளைக் குறைத்தது.

**கடந்த காலத்தினைப் போன்று, 2008இல் இலங்கை ரூபாவின் நாணயமாற்று வீதத்தின் மிதமிஞ்சிய தளம்பலை சமப்படுத்துவதற்காக மத்திய வங்கி வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் இரு பக்கங்களிலும் தலையிட்டது.** 2008இல் சந்தையிலிருந்து மொத்தமான 674 மில்லியன் ஐ.அ.டொலர் உள்ளீர்த்துக் கொள்ளப்பட்ட வேளையில் மொத்தமாக 1.5 பில்லியன் ஐ.அ.டொலர் வழங்கப்பட்டன. இது இவ்வாண்டில் 858 மில்லியன் ஐ.அ.டொலர் கொண்ட தேறிய வழங்கலிற்கு வழிவகுத்ததுடன் 2007இன் 123 மில்லியன் ஐ.அ.டொலர் தேறிய வழங்கலைவிட குறிப்பிடத்தக்களவில் உயர்வானதாகக் காணப்படுகின்றது. 2008இன் உயர்ந்த தேறிய வழங்கல் காணப்பட்டமைக்கு முக்கியமாக விலைகள் இன்னமும் உயர்ந்த மட்டங்களில் காணப்பட்ட போது ஏற்பட்ட பெற்றோலிய இறக்குமதிப் பட்டியல்களது தீர்ப்பனவு மற்றும் உலக நிதியியல் நெருக்கடியினொரு விளைவாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் முதலீடுகளை வெளிநாட்டவர்கள் மீளப்பெறுவதற்கு வசதியளிப்பது போன்றவற்றின் மூலம் ஏற்பட்டதாகும்.

**2008இல் இலங்கை ரூபா ஒப்பீட்டளவில் உறுதியானதாகக் காணப்பட்டது.** முதல் மூன்று காலாண்டுகளில் 0.68 சதவீதத்தினால் ரூபா பெறுமதி உயர்வடைந்த போதிலும் இறுதிக் காலாண்டிலான பெறுமதித் தேய்வு 2008 இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 4 சதவீத முழுமொத்த

பெறுமதித் தேய்விற்கு வழிவகுத்தது. ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் ரூபா பெறுமதியில் தேய்வடைந்தது. இது யென்னுக்கெதிராக 22 சதவீதத்தாலும் யூரோவிற்கெதிராக 1 சதவீதத்தினாலும் பெறுமதித் தேய்வடைந்தது. இலங்கை ரூபா இசுரேலிங் பவுண்ணிற்கெதிராக 32 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 17 சதவீதத்தினாலும் பெறுமதியில் உயர்வடைந்தது. இதற்கு முக்கியமாக ஐ.அ.டொலருக்கெதிராக இந்த நாணயங்களின் பெறுமதி தேய்வடைந்தமையே காரணமாகும். 2008 காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணயச் சந்தையில் செயற்பாட்டு மட்டம் கணிசமானளவு அதிகரித்தது. வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்த சராசரி அளவு கடந்த ஆண்டின் 38 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 59 மில்லியன் ஐ.அ.டொலரிற்காக 55 சதவீத அதிகரிப்புடன் காணப்பட்டது.

### அரச பிணையங்கள் சந்தை

**ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன் தொடர்பில் வெளிநின்ற கடன் இருப்பின் வழங்கல் உபாயத்தின் முக்கிய கவனம், முதிர்வு கட்டமைப்பை சுமுகப்படுத்துவதிலும் கடன் முதிர்வுகளின் ஒரே நேரத்தில் பெருமளவு கடன்கள் முதிர்ச்சி அடைவதைக் குறைப்பதிலும் காணப்பட்டது.** எனவே 91 நாள் உண்டியல் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் அதிகரிக்கப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் முதிர்வு கட்டமைப்பு மாற்றப்பட்டு அதன் மூலம் வாராந்த முதிர்வுகளின் அளவு 2007 உடன் ஒப்பிடுமிடத்து 2008இல் கணிசமானளவு குறைக்கப்பட்டது. இதன்படி, 2008இல் திறைசேரி மொத்த வழங்கல்களில் 91 நாள் உண்டியல்கள் 2007இன் 67 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 32 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, திறைசேரி உண்டியல்களின் முதிர்வு கட்டமைப்பு ஒரு முகாமை செய்யக்கூடிய மட்டமான ஏறத்தாழ ரூ.10 பில்லியனுக்கு குறைக்கப்பட்டது.

**அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட தேவைப்பாட்டின் ஒரு பகுதிக்கும் குறுங்கால காசுப்பாய்ச்சல் தேவைக்கும் நிதியிடுவதற்காக மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை ஏலங்களூடாகவும் நேரடி ஒதுக்குதல் ஒழுங்குகள் மூலமும் வழங்கியது.** 2008இல் இத்தகைய வழங்கல்கள் மொத்த முகப்புப் பெறுமதி நியதிகளில் ரூ.780 பில்லியனாகும். 2008 மே மாதத்தில் திறைசேரி உண்டியல் சந்தை வெளிநாட்டவர்களுக்கு திறந்து வைக்கப்பட்டமை மற்றும் குறுங்கால முதிர்வுகளைக் கொண்ட அரச பிணையங்களின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கலுக்கெதிராக குறுங்கால பத்திரங்களுக்கான வலுவான விருப்பத்தேர்வு போன்றவற்றின் காரணமாக ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன. எனினும் உலக நிதியியல் முரண்பாடு தீவிரமடைந்ததால் வெளிநாட்டவர்கள் தமது முதலீடுகளை குறைத்தமையினாலும் இறுதிக் காலாண்டில் பெரும்பகுதியில் உள்நாட்டு பணச் சந்தை பற்றாக்குறை நிலைப்பாட்டிலிருந்தமையாலும் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் ஆண்டின் இறுதியில் 17 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு உயர்வடைந்தன.

**2008இல் முறிகளினூடாக திரட்டப்பட்ட மொத்த நிதிகள் முகப்புப் பெறுமதி நியதிகளில் ரூ.489 பில்லியனுக்கு வகை கூறின.** இவ் ரூ.33 பில்லியன் தொகை திறைசேரி முறிகளின் ஏலங்கள் மூலம் திரட்டப்பட்ட வேளையில் மிகுதி ரூ.456 பில்லியன் சந்தைக்கான நேரடி ஒதுக்கீடுகள் மூலம் வழங்கப்பட்டது. திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீட்டிற்கான கட்டுப்பாடு 2007 திசெம்பரில் அதிகரிக்கப்பட்டதுடன் இது திறைசேரி முறிகளின் விளைவு வீதங்களின் குறைப்பிற்கு பங்களிப்புச் செய்தது. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இரண்டு வருட திறைசேரி முறிகளுக்கான இரண்டாம் தர சந்தை விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. எனினும், வெளிநாட்டவர் தமது வசமிருந்த திறைசேரி முறிகளை விற்றமையினால் 2008இன் நான்காம் காலாண்டில் இரண்டு வருட திறைசேரி முறிகளின் விளைவு வீதம் மேல் நோக்கி ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு அசைவுற்றது. நீண்ட கால எதிர்வுகளுக்கு சந்தையில் உயர்ந்த விளைவு வீதங்கள் வேண்டப்பட்டமையினால் நீண்டகால முதிர்வுகளின் திறைசேரி முறிகளின் வழங்கல் 2008 காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும், பணவீக்க அழுத்தங்கள் குறைவடைந்தமையினால் 3 மற்றும் 4 வருட திறைசேரி முறிகள் நேரடி ஒதுக்கீடுகளினூடாக சிறிய அளவுகளில் வழங்கப்பட்டன. சாத்தியமானளவிற்கு முறிகள் சந்தை பல பகுதிகளாகப் பிரிவதனைக் கட்டுப்படுத்துவதற்காக உயர்ந்த புதிய முறி வரிசையினை அறிமுகப்படுத்துவதனை இயலுமான வரை குறைப்பதற்காக திறைசேரி முறிகளின் ஏற்கனவேயுள்ள தொடர்களை மீளத் திறக்கின்ற கொள்கையை பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தது. எனினும், வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவிருந்த நிதிகளின் விரைவான வீழ்ச்சியின் காரணமாக உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பெறுகைகள் விரைவாக அதிகரித்தமையினால் 2008இல் முறிகளின் தொடர்களின் எண்ணிக்கையினை திட்டமிட்ட முறையில் குறைப்பது பாதிக்கப்பட்டது. இந்தப் பிரச்சனை காணப்பட்ட போதும், திறைசேரி முறிகளின் தொடர்களின் மொத்த எண்ணிக்கையை 2007 இலிருந்தனைப் போன்று 2008 இறுதியில் 42 ஆக பொதுப்படுகடன் திணக்களத்தினால் பேண முடிந்துள்ளது.

**பொதுப்படுகடன் திணைக்களம் 2008இல் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களை தொடர்ந்தும் திரட்டியது.** முதிர்ச்சியடையும் இலங்கை அபிவிருத்தி முறிகளை தீர்ப்பதற்காக, யூனிலும் செத்தெம்பரிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளை மீள வழங்குவதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் 335.3 மில்லியன் ஐ.அ.டொலர்களை திரட்டியது. யூனில் இரண்டு வருட முதிர்வு கொண்ட இலங்கை அபிவிருத்தி முறியினை 6 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 294.9 அடிப்படைப்புள்ளிகளை சேர்த்து மீள வழங்கியதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் 275.3 மில்லியன் ஐ.அ.டொலர்களை திரட்டியது. செத்தெம்பரில் இரண்டு வருட முதிர்வுடன் 6 மாத இலங்கை வங்கி வட்டி வீதத்துடன் 289.50 அடிப்படைப்புள்ளிகள் சேர்த்து மீள வழங்கியதன் மூலம் இது 60 மில்லியன் ஐ.அ.டொலர்களை திரட்டியது. 2008இல் 10 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் தீர்க்கப்பட்டன. மேலும், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 593 மில்லியன் பெறுமதியானதொரு கடன் இரண்டு வருட முதிர்வு

காலத்தைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் 2008 யூலையில் மாற்றப்பட்டது. இதேவேளை, 2008இல் கரைகடந்த வங்கி பிரிவுகளினூடான கடன்பாடுகளாக 77 மில்லியன் ஐ.அ.டொலர்கள் திரட்டப்பட்டன. 3 வருட காலமும் வருடாந்தத் திகதிகளிலான விருப்பத் தெரிவுடன் 150 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான கூட்டுக் கடனொன்றினூடாக ஒரு வெளிநாட்டு வர்த்தக கடனொன்று 2008இல் பெறப்பட்டது. இந்தக் கடன் 6 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் பயன்தரு அளவான 256 அடிப்படைப்புள்ளிகளுடன் சேர்த்து திரட்டப்பட்டது.

## கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை

### வர்த்தகப்பத்திரம்

**வர்த்தகப்பத்திர சந்தையின் செயற்பாட்டு மட்டம் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது.** வங்கிகளினால் ஆதரவளிக்கப்பட்ட மீளவழங்கல் உள்ளடங்கலாக வர்த்தக பத்திர வழங்கல்களின் மொத்தப் பெறுமதி 2007இன் ரூ.30 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2008இல் ரூ.24 பில்லியனாகக் காணப்பட்டது. வர்த்தகப்பத்திரங்களின் வட்டி வீதங்கள் 2007இன் 12 - 25 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 17 - 36 சதவீத வீச்சிற்கு உயர்ந்தது. மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான முதிர்வினைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் மொத்த சந்தையின் 91 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் ஆறு மாத வர்த்தகப் பத்திரங்களின் பங்கு 8 சதவீதமாகக் காணப்பட்டது. வர்த்தகப் பத்திரங்களின் மொத்த வெளிநின்ற தொகை 2007 இறுதியின் 61 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2008 இறுதியில் ரூ.55 பில்லியனாகக் காணப்பட்டது.

### கம்பனி முறிகள்

**உயர்ந்த வட்டி வீதச் சூழல் காரணமாக கம்பனி முறிகள் சந்தை பாதிக்கப்பட்டது. 2007இல் ரூ.8.2 பில்லியன் மொத்தத்துடன் கூடிய ஏழு புதிய வழங்கல்களுடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டில் ரூ.6.8 பில்லியன் தொகையுடன் ஐந்து புதிய தொகுதிக்கடன்களின் வழங்கல்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன.** இலங்கை வங்கி தொகுதிக்கடன்களின் அதியுயர் வழங்குநராக காணப்பட்டு ரூ.4.6 பில்லியன் நிதியை திரட்டியது. நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதங்களைக் கொண்ட தொகுதிக்கடன்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் தொகுதிக்கடன் மீதான வட்டி வீதங்கள் 17 - 24 சதவீதத்திற்கிடையில் மாற்றமடைந்தன. கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் படுகடன் வியாபார முறைமையில் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களின் புரள்வு 2007இல் ரூ.99 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 103 மில்லியனாகக் காணப்பட்டது.

### பங்குச் சந்தை

**வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு காரணிகளின் இணைந்த விளைவினால் 2008இல் பங்குச் சந்தை விரைவாக வீழ்ச்சியடைந்தது.** கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஓரளவு தளம்பலுற்றுக் காணப்பட்ட பங்கு விலைகள் 2008 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து மிக விரைவாக வீழ்ச்சியடைந்தன. அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணும் மிலங்கா விலைச் சுட்டெண்ணும் 2007இன் 7 சதவீத மற்றும் 11 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து

**அட்டவணை 8.10** பங்குச்சந்தையின் செயலாற்றம்

| விடயம் | 2007 | 2008 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (அ) | 2.541.0 | 1,503.0 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | (6.7) | (40.9) |
| மிலங்கா விலைச் சுட்டெண் (அ) | 3.291.9 | 1,631.3 |
| ஆண்டுக் ஆண்டு மாற்றம் (%) | (11.3) | (50.4) |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்) (அ) | 821 | 489 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 22.9 | 11.1 |
| சந்தை விலை வருவாயீட்டு விகிதம் (அ) | 11.6 | 5.4 |
| சந்தை மூலதன வாக்கத்திற்கான மொத்த புரள்வு (%) | 12.8 | 22.6 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.மில்) | 104,985 | 110.454 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 2,952 | 3,155 |
| வர்த்த்கம் செய்யத கம்பனிகளின் எண்ணிக்கை | 231 | 232 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 235 | 235 |
| அறிமுகம் செய்யப்பட்ட (ஆ) | 0 | 1 |
| பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு | | |
| ஆரம்ப வழங்கல் /விற்பனைக்கான வழங்கல் (ஆ) | 0 | 2 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 21 | 9 |
| உரிமை வழங்கல்களூடாக திரட்டப்பட்ட தொகை(ரூ.மில்) | 44,622 | 2,891 |

(அ) ஆண்டு முடிவில்


(ஆ) பதிவினைப்பெற்றுக் கொள்வதற்கு 3 முறைகள் உள்ளன. அதாவது பொதுமக்களுக்கா வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம் ஏற்கனவே உள்ள பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளினை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல் என்பன.

மூலம் : கொழும்புப் பங்கு பரிவர்த்தனை


2008இல் முறையே 41 சதவீதம் மற்றும் 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உயர்ந்த வட்டி வீதங்கள், தாழ்ந்த கம்பனி உழைப்புக்கள், சில நம்பிக்கை வாய்ந்த பெரும் கம்பனிகளைப் பாதித்த தனியார்மயமாக்கல் தொடர்பான சட்ட வழக்குகள் மற்றும் உலக நிதியியல் நெருக்கடி மற்றும் அதன் விளைவான பொருளாதார பின்னடைவு போன்று பல்வேறு காரணிகள் பங்குச் சந்தையின் மந்தமான நிலைப்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தன. அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 1990 இலிருந்து அதன் மிக மோசமான ஆண்டினைப் பதிவு செய்தது. அனைத்து பங்கு விலைச்சுட்டெண் மற்றும் மிலங்கா விலைச்சுட்டெண் என்பன கீழ் நோக்கிய நகர்வினைப் பதிவு செய்த தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டு இதுவாகும். விலை உழைப்புக்கள் விகிதம் 2007 இறுதியின் 11.6 சதவீதத்திலிருந்து 2008 இறுதியில் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து நீண்டகால போக்கிலிலுருந்தும் ஒரு கணிசமான விலகலை இது குறித்து நிற்கின்றது.

**சந்தை மூலதனமாக்கல் 2008இல் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது.** சந்தை மூலதனமாக்கல் 2007 இறுதியில்

**வரைபடம் 8.2** சராசரி நாளாந்த பங்குப் புரள்வும் சந்தை விலை வருவாயீட்டு விகிதமும்



வரைபடம் 8.3 கொழும்பு பங்குபரிவர்த்தனையில் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகள்




ரூ.821 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 23 சதவீதம்) 2008 இறுதியில் ரூ.489 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 11 சதவீதம்) குறைந்தது. அனைத்து பங்கு விலைச்சுட்டெண்ணினதும் அனைத்து துணைத்துறைகளினதும் விலைச்சுட்டெண்கள் 2008இல் வீழ்ச்சியடைந்தன. ஐந்து பாரிய துணைத் துறைகளான தொலைத்தொடர்பு (52 சதவீதம்), வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி (45 சதவீதம்) பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள் (49 சதவீதம்), உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (21 சதவீதம்) மற்றும் நலமும் கவனிப்பும் (34 சதவீதம்) என்பனவற்றுடன் தொடர்புடைய விலைச்சுட்டெண்களும் அடைப்புக்குள் காட்டப் பட்டுள்ளதைப் போன்று கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.

**இவ்வாண்டில் இடம்பெற்ற சில பாரிய கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக சந்தைப் புரள்வு உயர்வடைந்தது.** 2008இல் மொத்தப் பங்குப் புரள்வு ரூ.110 பில்லயனாகக் காணப்பட்டது. இலங்கை ரெலிகொம்மின் ரூ.33 பில்லியன் பெறுமதியான பங்குகளின் விற்பனை கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் வரலாற்றில் நடாத்தப்பட்ட அதியுயர் கொடுக்கல் வாங்கலாகும். நாளாந்த சராசரி புரள்வு 2007இல் ரூ.435 மில்லியனிலிருந்து 2008இல் ரூ.465 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், ஆண்டின் இறுதியில் நாளாந்த புரள்வு மட்டங்கள் செத்தெம்பர், ஒத்தோபர் மற்றும் நவெம்பரில் ரூ.175 மில்லியனாகவும் திசெம்பரில் ரூ.70 மில்லியனாகவும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.

**2008இல் பங்குச் சந்தைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல் அதிகரித்தது.** தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றின் பல்வேறு பாரிய பெறுமதி கொடுக்கல் வாங்கல்களின் முக்கிய காரணத்தினால் 2007இன் முன்னைய அதி உச்சமான ரூ.11.2 பில்லியனை விஞ்சி 2008இல் ரூ.13.9 பில்லியனுக்கு உயர்வடைந்தது. எனினும், உலக நிதியியல் நெருக்கடி 2008இன் இறுதிக் காலாண்டில் பங்குச் சந்தையிலிருந்து ரூ.1.4 பில்லியன் தொகையான வெளிநாட்டு மூலதனத்தின் தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. 2008இல் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 54 சதவீதத்திற்கு வகை கூறினர். 2008இல் இரு ஆரம்ப பொதுப் பங்கு வழங்கல்கள் மூலம் ரூ.1.5 பில்லியன் திரட்டப்பட்டதுடன் 11 உரிமை வழங்கல்கள் மூலம் ரூ.3 பில்லியன் திரட்டப்பட்டது.

**கொழும்பு பங்கு பரிவர்த்தனை 2008இல் சந்தைச் செயற்பாடுகளை கண்காணிப்பு செய்வதனையும் மேற்பார்வை செய்வதையும் வலுப்படுத்தியது.** உள்ளக வணிகம், விலை ஒழுங்கீனம் முன்கூட்டிய ஒழுங்குகள் போன்ற பொதுவான சந்தை இயலாற்றலை கண்டறிவதற்குரிய ஒரு தன்னியக்க மேற்பார்வை முறைமை 2008 யூனில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, எந்தவொரு பிணையத்தினதும் ரூ.20 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவிற்கு ஆகக் குறைந்தது 15 சதவீதம் இலாபத்தினை வழங்குமாறு அங்கத்துவ நிறுவனங்கள் வேண்டப்பட்டன. கொழும்பு பங்கு பரிவர்த்தன கடன்படுநர்களின் நிலைப்பாடுகள் கூர்மையாக கண்காணிப்பதனால் ஒட்டுமொத்த கடன்படுநர் நிலைப்பாடு கணிசமானளவு குறைவடைந்தது. 2008இல் நடைமுறைக்கு வந்த பங்குத் தீர்ப்பனவு தொடர்பில் ஒரு முக்கிய மாற்றம் யாதெனில் பங்கு வர்த்தகத்திற்காக T+ 3 இன் ஒற்றை அடுக்கு தீர்ப்பனவு சுற்று அறிமுகப்படுத்தப் பட்டமையாகும். ஒரு ஒற்றை அடுக்கு தீர்ப்பனவு சுற்றோட்டத்திற்கு நகர்ந்தமை எதிர்காலத்திற்கு கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் வழங்கல் எதிர் கொடுப்பனவு முறைமையின் அறிமுகத்திற்கு வசதியளிக்கும்.

## 8.5 அபிவிருத்தி நிதியும் நிதியின் கிடைப்பனவும்

**2008இல் வங்கிக் கிளை விரிவாக்கம் புதிதாக நிறுவப்பட்ட 107 கிளைகளுடன் தொடர்ந்து இடம் பெற்றது.** இவற்றுள், 93 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கிளைகளாக இருக்கையில் எஞ்சிய 14உம் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளைகளாக விளங்கின. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் நிறுவப்பட்ட 93 புதிய கிளைகளினுள் 58 மேல் மாகாணத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளின் புதிய கிளைகளின் எண்ணிக்கை 7 ஆகும். நிறுவப்பட்ட 14 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் புதிய கிளைகளினுள், 8 மேல் மாகாணத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, 2008இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் 42 புதிய விரிவாக்க அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் இதில் 32 மேல் மாகாணத்துக்கு வெளியே நிறுவப்பட்டன. இந்த 32 இல் 5 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்டன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இவ்வாண்டில் இரண்டு விரிவாக்க அலுவலகங்களை நிறுவியதுடன், இவை இரண்டும் மேல் மாகாணத்திற்கு வெளியே காணப்பட்டன. மேல் மாகாணத்திற்கு வெளியே பெரும் எண்ணிக்கையான வங்கிக் கிளைகள் திறக்கப்படுகின்றமை பொருளாதார நடவடிக்கைகள் கடந்த காலத்திலும் பார்க்க விரைவான வீதத்தில் இப் பகுதிகளில் வளர்ச்சி கண்டு வருவதனை பிரதிபலிக்கிறது.

**2008இல் நிலவிய உயர் வட்டி வீதச் சூழலின் விளைவாக, மத்திய வங்கியால் ஒருங்கிணைக்கப்பட்ட வட்டி உதவுதொகைத் திட்டங்களில் பங்கேற்கும் வங்கிகளுக்கான நிதியங்களின் செலவு கணிசமானளவில் உயர்ந்தது.** எனவே, அத்தகைய திட்டங்களில் அவற்றின் தொடர்ச்சியான பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் குருசி நவோதயத் திட்டத்திற்கு உரித்தான கடன் வழங்கும் வீதங்களை 8 சதவீதத்திலிருந்து 12 வீதத்திற்கு மேல் நோக்கித் திருத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. எனினும், இத் திருத்தம் 2008 யூலையில் மேற்கொள்ளப்பட்டதால் இவ்விரு திட்டங்களின் கீழான கடன்வழங்கலில் பெருமளவு இவ்வாண்டில் 8 சதவீத வட்டி வீதத்தில் இடம் பெற்றது.

**2008இல் காணப்பட்ட வேளாண்மையின் செழிப்பான வளர்ச்சியுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அநேகமான வேளாண்மை சம்பந்தமான கடன் திட்டங்களில் நிதியங்களுக்கான கேள்வி கணிசமானளவில் அதிகரித்தது.** பயிர்ச் செய்கை போன்றவற்றுக்கான புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான கடனின் பகிர்ந்தளிப்பு முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் பெரும்போகம் 2007/2008இல் கிட்டத்தட்ட 63 சதவீதத்தால் அதிகரித்து ரூ.1,572 மில்லியனை அடைந்தது. 2008இல் சிறுபோகம் தொடர்பான எண்தொகை ரூ.1,179 மில்லியனாக விளங்கி 2007 சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 38.4 சதவீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இதேவேளை, குருசி நவோதய திட்டத்தின் கீழ் 2008இன் முதலரைப்பகுதியிலான பகிர்ந்தளிப்புக்கள் ரூ.552 மில்லயனாக விளங்கின. உயர் மற்றும் தளம்பலுறும் வேளாண்மைப் பொருட்களின் விலைகள் காரணமாக, முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் இவ்வாண்டில் பிரபல்யமான முறையில் வளர்ச்சியடைந்தன. வேளாண்மை உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி பெரும்போகம் 2007/2008 இலும் சிறுபோகம் 2008இலும் முறையே ரூ.3,918 மில்லியனாகவும் ரூ.3,866 மில்லயனாகவும் விளங்கின. இது முன்னைய ஆண்டின் தொடர்பான பருவகாலங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 104 சதவீதம், 52 சதவீத அதிகரிப்புகளை காட்டுகிறது. இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதித்திட்டம் மற்றும் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதித் திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறைக்கான நிதியங்கள் தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றன. இவ்வாண்டில் இவ்விரு கடன் திட்டங்களூடாக முறையே ரூ.263 மில்லியன் மற்றும் ரூ.117 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**இலங்கை மத்திய வங்கி 2008 ஏப்பிறலில் வரவு செலவுத்திட்டம் 2008இல் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண்மை கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.** இக் கடன் திட்டமானது, சிறியளவு பாற்பண்ணைகளுக்கு 12 சதவீதம் சலுகைக் கடன்களை வழங்குவதன் மூலம் பாற்பண்ணைக் கைத்தொழிலின் முழு நடவடிக்கைகளுக்கும் நிதியிடுகின்ற வேளையில், பால் பதனிடும் கைத்தொழில் பிரிவுகளுக்கு 14 சதவீதத்தில் சலுகைக் கடன்களையும் வழங்குகிறது. இவை 1,000 - 10,000 பாற்பண்ணை வேளாண்மையாளர்களிடமிருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது. வேளாண்மை கால்நடை அபிவிருத்திக் கடன்திட்டத்தின் கீழ் கடன் வழங்கலுக்காக அவற்றின் சொந்த நிதியங்களைப் பயன்படுத்தும் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்கள் சிறு பண்ணைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 8 சதவீத வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளுக்கும் திரவப் பால் பதனிடல் மற்றும் வேளாண்மை பதனிடல் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 5 சதவீத வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளுக்கும் தகுதியுடையனவாக இருக்கின்றன. சிறு பண்ணைகளுக்கான ஆகக்கூடிய கடனின் அளவு ரூ.400,000 ஆக விளங்குகையில் திரவப்பால் பதனிடல் மற்றும் பயிர் பதனிடல் கைத்தொழில்களுக்கு ரூ.300 மில்லியன் வரையிலான கடன்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

**சலுகை வட்டி வீதங்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் பகிர்ந்தளிப்பு இவ்வாண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது.** சுனாமியால் பாதிப்படைந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் புனரமைப்பிற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஒப்பந்தம் - பீ)இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் ரூ.582 மில்லியனாக விளங்கியது. போர் நடவடிக்கைகள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் சுனாமி புனரமைப்பு செயற்பாடுகள் முன்னர் தடைப்பட்டதால் அம் மாகாணத்தில் சுசகன II (சுழலும் நிதியம்) திட்டம் சுனாமியால் சேதமடைந்த சகல மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இத் திட்டம் நிதிகள் முடிவடைந்ததன் காரணமாக கடன்களைப் பெறத் தவறிய ஆரம்ப சுசகன திட்டத்தின் கீழான கடன்களுக்காக பதிவு செய்யப்பட்ட மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை மட்டும் உள்ளடக்கும் வகையில் முன்பு திட்டமிடப்பட்டது. கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் ரூ.632 மில்லியன் பெறுமதியான நிதியங்கள் 2008இல் விடுவிக்கப்பட்டன.

### நுண்பாக நிதி

**தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் பங்குபற்றி நிறுவனங்களூடாக நுண்பாக நிதித்துறைக்கான நிதியங்களைப் பகிர்ந்தளிக்கிறது.** இவ்வாண்டில், தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் பங்குபற்றும் நிறுவனங்களைப் போன்று பிரதேச செயலாளர் மட்டத்தில் கீழ் மட்டத்திலுள்ள நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கு விசேட முயற்சியை மேற்கொண்டது. பங்கேற்பு நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 2007இன் 135 இலிருந்து 2008இல் 189 இற்கு அதிகரித்தது. 2008இல் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியங்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் நிதியங்களின் அளவு ரூ.1,042 மில்லியனாக விளங்கியது. இது 2007இற்கான தொடர்பான எண்தொகையுடன் ஒப்பிடுகையில் 27.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். 2008இல் வேளாண்மைத்துறையின் உற்சாகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வேளாண்மைச் செயற்பாடுகளுக்கான மொத்த நிதியப் பகிர்ந்தளிப்பு கிட்டத்தட்ட 46 சதவீதத்தால் அதிகரித்து ரூ.703 மில்லியனை அடைந்தது. உண்மையிலேயே, இந் நிதியத்தால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியத்தின் அதிகரிப்பில் கிட்டத்தட்ட 74 சதவீதம் வேளாண்மைத்துறைக்கான பகிர்ந்தளிப்புக்களிலான வளர்ச்சியால் ஏற்பட்டது. சிறிய மற்றும் குடிசைக் கைத்தொழில்கள், பணிச் செயற்பாடுகள் மற்றும் மீன்பிடித்துறைச் செயற்பாடுகளுக்கான கடன்வழங்கலும் 2008இல் அதிகரித்தது.

**தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக மொத்தக்கடன் பகிர்ந்தளிப்புக்களில் பெறுமதி நியதிகளில் 91 சதவீதம் மேல் மாகாணத்துக்கு வெளியேயான செயற்பாடுகளுக்கானதாகக் காணப்பட்டது.** மாவட்டங்களிடையே, அம்பாந்தோட்டை மற்றும் பொலனறுவை மாவட்டங்கள் ஒவ்வொன்றும் மொத்த பகிர்ந்தளிப்புக்களில் ஏறத்தாழ 15 சதவீதத்திற்கு வகை கூறி ஆகப் பெரிய கடன் பகிர்ந்தளிப்பினைக் கொண்டிருந்தன. பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்களில் கிட்டத்தட்ட 93 சதவீதம் பொலனறுவை மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கைக்கானதாகும். எனினும், அம்பாந்தோட்டையில் நெல் உற்பத்திகளுக்கான பகிர்ந்தளிப்புக்கள் 52 சதவீதத்திற்கு வகை கூறுகையில் மரக்கறி மற்றும் பழச்

செய்கை அதுபோல் சிறு வியாபாரச் செயற்பாடுகளுக்கான பகிர்ந்தளிப்பும் பாராட்டத்தக்கதாக இருந்தது. பாதுகாப்பு நிலைமையிலான முன்னேற்றத்துடன் கிழக்கு மாகாணத்திற்கான பகிர்ந்தளிப்புக்களின் பங்கு கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது. ரூபா நியதிகளில், மாகாணத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் 2007இன் ரூ.57 மில்லியனிலிருந்து 2008இல் ரூ.118 மில்லியனுக்கு இரு மடங்கிற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. தற்போதும் போதுமானதை விட குறைவாகக் காணப்பட்ட போதிலும், வடமாகாணத்திற்கான நிதியத்தின் பகிர்ந்தளிப்பும் 2007இன் ரூ.1.3 மில்லியனிலிருந்து 2008இல் ரூ.6.2 மில்லியனுக்கு மேம்பாடடைந்தது.

**மத்திய வங்கி உச்ச முகவராக இருக்கும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டங்களூடாக நிதியங்கள் தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.** வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிய செயற்றிட்ட சுழலும் நிதியத்தின் கீழ் இவ்வாண்டில் வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளுக்காக ரூ.514 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 6 மாவட்டங்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்ட முன்னைய வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் போலன்றி வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்ட சுழலும் நிதியம் நாடு முழுவதிலும் தொழிற்பாட்டிலிருந்தது. இத் திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியங்கள் ரூ.58 மில்லியனாக விளங்கின. சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் கீழ் முகாமைக் கட்டுப்பாடு சார்பாக அதிகாரம் மாற்றி ஒப்படைக்கப்பட்ட பயன்பெறும் நிறுவனங்களுக்கு (செயற்றிட்ட நன்மை பெறுவோர்களுக்கான மக்கள் கம்பனிகள்) திட்டம் தொழிற்பாட்டிலிருந்த நான்கு மாவட்டங்களில் வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளுக்காக மேலும் ரூ.144 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**இனி வரப்போகின்ற வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் கட்டம் II செயற்றிட்டத்துடன் தொடர்பான சகல பூர்வாங்க வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இச் செயற்றிட்டம் 2009 முற்பகுதியில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இத்திட்டம் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பொலனறுவை, அநுராதபுரம், பதுளை, மொனராகல, இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகிய 14 மாவட்டங்களில் தொழிற்பாட்டிலிருக்கும். இச் செயற்றிட்டத்துக்கான இலகு கடனாக யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரால் 2,575 மில்லியன் யென் கொண்ட மொத்தத் தொகை வழங்கப்பட இருக்கிறது. இத்தொகையில் 2,100 மில்லியன் யென் கொடுகடனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களையும் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பதால், இது முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பின் தங்கிய பிரதேசங்களில் வறுமை நிலை மீது கணிசமான நேர்க்கணிய விளைவைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கடன் வழங்குநரால் எதிர்கொள்ளப்பட்ட இடர்நேர்வைக் குறைப்பதன் மூலம் கொடுகடன் துணை நிரப்பும் திட்டங்கள் நிதி பெறுவதை மேம்படுத்தும்.** இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத்துறைக்கான புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று 2008இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறை முழுவதையும் உள்ளடக்குவதற்கு ஒருங்கிணைத்த கொடுகடன் உத்தரவாதத் திட்டத்துடன் தொடர்பான ஆரம்ப வேலையும் இவ்வாண்டில் பொறுப்பேற்கப்பட்டது.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள்

**வங்கியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு பொறுப்பாகவுள்ளது.** நிதியியல் முறைமையின் முறையான தொழிற்பாட்டுக்கும் உறுதிப்பாட்டுக்கும் பாதுகாப்பான, நம்பத்தகுந்த மற்றும் வினைத்திறன்மிக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மிகவும் இன்றியமையாததாகும். நாட்டில் தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை போன்ற

அட்டவணை 8.11 காசல்லாத கொடுப்பனவுகள் : கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்

| கொடுப்பனவு முறைமை | 2007 அளவு ('000) | 2007 பெறுமதி (ரூ.பில்) | 2008(ஆ) அளவு ('000) | 2008(ஆ) பெறுமதி (ரூ.பில்) |
|---|---|---|---|---|
| **பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகள்** | **195** | **21,266** | **229** | **25,131** |
| அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை | 195 | 21,266 | 229 | 25,131 |
| **சில்லறை பெறுமதிக் கொடுப்பனவு முறைகள்** | **74,723** | **4,760** | **70,726** | **5,157** |
| பிரதான காசோலைத் தீர்ப்பனவு முறைமை | 46,148 | 4,296 | 44,550 | 4,693 |
| ரூபா வரைவு தீர்ப்பனவு மறைமை | வி.கி | 2 | வி.கி | 1 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 5,945 | 176 | 7,846 | 236 |
| கொடுகடன் அட்டைகள் | 18,261 | 67 | 14,089 | 54 |
| வரவு அட்டைகள் | 1,252(அ) | 4(அ) | 1,536 | 4 |
| இணையத்தள வங்கித் தொழில் | 2,809(அ) | 202(அ) | 2,339 | 119 |
| தொலைபேசி வங்கித் தொழில் | 308(அ) | 2(அ) | 366 | 39 |
| அஞ்சல் சாதனங்கள் | வி.கி | 11 | வி.கி | 11 |
| **மொத்தம்** | **74,918** | **26,026** | **70,955** | **30,288** |
| **ஐ.அ.டொலர் காசோலைத் தீர்ப்பனவு முறைமை** | **84** | **23** | **71** | **26** |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 10

## உள்நாட்டு சுவிப்ற் சேவைப் பணியகத்தினை நிறுவுதல்

*- இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினை நவீனமயப்படுத்துவதில் மேலுமொரு மைல்கல்*



இலங்கையின் நிதியியல் உட்கட்டமைப்பின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய கட்டமாக லங்கா செட்டில் முறைமை 2003/2004 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. லங்கா செட்டில் முறைமை பாரிய பெறுமதி வாய்ந்த மற்றும் நேர முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக்கின்ற அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை மற்றும் அரச பிணையங்களது கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்யும் வசதியை வழங்கும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை போன்றவற்றை உள்ளடக்கிய முறைமை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையாகும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை காசோலையானது தீர்ப்பனவு மற்றும் அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட சந்தா கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் எழுகின்ற வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு கடப்பாடுகளின் தீர்ப்பனவிற்கும் ஆதரவளிக்கின்றது.

தரப்பினர்களுக்கிடையேயான அதாவது லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்கள், கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் செய்திகள் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்காக பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அதேநேர செய்தி காவியான சுவிப்ற் வலையமைப்பினைப் பயன்படுத்தி பரிமாற்றப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, வர்த்தக வங்கிகள் தமது தொடர்பான வெளிநாட்டு வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் சுவிப்ற் வலையமைப்பைப் பயன்படுத்துகின்றன. உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பு சங்கம் சுவிப்ற் வலையமைப்பு முறைமையை வழங்குகின்றது. இது, கொடுக்கல் வாங்கல் செய்யும் தரப்பினர்களிடையே பாதுகாப்பான விதத்தில் கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தகவலுக்கான முன்னேற்றமடைந்த தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் உலகளாவிய நிதியியல் செய்தியைக் காவும் வலையமைப்பாகும். தொழிற்பாடுகளுக்கான சுவிப்ற் வலையமைப்பின் கிடைப்பனவு முழுமையில் தேவைக்கதிகமானவை (உபகரணங்கள் பழுதடையும் போது தலங்களது தன்னியக்கமான மாற்றுகையை உறுதிப்படுத்தும் உடனடி சேமிப்பு தலம்), முன்னேற்றகரமான மீளப்பெறும் பொறிமுறைகள், நம்பகமான தொழிற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் ஆதரவுப் பணிகள் போன்றவற்றினூடாக சுவிப்ற்றினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. ஒரு பங்கேற்கும் நிறுவனம் சுவிப்ற் வலையமைப்பு முறைமையை அணுகுவதற்கு அவற்றின் உள்ளக கணனிப் பிரயோகங்களை இணைப்பதற்கு விசேடமாக வன்பொருள் மற்றும் மென்பொருளை வேண்டி நிற்கின்றது.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு மற்றும் பிணையங்களது செய்திகளை அனுப்புவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் லங்கா செட்டில் முறைமை தொடர்ச்சியாக கிடைக்கக்கூடியதாகவிருப்பது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் உறுதித்தன்மைக்கும் அதன் மூலம் நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்கும் இன்றியமையாததாகவுள்ளது. தொழிற்பாட்டாளராக மத்திய வங்கி லங்கா செட்டில் முறைமைக்காக முழுமையான தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தினை தயாரித்ததுடன் அனர்த்த மீட்புத் தலத்தையும் நிறுவியது. அத்தகைய மேலதிக சுவிப்ற் வலையமைப்பு இணைப்பைப் பேணுவதில் இலங்கை மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு செலவைத் தாங்க வேண்டியிருந்த போதிலும் நிச்சயமற்ற சூழ்நிலையில் பயன்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி அனர்த்த மீட்புத்தலத்தில் அர்ப்பணிக்கப்பட்ட சுவிப்ற் வலையமைப்பு இணைப்பைப் பேணியது. மேலும், லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்கு இடையூறால் ஏற்படக்கூடிய முறையியல் இடர்நேர்வின் சாத்தியமான பின் விளைவுகளைக் கவனத்திற் கொண்டு லங்கா செட்டில் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையின் நிலைத்துநிற்கும் தன்மையை அடைவதற்காக ஒழுங்கான தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட சுவிப்ற் வலையமைப்பு இணைப்புடன் கூடிய முழுமையாக தயாரான நிலையிலுள்ள அனர்த்த மீட்புத் தலங்களைக் கொண்டிருக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி அறிவுறுத்தியது. பங்கேற்கும் நிறுவனங்கள் தடங்கலற்ற வியாபார திட்டங்களை தயாரித்தும் பேரழிவு மீளப்பெறுகை தலங்களை நிறுவிய போதும் அவற்றின் மீளப்பெறும் தலங்களுக்கு தனியான சுவிப்ற் இணைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கு முக்கியமாக, நடுத்தரத்திலிருந்து தாழ்ந்த கொடுக்கல் வாங்கல் செய்தி அளவுகளைக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தரளவான வங்கிகளுக்கு சுவிப்ற் வலையமைப்பு இணைப்பை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட உயர்ந்த செலவு காரணமாகும்.

இந்தச் சூழலில், பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சுவிப்ற் வலையமைப்பு இணைப்பில் இடையூறு காணப்பட்ட போது தமது சார்பில் தமது கொடுப்பனவு மற்றும் பிணையங்களது செய்திகளை நடைமுறைப்படுத்துமாறு மத்திய வங்கியைக் கேட்டுக் கொண்டன. அனர்த்த மீட்புத் தலங்களுக்கான சுவிப்ற் இணைப்பினைக் கொண்டிராத பிரச்சனையைத் தீர்ப்பதற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தெரிவுகள் மதிப்பிடப்பட்டு இலங்கையில் ஒரு சுவிப்ற் சேவைப் பணியகத்தை நிறுவி அதன் மூலம் இணைப்பினைப் பெற்றுக் கொள்வது சிறந்த மாற்றுவழியெனக் கண்டறியப்பட்டது. ஒரு சுவிப்ற் சேவை பணியகமென்பது சுவிப்ற் வலைப்பின்னலினூடாக அனர்த்த மீட்புத் தலங்களுக்கான சுவிப்ற் வலையமைப்பு இணைப்பை வழங்குவது உள்ளடங்கலாக சுவிப்ற் இணைப்பு, முகாமைத்துவம் மற்றும் தர செய்முறைப்படுத்தல் பணிகளை சுவிப்ற் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்காக சுவிற்ப் உடன் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். வினைத்திறன் மற்றும் பேணிக் கொள்வதிலான வசதி போன்றவற்றின் தொடர்பில் சுவிப்ற் சேவைப் பணியக மாதிரி தற்பொழுது சுவிப்ற்றினால் ஊக்குவிப்படுகின்றது.

இதன்படி, தேசிய கொடுப்பனவு முறைமையின் அனைத்து அக்கறை கொண்டோர்களையும் இலங்கை சுவிப்ற் பாவனையாளர் குழுவினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தீர்மானமெடுத்தல் அமைப்பான தேசிய கொடுப்பனவுகள் சபை ஒரு உள்நாட்டு சுவிப்ற் சேவை பணியகத்தை நிறுவுவதற்கான வியாபாரத் தீர்மானத்தை உருவாக்கியது. இலங்கையின் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு தனியான சட்ட அமைப்பானது லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களான வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் மத்திய வங்கி

போன்றவற்றினால் முழுமையாக உடைமையாக்கப்பட்டதுமாக வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் 2007 யூனில் ஸ்தாபிக்கப்பட்டு 2008 பெப்புருவரியிலிருந்து தொழிற்பாட்டிலுள்ளது. லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் ஆசியாவில் நிறுவப்பட்டதும் தொழிற்பாட்டிற்கு வந்ததுமான பதினொறாவது சுவிப்ற் சேவை பணியகமாகும். லங்கா நிதியியல் சேவை பணியகத்தை நிறுவியமை மத்திய வங்கியினதும், இலங்கை வங்கிகள் சம்மேளனம் மற்றும் இலங்கை சுவிப்ற் பாவனையாளர் குழு போன்றவற்றினால் ஒன்றிணைந்து கையாளப்பட்டது.

லங்கா நிதியியல் சேவை பணியகத்தின் தொழிற்பாடுகளினூடாக வர்த்தக வங்கிகளதும் முதனிலை வணிகர்களும் உட்கட்டமைப்பையும் சுவிப்ற் இணைப்பினை தனித்தனியாக பேணிக் கொள்வதுடன் தொடர்புபட்ட பல்வேறு செலவினங்களாவன: வன்பொருள் மற்றும் மென்பொருளை கொள்வனவு செய்வதுடன் தொடர்புட்ட மூலதன செலவினங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகள் உள்ளடங்கலான செலவினங்கள், சுவிப்ற் வலையமைப்பை முகாமை செய்யும் அர்ப்பணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆளணியை வேலைக்கமர்த்தும் செலவினங்கள், முறைமையின் ஒருங்கிணைப்பு செலவுகள், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை இடமாற்றுகின்ற செலவு மற்றும் சுவிப்ற் வலையப்புப் பின்னலுடனும் முறைமைகளின் ஆதரவுடனும் தொடர்பட்ட செலவுகள் போன்றவற்றையும் பகிர்ந்து கொள்ள முடியும். வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் லங்கா நிதியியல் சேவைகள் பணியகத்தின் பணியினை பயன்படுத்துவதன் மூலம் சுவிப்ற் வலையமைப்பின் செயற்பட நேரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். அநேகமான நிறுவனங்கள் மிகவும் சிறப்பியல்பு வாய்ந்த திறமை மட்டங்களை வேண்டி நிற்கின்ற தமது முக்கியமற்ற பணிகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்வதை நோக்கி நகர்ந்து வருவதனால் லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் தமது முக்கிய வியாபாரத்துறைகளில் பணிபுரிவதற்கான சுதந்திரத்தை வழங்குகின்ற அதேவேளையில் கணிசமானளவு செலவினச் சிக்கனங்களின் மூலம் நன்மையடைகிறது. இத்தகைய அனுகூலங்கள் பொதுமக்கள் நிதியியல் பணிகளை வழங்குவதில் வினைத்திறனை மேம்படுத்துவதுடன் நிதியியல் துறையின் மேலதிக அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2008 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் உள்ளடங்கலாக 21 பங்கேற்கும் நிறுவனங்கள் லங்கா நிதியியல் சேவைப் பணியகத்துடன் இணைந்து சுவிப்ற் வலையமைப்பினொரு நுழைவாயிலாக லங்கா நிதியியல் சேவை பணியகத்தை பயன்படுத்துகின்றன. இலங்கை மத்திய வங்கியும் லங்கா நிதியியல் சேவை பணியகத்தினொரு அங்கத்தவராகும். உள்நாட்டு சுவிப்ற் சேவைகள் பணியகம் நிறுவப்பட்டமை இலங்கை மத்திய வங்கியினதும் தேசிய கொடுப்பனவுகள் சம்மேளனத்தினதும் 2008இற்கான வழிகாட்டலில் அடையப்பட்டதொரு மைல்கல்லாகும்.

உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் பேணுவதற்கும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளை மேற்பார்வை செய்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு சட்ட ரீதியான பொறுப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

### முறையியல் ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைமைகள்

**இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்பட்ட லங்கா செட்டில் முறைமை மற்றும் லங்கா கிளியரால் தொழிற்படுத்தப்பட்ட காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைமை ஆகிய இரு முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் அறிமுகத்தின் காரணமாக நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை பன்னாட்டு ரீதியாக இனங்காணப்பட்ட முறைமைகளுக்கு அடிப்படை அளவுக் குறியீடாக அமைந்துள்ளது.** லங்கா செட்டிலின் முறைமை இரண்டு பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன; அதேநேர வலையமைப்புச் சூழலில் நெருக்கடியான நேரக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்யும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை; அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பகமாகத் தொழிற்படும் மற்றும் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவைக் கையாளும் லங்கா செகுயர் முறைமை என்பனவாகும்.

### அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை

**இலங்கையில் வங்கிகளுக்கு இடையேயான உயர் பெறுமதி உடையதும் நெருக்கடியான நேரக் கொடுப்பனவுகளுக்குமான நிதியத்தை மாற்றல் செய்யும் முக்கிய முறைமையாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தொடர்ந்து விளங்கியது.** இம் முறைமை காசல்லாத கொடுப்பனவுக் கருவிகளின் மொத்தப் பெறுமதியின் 81 சதவீதத்தை உள்ளடக்கியது. இம் முறைமையின் ஊடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 17 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2007 உடன் ஒப்பிடுகையில் 2008இல் ரூ.25,131 பில்லியனுக்கு 18 சதவீதத்தால் அதிகரித்தது. இம் முறைமை வங்கிகளிடையேயான அழைப்புப் பணச் சந்தை தொடர்பான ரூபாக் கொடுக்கல் வாங்கல்கள், அரச பிணையங்கள் சந்தை, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்கள் லங்கா கிளியர் காசோலை தீர்ப்பனவு முறைமையின் கீழான தேறிய கடப்பாடுகளின் தீர்ப்பனவு என்பற்றைத் தீர்ப்பனவு செய்கிறது. மத்திய வங்கி அரச பிணையங்களின் பிணைக்கு எதிராக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை வழங்கியது. வேண்டப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மையின் நாளாந்தச் சராசரிப் பெறுமதி ரூ.9.1 பில்லியனாக விளங்கியதுடன் இதில் பங்கேற்பாளர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி 2008இல் ரூ.4.8 பில்லியனாக விளங்கியது.

### லங்கா செக்குயர் முறைமை

**லங்கா செக்குயர் முறைமை பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையையும் பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமையையும் கொண்டுள்ளது.** 2008 இறுதியில் லங்கா செக்குயரால் வைத்திருக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப்

பெறுமதி ரூ.1,713 பில்லியனாக விளங்கி வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியின் 99.9 சதவீதத்திற்கு வகை கூறியது. இப் பத்திரங்களற்ற பிணையங்கள் ரூ.409 பில்லியன் திறைசேரி உண்டியல்களையும் ரூ.1,304 பில்லியன் திறைசேரி முறிகளையம் கொண்டுள்ளது. லங்கா செக்குயர், கம்பனி அது போல் தனிப்பட்ட வாடிக்கையாளர்களை உள்ளடக்கிய வணிகர் நேரடி பங்கேற்பாளர்களூடாக 56,041 கணக்குகளைப் பேணியது.

### காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை

**இம் முறைமை 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கையால் காசோலை தீர்ப்பனவு செய்யும் செயல்முறையில் ஏற்படும் செலவுகளை இல்லாமற் செய்தல், நீண்ட தீர்ப்பனவு செய்யும் சுற்றில் ஈடுபட்டுள்ள தீர்ப்பனவு இடர்நேர்வை T+1 இற்குக் குறைத்தல் (T என்பது தீர்ப்பனவுக்காக லங்கா கிளியர் காசோலையைப் பெறும் நாள் மற்றும் 1 என்பது அதையடுத்து வரும் வியாபார நாள்), கொடுப்பனவின் மூலமான பெறுகையில் பிரதேச ஏற்றத்தாழ்வை இல்லாமற் செய்தல் ஆகிய குறிக்கோள்களுடன் தேசிய காசோலை தீர்ப்பனவு இல்லமான லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டால் தொழிற்படுத்தப்படுகிறது.** சில வங்கிகள் காசோலை தேறல் செய்வதற்கு எடுக்கும் T + 1 ஐப் பின்பற்றத் தவறியதை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட பரீட்சிப்பு வெளிப்படுத்தியதால் காசோலை சேகரிப்பு தொடர்பாக நடைமுறை மற்றும் நியமங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு காசோலைப் பெறுகைகளை வரவு வைப்பதற்கும், வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்வதற்குமான முன்மாதிரிகள் என்பவற்றுக்கு சகல வங்கிகளையும் வேண்டிக் கொள்வதற்காக 2007 திசெம்பரில் மத்திய வங்கியால் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. பணிப்புரையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடத்திய பின்பு T + 1 அன்று வரவு வைக்கப்படாத பெறுகைகளுக்குரிய காசோலைகளின் விபரங்கள் தொடர்பான அரையாண்டு அறிக்கையையும் அத்தகைய தாமதங்களுக்கான காரணங்களையும் சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கி, வங்கிகளுக்கு அறிவுறுத்தியது. 60 சதவீதமான வங்கிகள் T + 1 அடிப்படையில் காசோலைப் பெறுகைகளை பற்று வைக்கக்கூடியதாக இருப்பதை இவ் அறிக்கைகள் வெளிப்படுத்தின. 2008இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூ.4,693 பில்லியனாக விளங்கியதுடன் இது 2007 உடன் ஒப்பிடுகையில் 9.2 சதவீதம் அதிகமானதாகும்.

### இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவுகள் முறைமை (இவகொமு)

**இவகொ முறைமையானது வங்கிகள் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்காகவும் லங்கா கிளியரால் தொழிற்படுத்தப் படுகின்ற அதே நேரத்திலல்லாத சில்லறை நிதிய மாற்றல் முறைமையாகும்.** கொடுப்பனவுகளுக்காக இவகொ முறைமையின் பயன்பாடு 2006இலிருந்து குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையால் இவகொமுறைமையின் கொடுப்பனவுகளுக்கான புதிய மற்றும் தோற்றம் பெற்றுவரும் கேள்வியை உள்ளடக்குவதற்காக லங்கா கிளியர் முறைமையின் இயலளவை அதிகரித்தது. இவகொமுறைமையால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் கொடுப்பனவுகளுக்காக இவகொ முறைமை பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக 2008இல் 34 சதவீதத்தால் அதிகரித்தது.

### கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

**லங்கா செட்டின் முறைமை மற்றும் அதன் பங்கேற்பாளர்கள், உள்ளகக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மற்றும் முக்கிய வங்கித்தொழில் முறைமைகள் என்பவற்றின் முறைமை ரீதியான முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையை முழுமையாக மீள்எழுச்சி உள்ளதாக ஏற்படுத்தும் குறிக்கோளுடன் மத்திய வங்கி தடங்கலற்ற வியாபாரத் தொடர்ச்சி திட்டமிடல் வழிகாட்டல்களை வழங்கியது.** மத்திய வங்கி லங்கா செட்டின் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்கா கிளியரின் தடங்கலற்ற வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்களைப் பரீட்சித்ததுடன் எந்தவிதமான பரந்த அளவிலானதும் நீண்ட காலத்திற்கு இருக்கும் குறுக்கீடுகளை எதிர்கொள்வதற்கு ஆவணப்படுத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அனர்த்த மீட்புத் தலங்களை தயார்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை விதந்துரைத்தது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் வினைத்திறன் கொடுப்பனவுகளை உடனடியாகவும் சரியாகவும், பாதுகாப்பாகவும் தீர்ப்பனவு செய்வதற்கான முறைமையின் இயலளவில் தங்கியுள்ளதுடன் இம் மூலங்களில் எந்தவொன்றாவது செயற்படாதிருப்பின் நிதியியல் முறை உறுதிப்பாட்டைப் பாதிக்கும். நிதியியல் முறைமையில் எந்தவொரு எதிர்பாராத நிகழ்வின் போது முறைமைக் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி லங்கா செட்டிலுக்கான தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைமையை விருத்தி செய்தது.

### தேசிய கொடுப்பனவுச் சபை

**நாட்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பாக தீர்மானத்தை மேற்கொள்ளும் உயர் சபையான தேசிய கொடுப்பனவுச் சபை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளை விருத்தி செய்வதில் சகல முக்கிய ஆர்வலர்களால் பிரதிநிதித்துவப்பட்ட கைத்தொழில் ரீதியான தீவிர கூட்டத்தை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் மத்திய வங்கியால் 2006இல் நிறுவப்பட்டது.** கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் விருத்திக்காக 2007 - 2010 காலப்பகுதியில் தேசிய கொடுப்பனவுச் சபை நடவடிக்கை விடயங்களுடனான வழிகாட்டலை 2007இல் உருவாக்கியது. 2008இல் முன்மொழியப்பட்ட நடவடிக்கை விடயங்களின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்டதுடன் பூர்த்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. சுவிப்ற்நெற் உடன் தொடர்பு கொள்வதற்கு லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் முதன்மை மற்றும் அனர்த்த மீட்புத் தலங்களிலுள்ள மையங்களில் கூடிய பொருளாதார மற்றும் பாதுகாப்பான பொது இணைப்பை வழங்குவதற்காக இலங்கை நிதியியல் பணிகள் பணியகம் நிறுவப்பட்டது. உள்நாட்டுச் சுவிப்ற் இணைப்பைக் கொண்ட சகல பங்கேற்பாளர்களும் 2008இல் இலங்கை

நிதியியல் பணிகள் பணியகத்தில் இணைந்து கொண்டன. அதிகரித்த பாதுகாப்பை வழங்கும் ஒருங்கிணைந்த நுண்மின் சுற்றை (சிப்சை) அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் அட்டை தொழில்நுட்பம் வங்கியொன்றால் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இன்னுமோர் வங்கி இதை உயர் கொடுகடன் வரையறையுள்ள வாடிக்கையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தியது. எஞ்சிய கடனட்டை வழங்குநர்களும் 2011 அளவில் இதற்கு இணங்கியொழுகுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சில்லறைக் கொடுப்பனவுகளின் அதேநேர கொடுப்பனவுகளை இயலச் செய்யும் பொது கொடுப்பனவு ஆளியை 2009இல் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப வேலை இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. லங்கா கிளியருக்கு பங்கேற்கும் வங்கிகளால் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமைக்கு காசோலை பிரதிமைகளை வழங்குவதற்கான நேரடி இணைப்பை மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாற்றுத் தீர்வாக, 2009 மாச்சில் மேல் மாகாணத்திலுள்ள வங்கிகள் காசோலைப் பிரதிமைகளை லங்கா கிளியருக்கு இறுவட்டுக்களில் சமர்ப்பிக்கும் என்பதுடன் ஏனைய சகல மாகாணங்களிலுள்ள வங்கிகள் 2009 யூன் அளவில் இதனைப் பின்பற்றப்படும்.

### சார்க் கொடுப்பனவுகளுக்கான முனைவு

**பன்னாட்டு நியமங்களுடனான அடிப்படை அளவுக் குறியீட்டைக் கொண்ட வினைத்திறன்மிக்க, செழிப்பான, உறுதியான மற்றும் ஒருங்கிணைந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையை வசதிப்படுத்துவதற்கு சார்க் பிராந்தியத்திலுள்ள தற்போதைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளைப் பலப்படுத்தும் குறிக்கோளுடன் சார்க் கொடுப்பனவுகளுக்கான முனைவு நிறுவப்பட்டது.** மேலும், பிராந்தியங்களுக்குள்ளேயான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் அபிவிருத்திக்காக பிராந்திய இசைவை ஊக்குவிப்பதற்கும் உறுப்பினர் நாடுகளின் உள்நாட்டுக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒருங்கிணைப்பதற்கும் சார்க் கொடுப்பனவுகளுக்கான முனைவு நிறுவப்படும் போது எதிர்பார்க்கப்பட்டது. உறுப்பு நாடுகளின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவின் இருப்பு எடுப்புச் செய்முறை நடத்தப்பட்டதுடன் 2015இல் பிராந்திய இணைப்பை அடையும் பொருட்டு சகல உறுப்பு நாடுகளும் 2011 அளவில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளை நடைமுறைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. உறுப்பு நாடுகளிடையே எல்லை கடந்த பணவனுப்பல் தொடர்பான தகவலைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### சட்டவாக்கங்கள்

**சட்டக் கட்டமைப்பு நிதியியல்துறையின் வினைத்திறனையும் உறுதிப்பாட்டையும் அதிகரிப்பதற்காக தொடர்ந்து புதுப்பிக்கப்படவும் பலப்படுத்தப்படவுமிருக்கிறது.** பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் என்ற புதிய சட்டம் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை ஒரு புதிய தேசிய வங்கியாக இணைப்பதை வழங்குகிறது. முன்மொழியப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி நிதியியல் திரட்சி, பன்முகப்படுத்தல் மற்றும் ஏனைய திரட்சிகளூடாக பிரதேச வங்கிகளை பலப்படுத்துமெனவும் அவற்றைப் போட்டித்தன்மை வாய்ந்ததாக மாற்றுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக கொடுகடன் தகவல் பணியகத்தின் பணிகளை ஏனைய கொடுகடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் அது போல் காப்புறுதிக் கம்பனிகள், பொது வசதி வழங்குவோர் மற்றும் மத்திய வங்கி உள்ளிட்ட அரச முகவர்கள் என்பவற்றுக்கும் விரிவுபடுத்துவதற்கு அதை இயலச் செய்வதற்காக கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் திருத்தப்பட்டது. மதிக்கப்படாத/ திரும்பல் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான தகவலைச் சேகரிப்பதற்கும் வழங்குவதற்கும் கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது. எந்தவொரு பிரசையும் நுகர்வோர் பாதுகாப்புத் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஐயத்திற்குரிய பதிவேடுகளுக்கான உரிமையுடன் கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து சுயவிசாரணை கொடுகடன் அறிக்கையை நேரடியாக பெறக்கூடியதாக இருக்கும். தரவின் தரத்தையும் முழுமையான தன்மையினையும் பேணுவதற்கும் பிழையான தகவலைத் திருத்தியமைப்பதற்கு ஐயத்திற்குரிய பிரச்சனையைத் தீர்க்கும் செயல்முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

**ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்கான பல சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.** சட்டத்திலிருந்து தப்பிச் செல்வதற்கான பலவகையான பொய்த்தோற்றங்களின் கீழ் நடத்தப்பட்ட அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரத்தை நடத்தி வைப்பை ஏற்றுக்கொள்வதிலிருந்து ஆட்களையும் கம்பனிகளையும் தடை செய்வதற்கான சட்டங்களைப் பலப்படுத்துவதற்காக நிதிக் கம்பனிகள் சட்டம் திருத்தியமைக்கப்படும். "வைப்புக்கள்" என்ற வரைவிலக்கணம் பரந்தளவில் நிதியங்களைத் திரட்டும் செயற்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் விரிவுபடுத்தப்படும். அதிகாரமளிக்கப்படாத/ சட்ட ரீதியற்ற நிதி தொடர்பான புலன்விசாரணை தொடர்பாக மத்திய வங்கியின் அதிகாரங்கள் பலப்படுத்தப்படுவதுடன் குற்றங்கள் மிகக் கடுமையான தண்டனையைக் கொண்டிருக்கும். இத்துடன் இத் திருத்தங்கள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பரீட்சிப்பையும் மூலதனம் மற்றும் ஏனைய முன்மதியுடைய தேவைப்பாடுகளின் தீர்மானம் தொடர்பாக மத்திய வங்கியின் அதிகாரங்களையும் அதிகரிக்கும். நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கான சட்டமும் முறைப்படுத்தப்படும். பல்வேறான சட்டங்களின் கீழ் நுண்பாக நிதி நிறுவனங்களின் வெவ்வேறான வகைகள் பதிவு செய்யப்பட்ட போதிலும் இவை விசேட ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை அதிகாரசபை அல்லது ஒழுங்குமுறையூடாக ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதோ அல்லது கண்காணிக்கப்படுவதோ இல்லை. இந் நிறுவனங்களின் பன்முகத்தன்மை மற்றும், நுண்பாக நிதித்துறையினதும் தற்போதைய சட்டங்களினதும் சிக்கலான தன்மையைக் கவனத்திற் கொண்டு இந் நிறுவனங்கள் மீது குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொள்கை உடமையாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு பிணைக்குகள் மற்றும் நடைமுறைப்படுத்தலைச் செயற்படுத்துவதற்கு காப்புறுதிக் கம்பனிகள், தரகர்கள் மற்றும் இழப்பைச் சீர்ப்படுத்துவர்களுக்கு பணிப்புரைகளை வழங்கும் விதத்தில் இலங்கைக் காப்புறுதிச் சபையின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதி திருத்தியமைக்கப்படும். காப்புறுதிக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் தரகர்களுக்கான தகமைப் பிரமாணமும் குறித்துரைக்கப்படும். சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட ஏனைய

**சிறப்புக்குறிப்பு 11**

## பணம் தூயதாக்கலினையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலினையும் ஒழிப்பதற்கான உலகளாவிய முயற்சிகள்

### பணம் தூயதாக்கலென்றாலென்ன?

பணம் தூயதாக்கலென்பது சட்டவிரோதமான செயற்பாடுகளிலிருந்து உழைக்கும் பணத்தை அதன் சட்டவிரோதமான மூலத்திலிருந்து மறைத்து வைப்பதற்காக முறைசார் நிதியியல் முறைமைக்குள் அறிமுகப்படுத்துகின்ற ஒரு மோசடி வாய்ந்த முறைமையாகும். எனவே, பணம் தூயதாக்குபவர் நிதியங்களின் மூலங்களை மறைக்கு முயலுகிறார். நிதியினை உருவாக்குகின்றதும் தூயதாக்கலை வேண்டி நிற்பதுமான சட்டவிரோதமான (சட்டமுறையற்ற அல்லது தண்டனைக்குரிய) செயற்பாடுகளை உள்ளடக்கும் ஏனைய விடயங்களிடையே போதைப்பொருள் கடத்தல், ஆட்கடத்தல், சட்டத்திற்கு முரணான ஆயுதக்கடத்தல், ஊழல் அல்லது இலஞ்சம், மோசடி, போலி நாணயங்கள், சூழல் சார்ந்த குற்றங்கள், கொலைகள், கள்ளக்கடத்தல், பலவந்தமாய் பணம் பறித்தல் மற்றும் ஆட்கடத்தல் என்பன காணப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் சமூகத்தின் நலனிற்கும் அதன் அங்கத்தவரது அமைதியான வாழ்க்கைக்கும் தீங்கு விளைவிப்பவையாகும்.

### பயங்கரவாதத்திற்கு நிதியிடலென்றாலென்ன?

பயங்கரவாதத்திற்கு நிதியிடலென்பது ஏதாவது ஒரு வழியில் பயங்கரவாதத்திற்கு அல்லது பயங்கரவாதத்தினை ஊக்குவிக்கின்ற, திட்டமிடுகின்ற அல்லது பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்ற எந்தவொரு நபருக்கும் நிதியியல் ஆதரவினை வழங்குவதாகும். பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதற்குப் பயன்படுத்தும் நிதியங்கள் சட்டபூர்வமான மூலங்களிலிருந்தும் தண்டனைக்குரிய செயற்பாடுகளிலிருந்தும் உருவாகலாம். உலகம் முழுவதிற்கும் பயங்கரவாதம் கொண்டு வந்த உயர்ந்த பாதகமான சமூக - பொருளாதார விளைவுகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை எதிர்ப்பதில் பன்னாட்டு சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

### பணம் தூயதாக்கலையும் பயங்காரவாதத்திற்கு நிதியிடலையும் ஒழிப்பதற்கான பன்னாட்டு முயற்சிகள்

i. ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை: பணம் தூயதாக்கலை ஒழிப்பதற்கும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை தோற்கடிப்பதற்குமான உலகளாவிய முயற்சிகள் 1980களில் ஆரம்பித்தன. உலகளாவிய ரீதியில் பணம் தூயதாக்கலிற்கெதிரான போராடுகின்ற செயற்பாடுகளை மேற்கொண்ட முதலாவது பன்னாட்டு நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபை விளங்குகின்றது. இது வியன்ன உடன்படிக்கையென பிரசித்தமான போதைப்பொருள் மற்றும் மனநிலைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பொருட்களை சட்டத்திற்கு முரணான கடத்தலிற்கெதிரான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையினை பின்பற்றுவதனுடன் ஆரம்பமாகியது. இதன் விளைவாக, ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பான பல்வேறு உடன்படிக்கைகளையும் பாதுகாப்பு பேரவை தீர்மானங்களையும் வழங்கியதுடன் அனைத்து ஐக்கிய நாடுகள் சபை அங்கத்துவ நாடுகளும் அத்தகைய உடன்படிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டவையாகவிருந்தன.

ii. நிதியியல் நடவடிக்கைச் செயலணி (நிநசெ): பணம் தூயதாக்கலை ஒழிப்பதற்காக அரசாங்கங்களுக்கிடையிலான கொள்கை உருவாக்கும் அமைப்பாக நிநசெ 1989இல் உருவாக்கப்பட்டது. பணம் தூயதாக்கலுக்கெதிரான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பினை உள்ளடக்கிய 40 விதந்துரைப்புக்களினைக் கொண்டதொரு தொகுதியினை இது பின்பற்றியது. 2001 செத்தெம்பர் 11இல் ஐக்கிய அமெரிக்கா மீதான தாக்குதலினைத் தொடர்ந்து நிநசெ பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான ஒன்பது விசேட தீர்மானங்களைப் பின்பற்றியது. நிதியியல் உளவறிதல் பிரிவுகளை நிறுவுதல், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் அல்லது சந்தேகத்திற்கிடமான நாணயக் கொடுக்கல் வாங்கல்களைப் பெறுதல், நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல், கணனி மயப்படுத்தப்பட தரவுத்தளத்தை நிறுவுதல், இணங்கியொழுகுதல் தொடர்பான கட்டுப்பாடுகள், மேற்பார்வை அதிகாரங்கள் மற்றும் உள்நாட்டு ரீதியாகவும் பன்னாட்டு ரீதியாகவும் தகவலை பரிமாறுதல் போன்ற முக்கிய துறைகளை இந்த 40 விதந்துரைப்புக்கள் உள்ளடக்குகின்றன. 2001 ஒத்தோபரில் பின்பற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான ஒன்பது விசேட விதந்துரைப்புகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குமாறு அறிக்கையிடல் கடப்பாடுகளின் பரப்பெல்லையை விரிவுபடுத்தியிருக்கின்றன. ஒரு நாடு பன்னாட்டு நியமங்களுடன் இணங்கியொழுகின்றதென பன்னாட்டு சமூகத்தினால் கருதப்பட வேண்டுமாயின் இத்தகைய 40 + 9 விதந்துரைகளும் கட்டாயமாகும்.

iii. பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுவும் ஏனைய பிராந்திய கண்காணிப்பு அமைப்புக்களும்: இற்றைவரை, பணம் தூயதாக்கலையும் பயங்கர வாதத்திற்கு நிதியிடலையும் எதிர்ப்பதற்கான நாடுகளினதும் பிராந்தியங்களினதும் முயற்சிகளினை கண்காணிப்பதற்காக பல்வேறு பிராந்திய கண்காணிப்பு அமைப்புக்கள் நிதியியல் நடவடிக்கை செயலனி உடன் இணைந்ததாக உருவாக்கப்பட்டுள்ளன. பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழு ஆசிய பசுபிக் பிராந்தியத்திலிருந்து 39 அங்கத்தவர்களினைக் கொண்டதாக 1997இல் உருவாக்கப்பட்டதுடன் நிதியியல் நடவடிக்கை செயலணியின் விதந்துரைப்புக்களுடனும் சிறந்த நடைமுறைகளுடனும் இணங்கியொழுகுவதை கண்காணிக்கின்றது. இலங்கை பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் ஒரு ஸ்தாபக அங்கத்தவராகும். ஏனைய பிராந்திய அமைப்புக்கள் கரிபியன் நிதியியல் நடவடிக்கைச் செயலணி, ஐரோப்பிய சம்மேளனம், கிழக்கு மற்றும் தென்னாபிரிக்கா பணம் தூயதாக்கலிற்கு எதிரான குழு, தென் அமெரிக்காவில் பணம் தூயதாக்கல் தொடர்பான நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு மற்றும் மத்திய கிழக்கு மற்றும் வட

ஆபிரிக்காவின் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

iv. எக்மொன்ட் குழு: பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்வதன் ஊடாக நாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் ஒரு அமைப்பாக எக்மொன்ட் குழு 1995 இலிருந்து தொழிற்படுகின்றது. இக் குழு 100 நாடுகளுக்கு மேற்பட்ட அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு தற்பொழுது பார்வையாளர் நிலையினைக் கொண்டிருப்பதுடன் 2009 நடுப்பகுதியளவில் முழு அங்கத்தவர் நிலையைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

v. நிதியியல் உளவறிதல் பிரிவுகள்(நி.உ.வி): 1990 களின் ஆரம்பத்திலிருந்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று பகுப்பாய்வு செய்து சாத்தியமான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் தொடர்பான ஏதாவது தொடர்புகளை அடையாளம் காண்பதற்கும் தடுப்பதற்குமென நிதியியல் உளவிதல் பிரிவுகள் (நிஉபி) உருவாக்கப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவுகளை நிறுவுதல் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான நிதியியல் நடவடிக்கை செயலணியின் விதந்துரைப்புக்களுடன் உலகளாவிய ரீதியில் விரைவாக விரிவடைந்தன. தற்பொழுது நிதியியல் உளவறிதல் பிரிவின் மூன்று விரிவான வகைகள் தொழிற்பாட்டில் உள்ளன. நிருவாக நிதியியல் உளவறிதல் பிரிவுச் சட்ட அமுலாக்கல் அல்லது சட்டம் சார்ந்த நி.உ.பி. மற்றும் இரண்டும் சேர்ந்த நி.உ.வி. பிரிவு தொழிற்பாட்டிலுள்ளன. நிருவாக நி.உ.பி. கள் நிதியியல் கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்களை திரட்டி சந்தேகமான கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்களினை சட்ட அமுலாக்கல் முகவர்களுக்கு பரப்புகின்றன. சட்ட அமுலாக்கல் அல்லது சட்டம் சார்ந்த நி.உ.பி. கள் வழங்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரங்களைப் பயன்படுத்தி விசாரணைகளையும் வழக்குத் தொடரும் செயற்பாட்டினையும் மேற்கொள்கின்றன. கலப்பின நி.உ.பிகள் நிருவாக ரீதியானதும் சட்ட அமுலாக்கம்/ சட்டம் சார்ந்த நி.உ.பி. களின் அதிகாரங்களது ஒருங்கிணைவைக் கொண்டுள்ளன.

vi. இலங்கையின் நி.உ.பி இன் ஸ்தாபகம்: இலங்கையில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான முறைசார்ந்த முயற்சிகள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச்சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை கட்டுப்படுத்துவதற்கான உடன்படிக்கைகள் சட்டம் போன்ற மூன்று சட்டங்களது சட்டமியற்றுதலுடன் ஆரம்பமாகியது. நி.உ.பி., நிதியியல் நடவடிக்கை செயலணியின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் 2006 மாச்சில் நிறுவப்பட்டது. நி.உ.பி. தற்பொழுது நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் (பணம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதி மாற்றல்கள்) தொடர்பான தகவல்களைப் பெற்று பகுப்பாய்வு செய்து சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை மேலதிக விசாரணைகளுக்காகவும் சட்ட செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்காகவும் ஒழுங்குமுறைப்படுத்தும் மற்றும் சட்ட அமுலாக்கம் அதிகாரசபைகளுக்கு பரப்புகின்றது. நி.உ.பி. இன் பொறுப்புக்களை உள்ளடக்கும் ஏனையவற்றிடையே சட்ட ரீதியில்லாத செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை பதிவு செய்தல், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மீது பரீட்சிப்புக்களை நடாத்துதல், நிறுவனங்களிடமிருந்து பொருத்தமான தகவல்களை கோருதல், வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளல் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கண்காணித்தல் தொடர்பான விதிகளையும் வழிகாட்டிகளையும் வழங்குதல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்பினருடன் உடன்படிக்கையில் ஈடுபடுதல் என்பன காணப்படுகின்றன.

இலங்கையில் நி.உ.பி. நிறுவப்பட்டமை பன்னாட்டு நியமங்களுக்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் இசைவாக பணம் தூயதாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாத கட்டமைப்பிற்கு நிதியிடலை ஒழிப்பதையும் பயனுறும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

திருத்தங்கள் காப்புறுதிக் கம்பனிகளின் முகவர்களாக நிறுவனங்களை நியமித்தல் மற்றும் தற்போதைய கூட்டுக் கம்பனிகள் வியாபாரத்தை இரண்டு கம்பனிகளாக பிரிப்பதற்காக அவகாசம் வழங்கப்பட்டதன் மூலம் பொது காப்புறுதி வியாபாரம் தனியாகப் பிரிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாக நடத்துதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மூலதனச் சந்தையின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக விசேட நோக்கங்களுக்கான நிறுவனங்களை உருவாக்கல் மற்றும், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் பிணையமயமாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மேற்பார்வை என்பவற்றினூடாக சொத்துக்களால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்களின் வழங்கலை வசதிப்படுத்துவதற்கு பிணையமயமாக்கல் தொடர்பான புதிய சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட முதலீட்டுக் கருவியாக பெறுதிகளை வழங்குவதற்கும், இப் பிணையங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை உருவாக்குவதற்கும், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சபை உறுப்பினர்களுக்கு உரித்தான தகைமைப் பிரமாணத்தை நேர்த்தியாக்குவதற்கும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமும் திருத்தியமைக்கப்படும்.

### ஒழுங்குவிதியும் மேற்பார்வையும்

**மத்திய வங்கி வங்கித்தொழில் சட்ட நியதிகளில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பல முன்மதியுடைய பணிப்புரைகளை இவ்வாண்டில் வழங்கியது.** பாசல் II மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்பு மீதான பணிப்புரை தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி கொடுகடன் இடர்நேர்வு, நியம அளவுமுறை அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட

சந்தை இடர்நேர்வு, அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையைப் பயன்படுத்தும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பவற்றுக்கான நடைமுறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடும் தேவைப்பாடுகளை உள்ளடக்கியது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான உருவாக்கம் மற்றும் ஏற்பாடு செய்தல் தொடர்பான பணிப்புரை வயதெல்லை, பணியின் காலஎல்லை மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள் வைத்திருக்கக்கூடிய பணிப்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக குறிப்பிட்ட இடையீட்டு ஏற்பாடுகளுக்கான திருத்தங்கள் தொடர்பான கம்பனி ஆளுகை மீதான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பணிப்புரையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. அத்துடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 ஐப் பின்பற்றுவதற்கான வழிகாட்டல், வங்கிகள் வெளியிலிருந்து பணிகளைப் பெறுதல், நாணயக் கடிதங்கள் மீதான குறைந்த வைப்புத் தேவைகள் மற்றும் முன்னோக்கிய விற்பனைக் கொடுக்கல் வாங்கல்கள் மீது அறிவுறுத்தல்கள் என்பன வழங்கப்பட்டன.

**நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் வட்டி வீதங்கள் மற்றும் கம்பனி ஆளுகை மீது மத்திய வங்கியால் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.** 2008 ஏப்பிறலிலிருந்து பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்கள் மீதான பணிப்புரை, நிதியங்களின் செலவைக் குறைவாக இருத்தல் மற்றும் கடன் வழங்கும் வீதத்தைக் குறைத்தல் ஆகிய குறிக்கோளுடன் தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், முறிகள் மற்றும் கழிவு வீதத்தில் வழங்கப்பட்ட ஏனைய கருவிகள் மீதான வரையறைகளைக் குறித்துரைக்கிறது. 2007இல் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைக்கு ஒத்த கம்பனி ஆளுகை மீதான பணிப்புரையின் முக்கிய நோக்கம் யாதெனில் நிதிக் கம்பனிகளின் விடயங்களுக்கு பணிப்பாளர் சபை பொறுப்புள்ளதாகவும் வகை கூறுவதுமான முறையில் ஏற்படுத்துவதன் மூலம் இந் நிறுவனங்களின் செழிப்பான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பையும் மொத்த ஆற்றலையும் ஊக்கவிப்பதாகும். 2009 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வரும் இப் பணிப்புரையின் முக்கிய பண்புகள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையின் கூட்டு மற்றும் பொறுப்புக்கள், சபையால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட முகாமைத் தொழிற்பாடுகள், தலைவரினதும் தலைமை நிறைவேற்று அலுவலரின் கடமைகளை வெவ்வேறாக்கல், சபை நியமித்த குழுக்கள், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், நிதியியல் கூற்றுக்களையும் இடையீட்டு ஏற்பாடுகளையும் வெளிப்படுத்துதல் என்பவற்றுடன் தொடர்புள்ளதாக விளங்கின.

**இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகளின் வளர்ச்சிக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குநர்களை மேற்பார்வை செய்வதற்காக மத்திய வங்கியால் பணிப்புரையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.** 2009இல் வழங்கப்படவிருக்கும் முன்மொழியப்பட்ட பணிப்புரை அட்டை வைத்திருப்போரின் நலனைப் பாதுகாப்பதற்கும், மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் இலத்திரனியல் கொடுப்பனவுக் கருவிகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குமான முன்மதியுடைய ஆகக் குறைந்த தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கும்.

**சிறந்த பன்னாட்டுச் சந்தை நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையொன்று அரச பிணையங்களிலான முதனிலை வணிகர்களுக்கு 2008இல் வழங்கப்பட்டது.** வர்த்தகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிடையேயான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் ஆளுமைக்குட்பட்ட தரப்படுத்தப்பட்ட ஒப்பந்தமான முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீட்டாளர் பாதுகாப்பை அதிகரித்து அரச பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தையின் ஒழுங்குவிதியையும் அபிவிருத்தியையும் வசதிப்படுத்தும்.

**பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பல எண்ணிக்கையான பணிப்புரைகளை வழங்கியுள்ளது.** இவை பட்டியலிடப்படாத படுகடன் பிணையங்களின் வழங்கலுக்கான பிரமாணத்தை ஒப்புதலுடன் தொடர்புபட்டுள்ளது. பங்குத் தரகர்களும் ஏனைய சந்தை இடைநிலையாளர்களும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கு மாதாந்த அடிப்படையில் இடைக்கால நிதியியல் அறிக்கைகளைச் சமப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. கூறு நம்பிக்கைகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் முகாமைக் கம்பனிகளுக்கான புதிய வழிகாட்டல்கள் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் 2008இல் உருவாக்கப்பட்டதுடன் இவை கூறுகளை வைத்திருப்போரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு நலன் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் முகாமைத்துவக் கம்பனியின் சுதந்திரம், நம்பிக்கைப் பொறுப்பாளரின் நிதியியல் இயலளவு, நம்பிக்கைப் பொறுப்பாளரினதும், முகாமைக் கம்பனிப் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களின் உடல் நலம் மற்றும் தகமை, கூறு நம்பிக்கைகளின் ஆண்டுக் கூற்றுக்களில் தேவைப்பட்ட வெளிப்படுத்துகைகள் என்பவற்றை வற்புறுத்துகின்றன. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அவற்றின் சொந்தக் கணக்கில் வர்த்தகம் செய்யும் பங்குத் தரகுக் கம்பனிகளுக்கு புதிய ஒழுங்குவிதிகளை 2008இல் வழங்கியது.

**பணம் தூயதாக்கலுக்கெதிராகவும், பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதை ஒழிப்பதற்குமான அமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.** நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டத்தின் கீழ் நிதியியல் புலன்விசாரணை பிரிவால் வேண்டப்பட்ட "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்" தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துடன் "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்" அறிவிக்கும் தேவைப்பாடுகளினால் கடுமையான இசைந்து செல்லும் தன்மையை நடைமுறைக்கிடுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் பங்குத் தரகுக் கம்பனிகளுக்கு மேலும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. சகல காசுக் கொடுக்கல் வாங்கல்களையும், இலத்திரனியவியல் நிதி மாற்றல்களையும் அறிவிப்பதற்கான கீழ்மட்ட எல்லை ரூ.1 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

**நிதியியற் சந்தைகளின் அபிவிருத்திக்காகவும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்குமாக நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களிடையே கொள்கைகளையம் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கு நிறுவப்பட்ட உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபை கிரமமாக கூடியது.** இவ் உயர் மட்டச்சபை 2007இல் உருவாக்கப்பட்டு மத்திய வங்கி

ஆளுநரால் தலைமை தாங்கப்பட்டதுடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதிச்சபை, தேசிய கொடுப்பனவுகள் சபை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, கம்பனிகள் பதிவாளர், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு கண்காணிப்புச் சபை, பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றின் தலைவர்களை உள்ளடக்குகிறது. இச் சிக்கலான நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான பொறிமுறைகளை முன்மொழியும் பொருட்டு பாரிய நிதியியல் குழுமங்களால் ஏற்படுத்தப்பட்ட முறைமை ரீதியான இடர்நேர்வுகளை மதிப்பிடும் பாரிய நிதியியல் குழுமங்கள் மீதான ஒழுங்குபடுத்துநர்களின் செயற்குழுவையும் உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபை கொண்டுள்ளது.

### கொடுகடன் தரமிடல்

**மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் சுதந்திரமான கொடுகடன் தரமிடல் முகவரிடமிருந்து கொடுகடன் தரமிடலைப் பெற்றுக் கொள்ளுமாறும் இந் நிறுவனங்களின் ஆற்றலை மதிப்பிடுவதற்கு வைப்பாளர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அதனைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துமாறும் தேவைப்படுத்தப்படுகின்றன.** இலங்கையில் இரண்டு கொடுகடன் தரமிடும் நிலையங்கள் தொழிற்பாட்டிலிருந்தன. 2008இல் 21 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 10 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 11 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் முதலீட்டுத் தரமிடல்களைப் பெற்றுக் கொண்டன. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளும், படுகடன் கருவிகளை வழங்குவதனூடாக நிதியங்களைத் திரட்டினால் கொடுகடன் தரமிடலைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவைப்படுத்தப்பட்டன.

### கொடுகடன் தகவல்

**கொடுகடன் தகவல் பணியகம் கடன்பெறுநர்கள் மீதான கொடுகடன் தகவல் அறிக்கைகளை அதன் கொடுகடன் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு வழங்குகிறது.** 2008 சனவரியில் கொடுகடன் தகவல் பணியகத்தால் ஆரம்பிக்கப்பட்ட கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறை என அழைக்கப்பட்ட புதிய முறைமை கடன்பெறுநர்கள் மீதான கூடியளவு அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் அறிக்கைகளை வழங்குகிறது. 2008இல் கம்பனி மற்றும் தனிப்பட்ட கடன்பெறுநர்கள் மீது 817,887 கொடுகடன் அறிக்கைகளை வழங்கி, கடன் வழங்கும் நிறுவனங்களின் கொடுகடன் மதிப்பீட்டு நடைமுறையின் இணைந்த பகுதியாக இவ் அறிக்கைகள் வந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது. இம் முறைமை கொடுகடன் வசதிகள் மீதான தரவு சேகரிப்பிற்கான கீழ்மட்ட அளவைக் கொண்டிருக்கவில்லை. அறிவிக்கும் கொடுகடன் நிறுவனங்களின் எண்ணிக்கை 94 ஆக விளங்கியது. கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்திற்கான புதிய திருத்தங்கள் நிதிஅமைச்சரால் தீர்மானிக்கப்பட்டவாறு கொடுகடன் வழங்கும் ஏனைய நிறுவனங்களுக்கு அதன் பணிகளை விரிவுபடுத்துவதற்கு அதிகாரமளிக்கிறது. இது சம்பந்தமாக, கொடுகடன் தகவல் பணியகம் காப்புறுதி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் கம்பனிகளிலிருந்து தகவலைச் சேகரிப்பதற்கு உத்தேசித்துள்ளதுடன் கொடுகடன் அறிக்கைகளில் மதிக்கப்படாத காசோலைகள் மீதான தகவலையும் உள்ளடக்குகிறது. இலங்கையின் எந்தவொரு பிரசைக்கும் கொடுகடன் அறிக்கைகளை வழங்குவதற்கு கொடுகடன் தகவல் நிலையத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இங்கு பிணக்குகளைத் தீர்க்கும் செயல்முறை காணப்படுவதுடன் இதன் கீழ் துல்லியமற்ற தகவலை திருத்தியமைக்கவும் முடியும்.

## சிறப்புக்குறிப்பு 12

## உலகளாவிய நிதி நெருக்கடியிலிருந்தான படிப்பினைகள்: இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட ஆளுகை என்பவற்றின் முக்கியத்துவங்கள்

1930களின் அதீத மந்தநிலைக்கு பின்னர் மிக மோசமானதான சரிவை உலகப் பொருளாதாரம் தற்பொழுது அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. இதுவே பாரிய முன்னணிப் பொருளாதாரங்களில் நிதி நெருக்கடிப் பிரச்சினைகளுக்கு உடனடிக் காரணமாக இருந்துள்ளது. உலகின் சில பாரிய நிதி நிறுவனங்கள் முறிவடைந்துள்ளதாக அறிவித்துள்ளன, கொடுகடன்கள் சம்பந்தமான பதிவிறக்கங்களால் ஏனைய பல நிறுவனங்களின் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ள அதேவேளை சந்தைத் தளம்பல்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளின் அதிகரிப்பினால், மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையை இலகுவாக்கியதுடன் முன்னெப்போதுமில்லாத வகையில் திரவத்தன்மையை வழங்கின. நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையிலும் உண்மைப் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்திய, நிதியியல் சந்தைகளில் பங்கு மூலதனத்திற்கும் கடன் மூலதனத்திற்குமிடையே தொடர்பின்றி கடன் பெற்றதன் காலங் கடந்த விளைவு பல நாடுகளை நெருக்கடிக்குள்ளாக்கின. இணைக்கிணையாளர் இடர்நேர்வு மற்றும் துணை முதன்மைச் சந்தை இடர்நேர்வுகளை கண்காணிக்கத் தவறியமை மற்றும் கடன் தரப்படுத்தல் முகவர்களால் மேற்கொள்ளப்படும் தரப்படுத்தலினை முகாமைத்துவம் ஏற்றுக்கொள்வதனால், அம்முகவர்கள் உள்வாங்க தவறவிடப்பட்ட கட்டமைப்பு நிதியியல் கருவிகளினால் உருவாக்கப்படும் இடர்நேர்வுகள் என்பன நிதிநிறுவனங்களில் குறிப்பிடத்தக்க இழப்பினை ஏற்படுத்தியதுடன் நிதியிடல்/ திரவத்தன்மை பிரச்சனைகளையும் உருவாக்கியது. எனவே, நடப்பு நெருக்கடிகளானவை, நடைமுறையிலுள்ள தத்துவங்கள், இடர்நேர்வு முகாமைத்துவப் பணிகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட ஆளுகை என்பவற்றின் மீள்மதிப்பீட்டிற்கான அவசியத்தினை கோடிட்டு காட்டுகின்றன.

**இடர்நேர்வு முகாமைத்துவம்:** நிதி நிறுவனங்களின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்களிலுள்ள பல்வேறுப்பட்ட குறைபாடுகளை பன்னாட்டு நிதிச்சந்தை நெருக்கடிகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஏனைய பிற காரணங்களுக்கு மத்தியிலும் பதிவிறக்கத் தத்துவங்களின் குறைபாடே சொத்து தரப் பிரச்சனைகளுக்கான முதன்மைக் காரணமாக இருந்தது. தற்போதைய நெருக்கடி அமெரிக்க துணை முதன்மை ஈட்டு வர்த்தகத்துடன் தொடர்புபட்டுள்ளது. இதில் அமெரிக்க வங்கிகள் தாழ்ந்த கொடுகடன் வரலாற்றை கொண்டவர்களுக்கு உயர் இடர்நேர்வு கடன்களை வழங்கியிருக்கின்றன. அதாவது சிறந்த பொருளாதாரம்

மற்றும் தீவிரமடைந்த சொத்துப் பெறுமதிகளால் ஊக்குவிக்கப்பட்ட கடுமையான போட்டியினைக் கருத்திற்கொண்டு வலுவான பதிவிறக்கம் செய்யும் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வங்கிகள் தவறியுள்ளன. பிரதானமாக விரைவாக அபிவிருத்தி கண்ட பிணையமயமாக்கலால் உதவப்பட்டு, ஈட்டுக் கடனில் குறிப்பான உயர் வளர்ச்சிகாணப்பட்டதுடன் கடன்பெறுநர்களின் கொடுகடன் மீளளிப்பு இயலுமை தொடர்பில் செம்மையான கடன் இடர்நேர்வு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை. இவற்றிற்கு மேலாக, தகமையுடைய குறைந்த பணவீக்க அமைப்பின் கீழ் நீண்டகாலமாக மேலோங்கிய குறைந்த வட்டி வீதம், வீட்டு உரிமைகளை ஊக்குவிக்கும் இளக்கமான நியமங்கள் போன்றவற்றின் விளைவான பலவீனமான இடர்நேர்வு முகாமைத்துவம் கருத்திலெடுக்கப்படவில்லை.

வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் வியாபார வாய்ப்புக்கள் மற்றும் தொடர்பான இடர்நேர்வுகளை முழுமையான வீச்சில் கண்டறிந்து, அளவிட்டு, முகாமை பண்ணத் தவறியமையானது, நிறுவனரீதியான இடர்நேர்வு முகாமைத்துவமின்மையை வெளிப்படுத்தியது. துணை முதன்மை சந்தையில் இணைத் தரப்பினர் இடர்நேர்வு மற்றும் இடர்நேர்வு பகுப்பாய்வு தொடர்பில் சிறிதளவான கண்காணிப்பே காணப்பட்டது. பதிலாக, கொடுகடன் தரமிடல் முகவர்களின் தரப்படுத்தல்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. துரதிஷ்டவசமாக, இவ் இரண்டாந்தர தகவல் மூலங்கள் மற்றும் பகுப்பாய்வுகள் ஒழுங்கமைக்கப்பட்ட முதலீட்டு அமைப்பால் ஏற்படுத்தப்படுகின்ற இடர்நேர்வுகளை பூரணமாக உள்ளடக்கப்படவில்லை. இதனால், சில வங்கிகள் துணை முதன்மை சந்தை பற்றிய எந்தவித கரிசனையுமின்றியே காணப்பட்டன.

கடன் வழங்கும் நிறுவனங்களுக்கான சமச்சீரற்ற ஊக்குவிப்புக்கள் தற்போதைய நெருக்கடியின் இன்னொரு காரணமாகக் காணப்பட்டது. கடன்பெறுநரின் கடன் மீளளிப்பு இயலுமை பாரம்பரியரீதியாக நோக்குவதற்கு பதிலாக உயர் தொகையில் கடன் வழங்கலை ஏற்படுத்துவதிலும் ஈட்டுகள் தொடர்பிலமைந்த கட்டணங்களின் பெறுகையை வருமானமாகப் பதிவதிலும் பல வங்கிகள் முனைப்பைக் காட்டின, ஈட்டுக் கடன்கள் கட்டமைக்கப்பட்ட நிதியியல் கருவிகள் அல்லது சொத்துப்பட்டியலாகத் தொகுக்கப்பட்டிருந்ததுடன் உலகளாவிய மூதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டுமுள்ளன. ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பும் கணக்கீட்டு நியமங்களும் கூட வங்கிகளை "உருவாக்குதலும் பகிர்ந்தளித்தலும்" எனும் மாதிரியை பின்பற்றுவதற்கு ஊக்குவித்தன. பல நிதியியல் நிறுவனங்கள் நீண்ட காலக் கடன் கருவிகளின் சந்தைப்படுத்தலூடான திரவத்தன்மையில் தங்கியிருந்தமையால் முதிர்ச்சி அமைப்பில் நீண்டகாலப் பொறுப்புக்களைவிட நீண்டகாலச் சொத்தை வைத்திருக்கும் கணிசமான ஒவ்வாத தன்மை காணப்படுகிறது. திரவத்தன்மை இடர்நேர்வை பாரதூரமானளவிற்கு குறைத்து மதிப்பிட்டமையும் காணப்பட்டது.

கட்டமைக்கப்பட்ட நிதிச்சாதனங்களில் முதலிடுவதற்கு முன்னர் பல தரமுயர்ந்த நிதியியல் நிறுவனங்கள் தங்களுடைய இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு சிக்கலான நிதியியல் மாதிரிகளை பயன்படுத்தியிருந்தபோதிலும் அவர்கள் மாதிரியிலுள்ள குறைப்பாட்டை சரியாக மதிப்பிடாமையால் இடர்நேர்வுகளை தவிர்ப்பதில் வெற்றிகரமானவர்களாக இருக்கவில்லை. குறிப்பாக, நிகழ்வதற்கு குறைந்தளவு சாத்தியப்பாடுடைய நிகழ்வுகளில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. இதனால், நிதியியல் நிறுவனங்கள், சிக்கலான நிதிக் கருவிகளின் பாவனையின் போது எழும் இடர்நேர்வுகளைக் கையாளக்கூடிய செயற்றிறன்மிக்க திட்டங்களைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் விழிப்பு நிலையில் இருக்க வேண்டியதும் மிக முக்கியமானவையாகும்.

**கூட்டிணைக்கப்பட்ட ஆளுகையின் குறைபாடுகள்:** கூட்டிணைக்கப்பட்ட ஆளுகை நடைமுறைகளில் பல குறைபாடுகள் காணப்படுவது வெளிப்படையாக இருக்கிறது.

பெருந்தொகைகளைப் பிணையப்படுத்தப்பட்ட கடன் சொத்துப்பட்டியலாகப் பேணுதல் தொடர்பான தந்திரோபாயத் தீர்மானமெடுத்தல், பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் போன்ற பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்புக்கள் பல தருணங்களில் தவறவிடப்படுகின்றன. மேலும், இடர்நேர்வை ஆய்வு செய்தல் மற்றும் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் போன்றவற்றிற்கு சபையால் பயன்படுத்தப்படக்கூடிய அழுத்தச் சோதனை மற்றும் சூழ்நிலைப் பகுப்பாய்வு போன்ற முகாமைத்துவக் கருவிகள் பல நிறுவனங்களுக்கு தொடர்பற்றவையாகவே இருக்கின்றன. அதேநேரம், அழுத்தச் சூழல் எதிர்வுகூறல் முடிவுகளை விருத்தி செய்வதற்கு மற்றும் மீளாய்வு செய்வதற்கு சிரேஷ்ட மற்றும் வியாபார முகாமைத்துவங்களை இணங்க வைப்பது பல நிறுவனங்களுக்கு கடினமானவையாகவே உள்ளன.

மேலும், கொடுகடன் தரமிடுதல் முகவர்களின் பணியின் தரமும் நடப்பு நெருக்கடியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சபைகள் தரமிடல் முகவர்களால் வழங்கப்பட்ட தரப்படுத்தல்களை மதிப்பிடத் தவறிவிட்டுள்ளதோடு இடர்நேர்வு மதிப்பிடலை ஊக்குவிக்கவும் தவறிவிட்டன. ஊதியம் ஊக்குவிப்புக்களுக்கு பொருத்தப்பாடுடைய கொள்கைகளின்மையால், கீழ் மட்டத்தில் வழங்கப்படும் உயர் ஊழியம், ஊக்குவிப்புக்களால் ஏற்படும் நட்டங்களும், இடர்நேர்வுகளும் இறுதியில் வங்கிகளையும், அவற்றின் பங்குதாரர்களையும் சென்றடைவதனை இந்த நெருக்கடி வெளிப்படுத்தியுள்ளது.

மேற்குறித்த தகவல்கள் இடர்நேர் முகாமைத்துவத்திலும், ஆளுகை நடைமுறைகளிலுமுள்ள பல குறைபாடுகளை உறுதிப்படுகின்றன. இதற்கமைவாக, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட ஆளுகை என்பனவற்றை உறுதிப்படுத்தும் முகமாக, அதியுச்ச, அதி இழிவு நிலைச் சூழ்நிலைகளில் கடுமையான அழுத்தச் சோதனைகளுடன் கூடிய நிதியியல் மாதிரிகளை பாவித்து புதிய சாதனங்களின் மீதான இடர்நேர்வினை உள்ளகரீதியாக மதிப்பிடுவதனை ஆரம்பிப்பதும், நிறுவனரீதியான முற்றுமுழுதான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் கூடிய இடர்நேர்வு மதிப்பிடலும் முக்கியமானவையாகும். நிதிச் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் சுழற்சியுறும் நிபந்தனைகளைக் கவனத்திற் கொண்டு, சபை மட்டத்தில், இடர்நேர்வுகள் முறையாக முகாமைப்படுத்தப்படுவதும் தொடர்ச்சியாக மீள்மதிப்பிடப்படுவதும் அவசியமானதாகும்.